உ

சிவமயம்.

திருவண்ணாமலை க்ஷேத்திரத்தின்கண்

நடந்தேறிவரும் ஐதீகமாகிய

ஸ்ரீ சிவபிரான்

# திருவூடல் வைபவ

## சரித்திரம்.

இஃது

திருவண்ணாமலை

பொம்மலாட்டத்தில் நற்கியாதிவாய்ந்த

ம-ள-ள-ஸ்ரீ ஸ்ரீமான்

ஸி-கோவிந்தசாமிகவிராயர் அவர்கள்

குமாரராகிய

ம-ள-ள-ஸ்ரீ கோ-வெங்கிட்டசாமிநாயுடவர்களால்

இயற்றப்பட்டு,

ம-ள-ள-ஸ்ரீ ஸ்ரீமான் மஹாவித்வான்

வேலூர்-நாராயணசாமிபிள்ளை அவர்களால்

ஆங்காங்கு புதியனசேர்த்தும் திருத்தியும்

பார்வையிடப்பட்டு,

திருவண்ணாமலை ஜவுளிவியாபாரம்

ம-ள-ள-ஸ்ரீ,

-முருகேசபிள்ளை அவர்களபீஷ்டத்தின்படி

மேற்படியார் பொருளுதவியைக்கொண்டு

வசந்தராயன் பாளையம்

குப்புசாமிபிள்ளை அவர்கள் நன்முயற்சியால்

சென்னை ஸ்ரீ சுப்பிரமணியவிலாசம் பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது.

ன் விலை] 1927. [அணா 8.

சகல உரிமையுடனும் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது.

# முகவுரை.

தராதலம் படைத்த பிரமயனளித்த சராசரத்தின்
கண்ணே விளங்கி யோங்கும் சகல வேதபுராணங்களுந்
தெளிந்து,தேவவேதப் பிராமணோத்தமர்களையும்,கௌத்
மங்க ளாராய்ந்து சந்தேகமறத் தெளிவுபட்ட வித்வாம்
ஸர்களாகிய பூவலர், பாவலர், நாவலராகிய மூதோர்களை
யும் மஹா கனதன புண்ணிய வான்களையும் கண்ணியமு
டன் வந்தனம் செய்து, விண்ணப்பித்துக்கொள்வதாவது,
இப்பூவுலகின் கண்ணே, அழலென்னும் சோதிமயமாகி
யும், சிவனடியார்களாகிய பக்திமான்களும் கொண்டாடி
ஸ்தௌத்தியம்செய்ய, முப்பத்துமுக்கோடி தேவர்களும்
நாற்பத்தெண்ணாயிரம்மஹரிஷிகுழாம்களும்,அஷ்டதிசை
பாலகரும், கின்னர கிம்புருடரும், கருடரும், கருடகாந்
தர்வரும், சித்த வித்தியாதரரும், ஜனகஜஞாதி வியாக்ரம
நந்தி பிருங்கியரும் குழாமிற்கும், மாலயனும் அடிமுடி
காணாது, மகிழ்வுதரும்படியானதும், பிருதிவி, அப்பு,
தேயு, வாயு, ஆகாயமென்னும் பஞ்சஸ்தலங்களிலும்
மஹாமேன்மை பெற்றதும் முக்கியமான ஸ்தலமாகிய
திருவண்ணாமலை க்ஷேத்திரத்திலும், இன்னுமிருக்கப்பட்ட
பற்பல சிவஸ்தலங்களிலும், உத்தராயண சங்கராந்தி என்
னும் புண்ணியகால தினத்தன்று, சரிகை கிரிகை யோக
மாகமங்களாக நெடுங்காலமாய் நடந்தேறிவரும்,சாக்ஷாத்
சிவபிரானிட திருவூடலுற்சவ வைபவத்தின் சரித்திரம்
இன்னவிதமென்றும், இன்ன புராணத்திற்றான் கூறப்
பட்டதென்றும், தெரிந்தவர்களுக்கே தெரியுமேயன்றி,
மற்றவர்கட்கு புலப்படாதாதலின், அத்தகைய மேம்பா
டுள்ள வைபவத்தை, சில சுருதிகளாலும், ஸ்மிருதிகளா
லும், வேதவிற்பன விப்ரர்களாலும், வித்வான்களாலும்,

சொல்லக்கேட்டறிந்தவளவில், யாவரும் எளிதிற் கண்டறியும்பொருட்டு, தெள்ளிய நடையில் தமிழில் வசனகாவியமாயிச்சரித்திரத்தை சுருக்கமாகக் கூறுகிறேன் ஆதலின் இவற்றுள்,

"குற்றம் விசேடம் குறைந்தே யிருக்கினும்
கற்றவ ரன்புடன் களைந்து கொள்வர்"

என்பனபோல், ஏதேனும் குற்றங்களிருந்தாலும், இது சிவபிரானுடைய திருவிளையாடல்களி லொன்றாகிய திருவூடலாகினதாலும், சிவனுடைய திருநாமங்கள் அமைந்திருப்பதாலும், இதனை அம்ஸபக்ஷியானது பாலையும் நீரையும் எப்படி பிரித்து,பாலை மட்டும் உட்கொள்ளுமோ அதுபோலவும் வண்டருந்துந் தாமரைபோலவும் சகலரும் ஏற்றுக்கொள்வீரென்று பிரார்த்தித்துக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

கோ-வெங்கிடசாமி நாயுடு.



சுந்திரமூர்த்தி



சிவபிரான்.



உமாதேவி



நாரதர்.

# சிறப்புப்பாயிரம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சீர்கொண்ட மாலயன் தேடியறியாமஹா
திருவருணை நகரில் வாழ்வோன் [ணம்
சிவகோத்ரம் கங்கைகுலம் துதிக்கும் வேளாளரி
தேவனார்க் கினியதொண்டன்
வார்கொண்ட கனதன சதாசிவப்பிள்ளையவர்
மனைவி அம் மணியம்மையின்
வரதவப் புத்திரன் ஜவுளிகடைவர்த்தகன்
மாமன்னர்க் கனுகூலனும்
பேர்கொண்ட கண்ணியன் தனதான்யன்பாக்கியன்
பெரியோர்க்கு மினியோன்வெகு
பேர்கட்கு முபகாரன் தயாளகுண சம்பன்னன்
பிரபுவான தர்மசீலன்
பார்கொண்ட புகழுற்ற முருகேசப் பிள்ளையவர்
பரிவுடனே வேண்டுகோள்மேல்
பலபேர்கள் கொண்டாடுந் திருவூடற்காதையை
பாடியரங் கேற்றினனரே.

உ

சிவமயம்.

# திருவண்ணாமலை மகிமை.

## விநாயகர் காப்பு.

### வெண்பா.

அம்புயன்மால்வானோ னுதினமுமேத் தருணை
யம்பதிநாதன்ருட்கணிபெறவே—பம்புமெழிற்
றண்டமிழ்த்தார்சூட்டத்தகுதுணையாம்யானைதிறை
கொண்டமிடலைங்கர னங்கோ.

### தேவாரம்.

உண்ணாமுலை யுமையாளொடு முடனாகிய வொருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன வருவித்திரள் மழலைம்முழ வதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ண மறுமே.

### அண்ணாமலையார் துதி.

ஒருமானைக் கரத்தினில்வைத் தொருமானைச்
சிரத்தினில்வைத் துலக மேழுந்
தருமானை யிடத்தினில்வைத் தருள்வானைப்
பவளநெடுஞ் சயிலம் போல
வருமானை முகத்தானை யளித்தானைப்
பெருமானை மகிழ வேறும்
பெருமானை யருணகிரிப் பெம்மானை
யடிபணிந்து பிறவி தீர்ப்பாம்.

## ஸ்தல மகிமை.

இரவிகள் சந்திரர் வயிரவர் விஞ்சைய
ரிமையவ ரெண்டிசையோ
ருரக ரருந்தவர் முனிவரர் பங்கய
ருவண நெடுங்கொடியோர்
பரவி நெருக்கவி னுலக நிறைந்தவர்
பணியு மிடங்கிடையா
தரகர வென்பது கடலின் முழங்கிய
தருணை வளம்பதியே.

## தீர்த்த மகிமை.

இந்திரன் றீர்த்தமோ டக்கினித் தீர்த்தமா
மெமதீர்த்த நிருதிதீர்த்த
மியல் வருண தீர்த்தமுயர் வாயுதீர்த்தம் வடக்
கெழிலாங் குபேரதீர்த்தம்
நந்தலறு மீசானி யன்றீர்த்த மிறவியுண்
ணாமுலைதீர்த்த மரிய
நரசிங்க தீர்த்தமா ணிக்கவாசக தீர்த்த
நாடரும் பிரமதீர்த்த
முந்துசிவ தீர்த்தமரி மைந்துசக்கர தீர்த்த
மெய்ப்பெருங் கட்கதீர்த்த
மூன்றூற்றின் மேலுமறு பதுதீர்த்த மேவுதல
மொழியின் னருணாசலம்
ஐந்து பூதத்தலத் தொருதல மிதென்பர்கா
ணருன்பெறு வலைந்தராயர்
அண்ணாவினிற் றுதிசெ யுண்ணாமுலைக் குரிய
வண்ணாமலைத் தேவனே,

### கிர்த்திகாதீப மகிமை.

கார்த்திகைக்குக் கார்த்திகைநா ளொருசோதி
மலைநுனியிற் காட்டா நிற்போம்
வாய்த்தவந்தச் சுடர்காணிற் பசிபிணி
யில்லாதுலகில் மன்னி வாழ்வார்
பார்த்திவர்க்கு மருந்தவர்க்கு மிடையூறு
தவிர்துமிது பணிந்தோர் கண்டோர்
கோத்திரத்தி லிருபத்தோர் தலைமுறைக்கு
முத்திவரங் கொடுப்போ மென்றார்.

---

உ

சிவமயம்.

## திருவண்ணாமலைத்

# தீபதரிசனச் சுருக்கம்.

---

ஸ்ரீ அகண்டாகார சச்சிதானந்த பரிபூரண சுயம்பிரகாசப் பொருளாய் விளங்கும் ஸ்ரீ கைலாசபதியானவர் இந்த உலகின்கண் ஆங்காங்கு வசிக்கும் ஆத்மகோடிகளொவ்வொன்று முய்யும்பொருட்டுத் திருவருட்கண் சுரந்து திருக்கோயில் கொண்டிருக்கின்ற பல ஸ்தலங்களுளொன்றாகியும், ஆளுடைய பிள்ளையாராகிய (திருஞானசம்பந்த சுவாமிகளாலும்) ஆளுடைய வாசுகளாகிய (திருநாவுக்கரசு சுவாமிகளாலும்) பதிகம்பெற்றுள்ளதும், ஆளுடைய அடிகளாகிய (மாணிக்கவாசக சுவாமிகளால் திருவெம்பாவை, திருவம்மானை) பாடியருளப்பெற்றதும், (பட்டினத்துச்சுவாமிகளது வீரியத்தாற் றிருவவதாரஞ் செய்தருளிய (அருணகிரியார்) திருப்பரங்குன்றின்கண்

ணே எழுந்தருளி யிருப்பவரும், திருச்செந்தூரின்கண்
ணே எழுந்தருளி யிருப்பவரும், திருவாவினன்குடியின்
கண்ணே எழுந்தருளி யிருப்பவரும், திருவேரகத்தின்
கண்ணே எழுந்தருளியிருப்பவரும், இதுவன்றி மலைக
டோறும் விளையாடுதல் நிலைபெற்ற குணத்தையுடையவரு
மாகிய முருகப்பிரானிடத்து அன்புடையோராய் (திருப்
புகழ்) முதலிய அநேக பிரபந்தங்கள் பாடியருளப்பெற்ற
தும், சோழதேச முதலான தேசங்களில் இன்ன இன்ன
நாட்டில் இத்தனை இத்தனை ஸ்தலங்களென்று முன்னோரா
கிய அறிவுடையோர்களேற்படுத்தின கிரமப்படியே மக
தநாடு அல்லது நடுநாட்டுக் குள்ளிருக்கும் ஸ்தலங்களுள்
விசேஷமாகிய திருவண்ணாமலையென்னுந் திவ்விய க்ஷேத்
திரமானது கிரேதாயுகத்தில் அக்கினி மலையாகவும், திரே
தாயுகத்தில் சுவர்ணமலையாகவும், துவாபரயுகத்தில் தாம்
பரமலையாகவும், கலியுகத்தில் கன்மலையாகவும், திருவுருக்
கொண்டு அருணாசலம், சோணாசலம், கௌரிநகரம், தேச
நகரம், முத்திநகரம், ஞானநகரம், சிவலோகம் என்று
இவ்வாறு பலதிருநாமங்களுடையதும், ஆன்மகோடிகளை
இடைவிடாது இரக்ஷிக்குஞ் சிவபெருமானே கிரிரூபமா
யிருப்பதும் பார்வதி தேவியார் திருவவதாரமானதும்,
திருக்கண்புதைத்ததும், மகிடாசுர மர்த்தனஞ் செய்த
தும், இடப்பாகம் பெற்றதும், சந்திரவம்சத்தனாகிய வச்
சிராங்கதபாண்டியன் பேறுபெற்றதும், கலாதரன், காந்தி
சாலி தவஞ்செய்து பேறுபெற்றதும், அக்கினிவம்சத்த
னாகிய வல்லாளராஜன் புத்திரசோகந்தீர்த்ததும், இந்திர
தீர்த்தமுதலாகிய அநேக தீர்த்தங்களுள்ளதும், அன்பர்
கள் திருமலை வலம்புரியப்பெற்றதும், ஆதித்தனுக்கு தரி
சனங்கொடுத்ததும், சூரியவம்சத்தனாகிய பிரதத்தராஜ
னால் அநேக காணிக்கைகள் தரப்பெற்றதும், அஷ்ட

க்கள் பிரமன் முதலானவர்களுடைய பாவந்தீர்த்ததும், புளகாதிபன் பேறுபெற்றதும், நினைக்க முத்தி தரும் தலமென்பதும் ஆகமப்புராணத்திற் சொல்லப்படுகின்றன.

பரமசிவம் மலையுருவமானதற்குக் காரணம் யாதெனில்:—ஒரு கற்பத்தில் மகாவிஷ்ணுவும் பிரமதேவரும் தாம் தாம் பிரமமென்று வாதித்துப் போரிட்டதைத் தீர்க்கும்பொருட்டுச் சிவபெருமான் அழற்றூணாயவர்கள் மத்தியில் நின்று கலகத்தைத்தீர்த்து அநுக்கிரகித்து அவர்கள் வேண்டுதலினால் ஒரு சிறியமலையா யுருக்கொள, அதைக்கண்ட பிரமதேவனும் மகாவிஷ்ணுவும் சுவாமியைநோக்கி இம்மலையினுச்சியில் ஒருஜோதி எங்களுக் தெரியும்படிக்குக் கிருபைசெய்யவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அதற்குச் சிவபெருமானானவர் வாரீர் பிரமவிஷ்ணுக்களே! கார்த்திகைமாதத்தில்வரும் கார்த்திகை நக்ஷத்திரத்தில் இம்மலையினுச்சியின்கண் ஒருஜோதி காண்பிப்போம்; அச்சோதியைத் தரிசித்தவர்கள் மிடியும் வியாதியும் நீங்கி இஷ்டகாமியங்களைப்பெற்று வாழ்வார்கள். இவையல்லாமல் அரசர்களும் தவசிகளும் தரிசிப்பார்களாகில் இடையூறின்றி வாழ்வார்கள். அன்றியும் இதை தொழுதவர்களுக்கும் தரிசித்தவர்களுக்கும் அவர் மட்டில்லாமல் அவர்களுடைய கோத்திரத்தில் இருபத்தொரு தலைமுறைக்கும் மோக்ஷங்கொடுப்போம் என்று திருவாய் மலர்ந்தருளினார்.

மேலும் இம்மலை ஜனன மரணமென்னும் வியாதிக்கு மருந்துபோல் இருப்பதினால் மலைமருந்தென்றும், அழல் வண்ணமாயிருப்பதினால் அருணாசலமென்றும் பெயருளது. இதை ஒருதரஞ் சொன்னவர்களுக்கு பஞ்சாட்சரத்தை மூன்றுகோடிதரம் உச்சரித்த பலன் வருமென்று அருளிச்செய்தார்.

அதற்குப் பிரமதேவனும் மகாவிஷ்ணுவும் ஆநந்தமடைந்து சிவபெருமானைப் பார்த்துத் தேவரீர் இவ்வாறு மலைக்கோலமாயிருந்தால் அடியோங்கள் எவ்வாறு பூசை செய்யக்கூடும்! ஆகையால் இந்த மலையின்கீழ் ஒரு சிவலிங்கமூர்த்தியா யெழுந்தருள வேண்டுமென்று வேண்டிக் கொண்டார்கள். சிவபெருமான் அப்படியே சிவலிங்க மூர்த்தமாகின்றோமென்று அந்த மலையினுள்ளே மறைய, உடனே அம்மலையினிடத்தில் சிவலிங்கம் தோன்றியது. அதைக்கண்டு பரமானந்தமாய் மயனென்னுந் தேவதச்சனால் ஓராலயங் கட்டுவித்தார்கள். அப்போதவ்விடத்தில் வளப்பம் பொருந்திய நகரமும் மூந்நூறு தீர்த்தங்களும் உண்டாயின அல்லாமலும் ஆகாயகங்கை கிணறுகளாகவும், கற்பக விருக்ஷங்கள் மரங்களாகவும் வந்திருந்தன. தேவர்களும் இருஷிகளும் மனிதர்களாகவந்து பிறந்தார்கள். அரம்பாஸ்திரீகள் தாசிகளாகப்பிறந்தார்கள். ஆகையால் எல்லா ஸ்தலங்களும் உடலென்றும், அருணாசல ஸ்தலம் முகமென்றும், அதில் சிவபெருமான் கண்ணென்றும், இத்தலத்தின் பெருமையை அளவிட்டுச் சொல்லுதற் கருமையென்றும், நமது பெருமானாகிய நந்திகேசுரர் மார்க்கண்டேய முனிவருக்கு அநுக்கிரகஞ்செய்தார் அக்காலத்தில் சிவபெருமான் திருவாய்மலர்ந் தருளிய பிரகாரம் அம்மலையின்மேல் கார்த்திகைமாதத்தில் வருகின்ற கார்த்திகை நக்ஷத்திரத்தில் ஜோதி தரிசனமாகிக்கொண்டுவந்த பாவனையாக இப்போதும் அந்தமலையின்மேல் தீபதரிசனமாகின்றமையால், அத்தினத்தில் இந்திரதீர்த்த முதலாகிய தீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்து கிரியை வலம்வந்து, தங்கடங்கள் சக்திக்குத் தக்கபடி அதிபக்தியுடன் தர்மங்களையுஞ்செய்து, அருணாசலேசுரரைத் தொழுது தீபதரிசனமுஞ்செய்து உள்ளன்போடு துதிப்பவர்கள் அளவில்லாச் சம்பத்தையும் மோக்ஷத்தையு மடைவார்கள்.

இதன்றியும், ஆதிவாரத்தில் திரிகரண சுத்தியுடன் தீர்த்தமாடி அந்தமலையை விஷய சிந்தனையில்லாமல் நிர்மலமாய் வலஞ்செய்து தம்மாலியன்றளவில் தர்மங்கள் செய்பவர்கள் சூரியமண்டலத்தைப்பிளந்து சிவபதத்தைத் தமக்கு இடமாகச் சேர்த்துக்கொள்ளுவார்கள். சோமவாரத்தில் அருணோதயத்திற்கு முன் தீர்த்தமாடி ஈரவஸ்திரத்துடன் வலம் வந்தவர்கள் தேவேந்திரனைப்போல் ஏழுலகத்தையும் ஆண்டு சிவசாரூப்பியத்தை அடைவார்கள். மங்களவாரத்தில் தீர்த்தமாடி யாருடனும் வாய்பேசாமல் சித்தத்தைச் சிவன்பாலிருத்தி வலஞ்செய்பவர்கள் தங்கள் வறுமையும் சங்கிலித்தொடர்போல் வருகின்ற எழுபிறப்பையும் நீங்குவார்கள். புதவாரத்தில் சிவபெருமானைப் பிரதட்சணஞ் செய்வோர்கள் நான்குவேதங்களையும், ஆறு சாஸ்திரங்களையும், அறுபத்துநான்கு கலைகளையும் தெரிந்து முத்திக்கு நெருங்கினவராய்த் தேவர்களாவார்கள். குருவாரத்தில் வலம் வந்தவர்கள் திரிமூர்த்திகளும் புகழத் தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் மேலாவார்கள். சுக்கிரவாரத்தில் வலஞ்செய்தவர்கள் விஷ்ணுபதத்திற் சேர்வார்கள். சனிவாரவுதயத்தில் வலம் வந்தவர்களுக்கு நவக்கிரகங்களும் பதினோராமிடத்தின் நற்பலனைக் கொடுக்கும். சிவராத்திரியிலும் வருஷப்பிறப்பிலும், ஐப்பசி முதலாகிய மூன்றுமாதங்களிலும் வலம்வந்தவர்களுக்கு மேற்சொன்ன பலன்களிலும் அதிகமான பலன் சித்திக்கும்.

உருவந் தெரியாமல் சித்தரும், தேவரும், இத்திருமலையை உள்ளன்புடன் வலஞ்செய்வதால் மற்றவர்கள் கிரிப்பிரதட்சணஞ் செய்யும்போது வாகனத்தின்மேலேறிக் கொண்டு வராமலும், போர்வைபோர்த்துக் கொள்ளாம

லும்; கொடை பிடித்துக் கொள்ளாமலும், பாதரட்சை தொடுத்துக்கொள்ளாமலும், தாம்பூலந்தரியாமலும், வேறொரு சிந்தனையில்லாமலும், மனத்தினால் வந்தனஞ்செய்து அருணாசலேசுரரையே சிந்தித்துக்கொண்டி யிருந்த பயபக்தியுள்ளவர்களா யிருத்தல் வேண்டுமென்றும், அந்நாளில் விரதமிருந்து சிவதரிசனஞ்செய்து ஆகாயத்திற் போகின்றவர்களுள் அணுக்கரல்லாதவர்கள் அவ்விடத்திலிருக்கும் ஆதி சைவாசாரியர்களைக் கொண்டு வில்வார்ச்சனை முதலியவைகளைச் செய்வித்தால் தங்கள் கையினாற் செய்தபேறு கிடைக்குமென்று பிரமதேவர் ஜனகரிஷிக்குச் சொல்லியிருக்கிறார்.

---

உ

சர்வாலய

# தீபதரிசன சரித்திரச் சுருக்கம்.

ஸ்ரீ கைலாயத்தில் உலகமாதாவாகிய பார்வதியாரோடு சிவபெருமான் எழுந்தருளி யிருக்கும்போது, அவ்விடத்தில் ஏற்றியிருந்த நெய்த்தீபங்களில் ஒருதீபம் அணையுந்தருணத்தில் ஒரெலியானது அதிலிருந்த நெய்யை உண்ணப்போனபோது, அவ்வெலியின் முகமானது அணைந்துபோகிற வர்த்தியைத் அண்டியமாத்திரத்தில் பிரகாசம் அதிகரித்ததினால் சிவபெருமானவர் கிருபைகூர்ந்து அவ்வெலிக்கு மானிடச்சரீரமும், அரசும், மற்றப்பேறுந் தந்து பூமியில் பிறக்கும்படி கட்டளையிட்டனர். அவ்வெலியானது மாவலிச் சக்கிரவர்த்தியாய்ப் பிறந்து சகல ஐசுவரியத்தையும் அனுபவித்திருக்குங் காலத்தில், ஒருநாள் சிவதரிசனத்துக்குப் போக எத்தனித்துத் தன் இராஜசின்னமுதலிய சகல ஆடம்பரவிபவத்துடன் சிவாலயத்திற்குட் பிரவேசித்துப் பிரதட்சணம் வருகையில், அவ்விடத்தில் ஏற்றியிருந்த தீபநெய்யின் ஓர் துளி இந்தச் சக்கிரவர்த்தியின் தேகத்தில் ஒழுகினவுடன் அந்தச் சக்கி

ரவர்த்தியின் தேசமுழுமையும் இரணங்கண்டு வெகுகாலம் வருத்தப்பட்டுக்கொண்டிருக்கும்போது, ஒருநாள் சிவபெருமான் கிருபைகூர்ந்து சக்கிரவர்த்தியே! நீ மிகவும் அகங்காரியாகையால் நம்மாலுனக்கித் துன்பமுண்டாயிற்று. நீ இன்றுமுதல் உணர்ந்து நெய்முதலிய பொருள்களால் ஆலயங்களுக்குத் தீபமேற்றுவைப்பாயானல் உனக்கு இந்த இரணந்தீர்ந்து சாயுச்சியபதவி யடைவையென்று அசரீரியாய்த் திருவுளம் பற்றியதைக் கேள்வியுற்ற அச்சக்கிரவர்த்தியானவர் ஆநந்தமடைந்து, அந்தக் கட்டளையின்படியே அன்றுமுதல் சிவாலயங்களிலும் மற்ற இருள்சூழ்ந்த ஆரண்யங்களிலும் தீபம் ஏற்றிக்கொண்டு வருங்காலங்களில், ஒருநாள் ஸ்ரீ கைலாசபதியாகிய சிவபெருமானனவர் திருவுளமிரங்கி கார்த்திகைமாதம் பூர்வபக்ஷம் கார்த்திகைநக்ஷத்திரத்தில் தேஜோமயமாயெழுந்தருளி அச்சக்கிரவர்த்திக்குச் சாயுச்சியபதவி யளித்தருளினர்.

அக்காலத்தில் சிவதரிசனத்துக்கு வந்திருந்த தேவர்களெல்லோரும் அச்சோதியைக்கண்டு பயந்து துதிசெய்து, சுவாமியினுடைய உஷ்ணந் தணியும்பொருட்டுப் பொரியவல் நிவேதனம் செய்தார்கள். இவ்வாறு கைலாசபதியான சிவபெருமான் மாபலிச்சக்கிரவர்த்திக்குச் சோதிசொரூபமாய் தரிசனங்கொடுத்த காரணமாக இன்றும் சிவாலயங்கடோறும் கார்த்திகை மாதம் பூர்வபக்ஷம் கார்த்திகை நக்ஷத்திரத்தில் தீபம்வைக்கவும் * சுஷ்கப்பனை கட்டவும் ஆயிற்று.

கார்த்திகை நக்ஷத்திரத்துக்கு முன்னான் பரணி நக்ஷத்திரஞ் சாயங்காலம் அதிவாசதீபத்தில் அக்கினிகாரிய முதலியவைகளின் மூலமாய் மகாலிங்க மூர்த்தியை ஆவாகனஞ்செய்து அந்தத்தீபத்தை சுவாமி சந்நிதானத்திற்றனே பூசித்து வைக்கவேண்டும்.

மறுநாள் சாயங்காலம் அர்த்த சூரியமண்டலத்தில் தென்னை பனை, கமுகு, வாழை, மூங்கில் என்னும் இந்தமரங்களில் ஓர்வித மரத்தை ஆலயத்திற்கும் இந்திரதிற்கும் மத்திய ஸ்தானமாகிய பிரமஸ்தானத்தில் நாட்டவேண்டும்; இந்த மரத்துக்குத் தீபதண்டம் என்று பெயராம்.

---

* சுஷ்கப்பனை என்பது சொக்கப்பானை என்று வழங்கிவருகிறது.

## தண்டவுன்னதப் பிரமாணம்.

சுவாமி கர்ப்பக்கிரகத்து விமானம் எவ்வளவு உயரமோ அவ்வளவு உயரமாவது, அந்தவிமானத்தின் கழுத்தினளவாவது இருக்கவேண்டும்; இவ்விதமான தீபதண்டத்துடன் உலர்ந்த தென்னோலையாவது பனையோலையாவது பாக்கோலையாவது வாழைச்சருகாவது தாழஞ்சருகாவது அசோகச்சருகாவது சேர்த்து விமானம்போல் கட்டவேண்டும்.

மேற்சொன்ன பரணிநக்ஷத்திர மறுநாளாகிய கார்த்திகை நட்சத்திரத்தில் பஞ்சமூர்த்த சமேதராய்ச் சோமாஸ்கந்த மூர்த்தியை உற்சவாலங்காரத்துடன் எழுந்தருளப்பண்ணி ஷை தீபம் சுவாமிக்கு முன்னே வரும்படியாகச்செய்து தீபதண்டத்தைச் சமஸ்காரப்படுத்திக்கொண்டு அத்தீபத்தை அத்தண்டத்தின்மேல் வைத்துச் சருகுகளைக் கொளுத்திவிட்டு அந்தச் சருகுகள் எரிந்த பின்பு மேற்படி தண்டத்தைச் சேதித்து விடவேண்டும் அச்சோதியைச் சிவபெருமானாகப் பாவனை செய்து தரிசிப்பவர்களுக்கு இம்மையில் செல்வமும், மறுமையில் மோட்சமுங் கிடைக்குமென்று ஆகமங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன.

## தண்டவிருட்சம்.

உத்தமம் தென்னமரம், மத்திமம் பனைமரம், அதமம் பாக்குமரம், அதமாதமம் வாழையும் மூங்கிலுமாம்

## தண்ட உன்னதப் பிரமாணம்,

உத்தமம் விமானமுயர்வு, மத்திமம் அதன் கழுத்தளவு.

மலையைச்சேர்ந்த ஸ்தலங்களில் நட்சத்திரம் பிரதானமாகவும், சமுத்திரத்தைச்சேர்ந்த ஸ்தலங்களில் பௌர்ணமிதிதி பிரதானமாகவும் தீபம்வைக்கவேண்டியதென்று ஆகமங்களில் சொல்லுகின்றன.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருவண்ணாமலை
# ஸ்ரீ சிவபிரான்
# திருவூடல் வைபவ
# சரித்திரம்.

---

## விநாயகர் காப்பு.

வெண்பா.

ஆதி அண்ணாமலையன் அன்னையுண்ணாமுலையாள்
வீதிதனிற்றிருவூடல் விளைவித்த—காதைசொல
அப்பார்சடைநாதன் அம்பிகையாளீன்றெடுத்த
கற்பகப்பிள்ளையாற்றான் காப்பு.

## பரமசிவம் துதி.

சந்தக் கலிவிருத்தம்.

பழவினைதவிர்த்துநற் பதவிநல்கிடும்
மழைவிதுயிதழிகள் மருவுசூடிடும்
அழகியசெஞ்சடை அருணைநாதனின்
கழலிணைப்போற்றியே கருதியேத்துவாம்.

## உண்ணாமுலையம்மன் துதி.

விருத்தம்.

பருவதன் றவத்தினாலே பாவையாய்ப் பாரிற்றோன்றி
தருமமுப் பத்திரெண்டு தந்துமே காசிதன்னில்
அருந்தவஞ்செய்து ஈசன் அர்த்தபாகத்தைப்பெற்று
மரகத வொளியாய்நின்ற வல்லியைப் போற்றுவாமால்.

## சுப்பிரமணியர் துதி.

### விருத்தம்.

சரவண வாவிலாறு சண்முகத்துடனே தோன்றி
சுரர்தள மாமஞ்சி துஷ்டஅவு ணரையும்வாட்டி
புரவலன் சேயம்மானின் புத்ரியை மணமும்செய்து
அரவுணு மஞ்ஞையேறும் அழகுவேலவனே போற்றி.

## சரஸ்வதி துதி.

### சந்த விருத்தம்.

ஆரணப்பொரு ளாதிசாரதா
பாரதியிசை பன்னும்யாழ்கையில்
தேறியக்கல்வி தேன்கருணைக்கதை
வாரிபோலருள் வாணியைவாழ்த்துவாம்.

## அவையடக்கம்.

### அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

மின்னு கவிஞர்கள் மறையவ ருரியோர்
மலரடியைத் தொழுது
நன்மொழி வினவிய புண்ணிய சிவகதை
நவின்றட அடியவனும்
என்மொழி வருதி பொறுத்தருள் வீரென
என்று மனத்திடவார்
முன்னிலை க்ரந்த சொல்லினை தமிழால்
மொழிகுவேன் வசனமதாய்.

## ஆக்கியோன்.

### ஆசிரிய விருத்தம்.

தலங்கொண்ட புகழுற்ற அருணாசலத்தினிட
சருக்கங்கள் பதின்மூன்றையும்
சாவித்திரிக்காதை மார்க்கண்டேயர் சரிதை
ஜானகிக் கல்யாணமும்

நலங்கொண்டசனிவார விரதகற் காதையும்
நாசகேதுப் புராணம்
நாடகம்பாடியே பதுமை கூற்றுகளாக
நாடெங்கும் கொண்டாடினேன்
பலங்கொண்ட செய்யாற்று திருவிழாகீர்த்தியும்
பற்பல ப்ரபுக்கள்மேல்
பாமாலைபாடியே வெகுமதிகள் பெற்றவன்
பார்புகழ் அருணைவாழ்வோன்
கலைகொண்ட கோவிந்த கவிராயபுத்திரன்
கௌரிகுல வெங்கடேசன்
கருணைதரும் திருவூடல் சரித்திரம் தமிழ்வசன
காவிய மியற்றினன்மால்.

## நூற்பயன்.

ஆதியாய்நின்ற பராபரப்பொருளு
மனைவருங் கண்டுமேதெளிய
வேதசாஸ்திரங்கள் ஞானதத்துவங்கள்
விளம்பிய பண்டுவாறில்
சோதியாதித்தன் புராணத்திற்சிறந்த
சுருதியிற்சொலும் காதையை
வேதவேதியரும் புவியுளோரறிய
விளக்கமா யுரைப்பதிதுவே.

## கதைவரலாறு சுருக்கம்.

### விருத்தம்.

தனிபரன் விழியால் சனியனைப் படைத்து
தந்திடும் வரபலத்தால்
தனிபரன் றன்னையே சனியனும் பிடித்து
சஞ்சல மியற்றும்வேளை
தனிபரனுக வருகவென் றெண்ணம்
சார்ந்திடும் வேடன்தனக்கு
தனிபரனுக தரிசனந்தந்து
தரும்பதவி தரும்சரிதையே.

## கதையின் மகிமை.

விருத்தம்.

பொங்கலிடும்நாளில் பொருத்தமுடன்வாழாமற்
சங்கரனும் சங்கரியும் சச்சரவாய்த்—தங்காமல்
திருவூடலாடி தெருதனிலே வந்து
கருணைதர வற்பருக்கே காண்.

## 1-வது சருக்கம்.

## கதையின் வரலாறு.

ஸ்ரீ அண்டரண்ட சராசர, அகண்ட பரிபூரண சச்சிதானந்த நிர்மல சொரூபமாகிய ஸ்ரீமத் மஹா பராபர பிரம்மஸ்வரூபியானவர் சகல தேவர்களும், முனிவர்களாகிய ரிஷிகளும், கருடாதி காந்தர்வர்களும், மானிடர்களும் கற்றுணர்ந்து, துற்குணங்களை விடுத்து, நற்குணங்களையடுத்து, சோகதுக்கபாபங்களை யொழித்து, சுகானந்தங்களை யடைந்து, ஸாக்ஷாத்காரமாகிய ஸ்ரீ சிவபெருமான் திருவருள் பெரும்பொருட்டு, நான்குவேதங்களும், ஆறுசாஸ்திரங்களும், அறுபத்தி நான்கு கலைக்யானங்களும், தொண்ணூற்றாறு தத்துவங்களும், பதினெண் புராணங்களும், பரப்பிரமம் படைத்தருளினார். அவற்றுள் ஆதித்தபுராணத்தில் இச்சரித்திரம், கிரந்தமொழிகளாற் கூறப்பட்டிருந்ததை வேதஸ்வரூபிகளாக விப்ர பிரம்மகுல பாண்டித்யர்களால், விளக்கமாக விவரித்து எளிய நடையிற் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது:— பூர்வத்தில், அண்டரண்டபகிரண்டங்களத்தனைக்கும் முதற்பொருளாகச் சொல்லும் யாதொரு ஸாக்ஷாத் விராடபுருடரான சிவபெருமான், தனது வலதுவிழி வழியாகத் தோன்றிய

சூரியநாராயணமூர்த்திக்கு தன் வீரியப்பெருக்கால், சாயா தேவியினிடமாக கோடிசூரியப் பிரகாசம்பொருந்தியுள்ள இரண்டு ஆண்பிள்ளைகள் நல்ல சுபமுகூர்த்தத்திற் பிறந்தார்கள். அன்னவர்களுக்கு, ஆகாயவாணியால், அசரீரி வாக்கியமாக தருமனென்றும், சனியனென்றும், நாமதேயம் தரப்பட்டது. அவ்விருவர்களில், முன்பிறந்த தருமனானவன் பரமகாருண்யமூர்த்தியாகிய பரமேஸ்வரனைப் பணிந்து, அடியேனுக்கு என்ன கட்டளையிடப்போகிறீரென்று வினவ, அதற்கு சிவபெருமான், அவன்மீதன்புகூர்ந்து திருவாய்மலர்ந் தருளியதாவது,

---

## 2-வது சருக்கம்.

# தருமன் பிரதாபம்.

ஹே! தருமனே! நமது தொழிலாகிய யாதொரு சம்ஹாரத்தொழிலை யாம் உனக்குத் தந்தருளியிருக்கிறோம், நீ அதனால் யானைமுதல் எறும்பீருகவுள்ள எண்பத்திநான்குலக்ஷ ஜீவராசிகளாகிய சர்வான்மகோடி ஜீவன்களையும், சதுர்முகப் பிரமாவினு லேற்படுத்தி சிருஷ்டிக்கப்பட்ட காலநிர்ணயத்தையும், யோகஞானத்தாற் கண்டறிந்து, அவரவர் ஜீவன்களை சூக்ஷுமதிரேகத்திலடக்கி, உனதிடம் சேர்ப்பித்து, அவரவர்கள் செய்திட்ட புண்ணிய பாவங்களை ஒவ்வொன்றாக விசாரித்தறிந்து, புண்ணிய ஆத்துமாக்களுக்குரிய பதவிகளைக் கொடுத்தும், பாப ஆத்துமாக்களுக்கு ஏற்றவாறு தண்டனைகளைச்செய்தும், அததற்குரியபடி பற்பலவாராக நரகங்களைவிதித்து, செங்கோல் நெறிதவறாது, நமக்குமதிலாக நீயிருந்து அரசாள்குவாயென்று ஆக்ஞாபிக்கவும், அதற்கு தருமன், நன்கு

ணர்ந்து, மறுமுறை ஜகதீசனை வணங்கி, சுவாமி! அண்டரண்ட பகிரண்டாகாரமாகிய இந்த ஈரேழு பதினான்கு லோகங்களிலுமுள்ள ஆத்மகோடி ஜீவன்களின் காலநிர்ணயங்கண்டும், அந்தந்த ஜீவன்களும் பிரதிதினமும் புரியும்படியான பாபபுண்ணியங்களையும், யானாகிய அடியேனெவ்விதமாய் தெரிந்துகொள்ளக்கூடும்! மிகக் கஷ்டமாயிருக்குமே யென்று கேட்க, அதற்கு சிவபிரான் திருவுளம்பூரித்து, மகிழ்ந்து, தமது இடை பிங்கலை என்னும் தீக்ஷண்ய வீக்ஷண்யத்தினால் நாசியின்வழியாக வரும் சுவாசத்தினிடமாக, இரண்டு புத்திரர்களை யுண்டாக்கி, அன்னவர்களுக்குச் சித்திராபுத்திரர்களென்று பெயரமைத்து, சகல உலகிலுமுள்ள சர்வாத்மாக்களின் காலநிர்யாணங்களையும், பாபபுண்ணியங்களையும் ஞானதிருஷ்டிமார்க்கத்தினாலுணர்ந்தறிந்து, யாதொரு அம்ஸபக்ஷியானது, பாலையும் நீரையும் எப்படி வெவ்வேறாகப்பிரிக்குமோ அதுபோல பாவ புண்ணியங்களை வெவ்வேறாகப் பிரித்து, எளிதிலறிந்து சொல்வதற்காக, சித்திரனென்னும் குமாரனை புண்ணியமானோர் கணக்கைப் பார்ப்பதற்கும், புத்திரனென்னும் குமாரனை பாபத்தொழிலானோர் கணக்கைப்பார்த்து பகுத்தறிவதற்கும், ஒவ்வொருவரும் தமதம் தமது கையேட்டில், எழுத்தாணிகொண்டெழுதி, அதற்கியைந்தபடி சொர்க்காதி நரகங்களையும், எளிதிலுணர்ந்து, பிரதிதினமும் உனக்கு அறிவிக்கும்பொருட்டாகவும், மந்திரிகளைப்போலு மிருக்கும்படிக்கும், நியமித்து வரங்களும் தந்திருக்கிறோம் அதுவும்தவிர, வாத, பித்த, சிலேட்டும மென்னும் மூன்று நாடிகளையும், செங்கண்-நீலன் 1, செந்தலைப்பூதன் 2, கொள்ளித்தேளன் 3, ஆகிய மூன்று பூதப்படைகளையும் உனக்கு உபபலமாகவும்

நியமித்தோம்; மேலும் நமது கரத்தினிடமாகயிருக்கும், சூலத்தையும் தருவோம், ஒவ்வொரு ஆன்மாவையும் கட்டுவதற்காகப் பாசமாகிய வினைக்கயிற்றையும், சமர்ப்பித்தோம்; என்று திருவாய்மலர்ந்தருளி மறைந்தனர்.

இவைகளை எல்லாம், தருமன் பெற்றுக்கொண்டது மன்றியும், மறுபடியும், சர்வான்மகோடி ஜீவராசிகளையும் படைக்கவல்ல சிருஷ்டி கர்த்தாவாகிய பிரமதேவனைக்குறித்து ஸ்தௌத்யம்செய்து, ஐயனே சதுர்முகப் பிரமாவே என்மனதிலேற்பட்ட கலக்கத்தைத் தீர்க்க வேண்டுமென்று பன்முறையும் கொண்டாடி வேண்ட, ஸாக்ஷாத்கார சொரூபியாகிய, நான்முகன்தோன்றி,

---

## பிரமதேவன் பிராப்தம்.

ஹே! தருமா! யாதுபற்றி எம்மைசிந்தித்தாயெனக்கேட்க அதற்கு தருமன் திரிகரணசுத்தியாக நமஸ்காரஞ்செய்து, ஐயனே ஸாக்ஷாத் கைலேயங்கிரிவாசனை முழுமுதற் பொருளாகிய சிவபெருமான் என்னை உற்பவம் செய்து, சர்வான்மகோடி ஜீவராசிகட்கும் மிருத்யுவாக்கி, சகலமும் அளித்து, எனக்கு சித்திராபுத்திரனென்னு மிரண்டு மந்திரிகளை உற்பத்திசெய்து, அதற்கேற்ற சகலவரங்களும் தந்திருக்கின்றனர். நான் அதுவிஷயத்தில் திருப்தியடைந்தேனுயினும் எனக்கு தம்மாலாகவேண்டியது அநேக விஷயங்களிருக்கின்றன. அதனை யடையவேண்டி தங்களைக்குறித்து தவம்புரிந்தேனென, அதற்கு படைத்தற்கரிய தெய்வமாகிய சதுர்முகப்பிரமா, திவ்யானந்த மகிழ்வெய்தி, ஹே! தருமா! நீ என்னைக்கோறி பஜித்தமையால் அதுபற்றி உனக்கு, யாம் நான்குபதவிகளையும் தருவோ

ம். அதாவது, சாலோகம் 1, சாமீபம் 2, சாரூபம் 3, சாயுஜ்யம் 4, என்று சொல்லப்பட்ட நான்குவிதமான பதவிகளாகிய நான்கு சுவர்க்க வீடுகளையும், எரி, புகை, விஷம்; மிருகம், பட்சி, துர்க்கந்தம், மலம், என்னப்பட்ட எழுவகைத்தோற்றமாகிய எழுவித நரகங்களையும் அமைத்துத் தந்தோம். மேலும் தக்ஷணபாகத்திற், சமனாபுரியென்னும் பட்டணத்தையும் உண்டாக்கித் தந்தோம்! அந்தந்த பாவிகளைத் தண்டிக்க அதற்குறிய சகலவித ஆயுதப் படைகளையுமதந்தோம்! எனது கரத்திலிருக்கும்படியான சத்துரு சம்ஹாரமென்னும் தண்டாயுதத்தையும், எனது பிரம்மஸிம்மாதனமும், வெகுவிதமாகிய கோரா கோரமுள்ள தூதர்களாகிய காலகிங்கரப்படைகளையும்படைத்தும் தந்தோம்! எனகூறி மறைந்தனர். பிரமதேவனிடம் பற்பல வரங்களும், படைகளும், ஆயுதங்களும், படாள்களையடைந்தும் திருப்தியில்லாமல் மறுபடியும் தருமன் ஸ்ரீ வைகுண்ட நிகேதனனாகிய ஸாக்ஷாத் ஸ்ரீமந்நாராயணமந்திரத்தை யுச்சரித்து ஜபிக்கவும், ஸ்ரீமந்நாராயணமூர்த்தி,

---

## மஹாவிஷ்ணு பிராப்தம்.

தருமன் முறைக்கிரங்கி, பிராப்தமாகி, ஹே! தருமா! நீ பரமேஸ்வரரிடமும், சதுர்முகப் பிரமனிடமும், அரிதாகிய அநேக வரங்கள் முதலானதும் பெற்றும், இன்னும் திருப்தியாகவில்லைபோலும்; நல்லது, நீ நம்மைக்குறித்து தவம்புரிந்தபடியால் உன்முறைக்கிரங்கி, திருவுளம்பற்றி வந்தோம், யாம் உனக்கு எனது முக்கியமாகிய சுதர்ஸனமென்னும், ஆக்ஞாசக்கரம்தந்தோம். அது,உனது கொலுமண்டபத்தின்கண்ணிரானின்ற, ஸிம்மாதனத்தின்மீது நீ

உட்கார்ந்து செங்கோல் புரியுங்கால் உனது சிரத்திற்கு மேல் அந்தரமாய்ச் சுழன்றுகொண்டிருக்கவும், மகமேருவை நிகர்த்த பர்வதத்தை, ஒரு உரோமத்தின் ஆயிரம் மடங்கு மெல்லியதாகிய இழையினால் கட்டுண்டு தலைக்கு நேரேதொங்கவும், நீ வீற்றிருக்கும் சிம்மாதனத்தின் கீழ் பெருகும் நதி அக்கினியாறாக ஓடச்செய்தும், அஷ்டசத்தியி லொன்றாகிய சாமளாதேவியை திருமணம் புரிவித்தும், உனக்கு செங்கோற் கடவுளென்று நாமதேயம் கொடுத்தோமே! எமது கபடநாடக மகாமாயமாகிய, ஜாலமந்திர தந்திரங்களுள்ள எமது மாய்கையிற் கிஞ்சித்தும் அளித்தோம்! இவைகள் யாவையும் நீ வைத்துக்கொண்டு சுகமாயரசாண்டிருவென்று வாழ்த்தி மறைந்தனர்.

## மயப்பிரமா பிராப்தம்.

அதன் பிறகு, தேவதச்சனாகிய, விஸ்வகுலோத்தம பிரமாவானவர் ஸ்ரீமந் நாராயணனால் கொடுக்கப்பட்ட பெரிதான இடமமைந்த நகரத்தை சீர்படுத்தி, ஏழுசுற்று கோட்டைகளை யமைத்து அந்த கோட்டைகட்கு காவலாகயிருக்க எக்கலா சக்கலா என்று இரண்டு சத்திகளையும் தந்தருளி அநேகவிதமாகிய வரங்களு மீந்து மறைந்தனர்.

பிறகு தருமன் திருமூர்த்திகளாலும் கொண்டாடப்பட்டு, தனக்கு, தருமனென்றும், மறலி என்றும், சமனென்றும், கூற்றுவனென்றும், அந்தகனென்றும், சண்டனென்றும், நமனென்றும், எமனென்றும், வைவசுதனென்றும், நகில னென்றும், தென்றிசைக்கோனென்றும், எருமையூர்தியென்றும், காலனென்றும், அரி என்றும்,

பாசத்தானென்றும், இவ்விதசோடசமென்னும் பதினாறு திருநாமங்களையும்பெற்று, மகாகீதிவந்தனை, செங்கோற்செலுத்தி, சம்ஹாரத்தொழிலைக் கைக்கொண்டு நடத்தி வந்து அந்தந்த சமயங்களில் சித்திராபுத்திராகிய மந்திரிகளின் கணக்குப்படி அந்தந்த பாவிகளுக்கு ஏற்படாநின்ற அந்தந்த நரகங்களுக் கனுப்பி தக்கபடி யரசாண்டுக் கொண்டுவந்தான்.

## 3-வது சருக்கம்.

## சனிபகவான் பிரதாபம்.

அப்பால் இரண்டாவது புத்திரனாகிய சனியனென்பவன் ஸாக்ஷாத்கார சொரூபமாகிய சிவபிரானை வணங்கி, அடியேனுக்கு என்னவிதமாகிய கட்டளை நியமிக்கின்றீரோ, அதை அருள்புரிவீரென வணங்கிக் கேட்கவே அதற்கு சிவபெருமான் மனமகிழ்ந்து ஹே! சனியனே! இந்த ஸ்வர்க்க, மத்திய, பாதாளமென்று சொல்லப்படாநின்ற மூன்று உலகங்களிலும் வசிக்காநின்ற, பிரமாதி தேவர்கள், உரகர், மானிடர்முதல் சகல உயிர்வகைகளும் எப்போதும் சுகபோகங்களும், மண், பெண், பொன் என்னும் மூன்றுவித ஆசைகளையும் அடைந்து, அந்த மதத்தினால் தானென்னு மகந்தை மேலிட்டு, நன்மார்க்கம், நல்லொழுக்கம், நற்செய்கை, நல்லிணக்கமுமின்றி, தெய்வவிஸ்வாசமும், தெய்வபூஜை கைங்கரியமும், தெய்வப்பணிகளை புரியாமலும், தெய்வகதியைப்பெறாமலும், க்யானசூன்யவந்தராகி, சொர்க்கவாசிகளாகாமற் போகிறார்கள். தவிர, சிலவகையாகிய ஜந்துக்கள், துக்கசோகங்களை அனுசரித்து, வறுமைகளினால் கஷ்டநஷ்டமடைந்து, உஜ

ஜீவிக்கும்பொருட்டு துற்செயல்களும், துற்குணங்களும்,
துர்வியாச்சியங்களும், இன்னு மநேகவிதமான பாவத்
தொழில்களாகிய கர்மங்களும், முயன்று வருவதாலும்
அவர்கள் தர்மசாஸ்திரவிதிகளையுந் துறந்து, குருபோன்ற
பெரியோர்களாகிய மூதுரையோர்களின் அரிய பெரிய
தாக போதிக்கப்பட்ட சர்வவிதமான உபதேசங்களையும்
மறந்து, அஃதைப் பெருவதற்காகிய வழியையிழந்து,
அறிந்து கொள்ளாமல், அவிவேகத்தன்மையுடையவர்
களாயாகியும் நரகாதிக்ருத்தியத்திற்கும் ஆளாகிநிற்கிறார்
கள். ஆகையால் நீ சகலவித ஆன்மாக்கள் உள்ளும் புறம்
பும் தொடர்ந்து உன்னிடமாய்கையை, அன்னியர்கள்
மீது செலுத்திநல்லோர்களை பொல்லார்களாகவும், பொல்
லாரை, நல்லோர்களாகவும், புண்ணியாத்துமாக்களைப் பா
பாத்துமாக்களாகவும், பாவியைப் புண்ணியவந்தனாகவும்,
தர்மனை அதர்மனாகவும், அதர்மனை தர்மனாகவும் தன
வந்தர்களை ஏழைகளாகவும், ஏழை எளியோர்களை தன
வந்தனாகவும், அக்கியானிக்கிக் கியான மூண்டுபடுத்தியும்,
கியானிக்கி, அக்கியான மூண்டுபடுத்தியும், ஒன்றுக்கொ
ன்று ஒவ்வாமலும் பிறகு சீர்படுத்தியும், திருத்தியும் வரு
த்தியும், அங்குமுனது மாயாதந்திர குயுக்திமாய்கை
யைசெலுத்திக்காட்டி, யோட்டி, அவற்றுள் தேறின சுத்
தமானநன்மார்க்கர்களை ஸ்வர்க்கவாசிகளாகவும், அசுத்த
துன்மார்க்கர்களை, பலவிதமாகிய நரகவாசிகளாகவும்,
செய்யும்படிக்கி, யாவத் ஜீவன்களிலும், ஐம்புலன்களிலும்,
ஒருபுலனாக நீ ஒட்டியிருக்கும்படியாகவும், அடி, நடு, முடி
என்னப்பட்ட தலை, திரேகம், பாதச்சனியென்றும் பிடித்
திருக்கவும் அதினுள், ராஜஸம், தாமஸம், ஸாத்வீகமா
கிய முக்குணங்களாகயிருக்கும்படியான வரங்களும், ஜீவன்

மாய்கைகளிற் சிஞ்சித்துகொடுத்து சத்திருலமுங்கொடுத் தருளினர்.

அதனைப் பெற்றுக்கொண்ட பிறகு சனியன் மறுபடியும் சிருஷ்டிகர்த்தாவாகிய பிரமதேவனைக்குறித்து, பஜனைசெய்ய, அன்னவர் மனமகிழ்ந்து ஆகாயத்தினிடமாக விராநின்ற சப்தமண்டலமாகிய, ஏழுமண்டலத்தில் நக்ஷத்திரமண்டலமென்று சொல்லப்பட்ட ஒருமண்டலத்தில் ஈசான்யதிசையில் ஓரிடத்தில் வசித்திருக்கும்படிக்கும் பனிரெண்டுராசிகளாகிய, மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம், சிம்மம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனமென்னும் பனிரெண்டு ராசி வீடுகளில், மகரமும், கும்பமும் என்கிற இரண்டுவீட்டையும் அவனுக்கு சுவாதினப்படுத்தி, சூரியன், சந்திரன், அங்காரகன், புதன், குரு, சுக்கிரன், இவர்களையு முடைந்தையாக சேர்ப்பித்தும், விதிப்பயனென்னும் சாரங்களாகிய சுகதுக்கங்களைத் தருகும்படியான சர்வாதிகாரத்தையும் அனுக்ரஹம்செய்தருளினர்.

அதன்பிறகு மறுபடியும் சனியனானவன் ஸ்ரீமந்நாராயண நாமத்தை உச்சரிக்க, அந்த ஸ்ரீ பகவான் பிரசந்நமாகி, தம்முடையமாய்கையிற் சிறிதுபாகமும், அவர் கரத்தில் இருக்கும் தண்டமென்னும் ஆயுதத்தையும் தந்தருளினர்.

இவ்விதமாகப் பலவரங்களையும் பெற்றுக்கொண்ட சனியனானவன், சகல ஆன்மாக்களாகிய சர்வாத்ம ஜீவகோடிகளையும் பிடித்தாட்டி, நன்மைதின்மைகளைச் சோதித்து, நீதிநெறிதவறுமல் அரசுசெலுத்தி, தேவர்களாலும், முனிவர்களாலும், கதிர்மகனென்றும், மந்தனென்றும்,

காரியென்றும், கரியவனென்றும், சௌரியென்றும், மேற்கோள் என்றும், முதுமகனென்றும், பங்குவனென்றும், நீலனென்றும், நோய்முகனென்றும், முடவனென்றும், காகவூர்திமூர்த்தியென்றும், சனியனென்றும், இவ்வாறாகிய துவாதசமென்னும் பனிரெண்டு திருநாமங்களோடு கூடி இயற்கையுற்று, தன்னுடைய மேலான அதிகாரத்தை நடத்திக்கொண்டுவரும் காலத்தில் ஓர்நாள் நடந்த விஷயமாவது:—

## 4-வது சருக்கம்.

## சிவபிரானுக்கும்சனிபகவானுக்கும் சம்பாஷணை.

ஸ்ரீமத் அகிலாண்டகோடி பிரம்மாண்டநாயக அகண்டபரிபூரண நிர்மலானந்த ஜோதிமய சச்சிதானந்த சுயம்பிரகாசப்பொருளாகிய, சிவபெருமானும் ஜகத்மாதாவான, பார்வதாதேவியாகிய உமாபரமேஸ்வரி சமேதராகக் கோடிசூரியப் பிரகாசம்பொருந்திய வெள்ளியங்கிரியான கைலாசத்தின்கண் வேடிக்கையார்த்தமாக எழுந்தருளியிருந்தார்.

அச்சமயத்தில், சனியன் பரமசிவனை சோதிக்கும் நிமித்தியார்த்தம், கைலாயத்திற்குச் சென்றான். அந்த காலம் சனித்திரயோதசி என்னும் பிரதோஷ புண்ணிய காலமாய் ஏற்பட்டிருந்தது. அப்போது பரமேஸ்வரனும பார்வதாதேவியும் தம்பதிசமேதராய் சுகானந்தவேடிக்கையாக மகிழ்வெய்திருக்கும்போது, சனியன் நேரிற்றன்று கண்ணிறுற்கண்டு தனது மனதிற்குள் ஏதோ நிட

ரென்று வகித்து, இஞ்சித்து பொறுமைகொண்டு, அதை வெளியிடாமற்படிக்கு அந்த சாக்ஷாத் பரமசிவனையும், பார்வதாதேவியையும், பிரதக்ஷணமாய் வலம்வந்து தோத்திரம்புரிந்து சாஷ்டாங்க நமஸ்காரம்செய்து, தனது இரு கரங்களையும் சிரசின்மீது வைத்துக் குவித்தவண்ணமாக யிருந்த வணக்கத்தோடு நின்றுகொண்டிருந்தான்.

அதுசமயம் சிவபெருமான் ஆனந்த பரவசமுடன் அவன்பா லருள்சுரந்து சனிபகவானைநோக்கி திருவாய் மலர்ந்து வாராய் சனியனே என்று ஆசிர்வதித்து, இந்த சமயம் நீ இவ்விடத்தில் நம்மை நாடிவந்த காரணம்யாது உனக்கேதேனும் இடையூறு நேர்ந்ததோவெனவும், அப்படி யாதொரு இடைஞ்சலும் ஏற்படக் காரணமொன்று மில்லையே நீ யாதுகாரணமாக இவ்விடம் வந்தனை என்றுகேட்கவும், அதற்கு சனியன், ஐயனே தாங்கள் என்னை உண்டாக்கி சகலவித வரங்களும், மாய்கைகளும் தந்திருக்கின்றீர், அதனுடைய பூர்வோத்ர உண்மையைத் தெரிந்துகொள்ளவேண்டி தங்களிடமே அதை பரிசோதிக்கும்பொருட்டாகவும் தங்களிடம் என்மாய்கையின் வல்லமையைக் காட்டும் நிமித்யார்த்தமாகவும் வந்தேன் என்றான்.

அதுபற்றி சிவபெருமான் சற்று தீர்க்காலோசனை செய்து அப்பா சனியனே, என்னையும் கூடவா நீ பிடித்தாட்டும்படிக்கு நினைத்தனை; இப்படியுனக்கு யார்கட்டளையிட்டனர்; இப்படிச்செய்வதற்கு யாரிடம்வரமும் பெற்றாயென்று கேட்டருளினார்.

அதற்கு சனியனானவன் என் ஐயனே ஆதியில் தாங்கள்கொடுத்தவரமேயன்றி வேறொருவரும் கொடுக்கவில்

லே என்றுசெல்லா, அதைக்கேட்ட மூர்த்திகரமாகிய கடவுள் யாமுனக்கு அளித்தவரத்தை விபரமாகச் சொல்லென்றுகேட்க சனியன் சொல்கிறான் அஃதாவது, அரி அர பிரம்மாதி தேவர்களையும், முனிவர்கள், மானிடர்கள் உரகர்கள்முதலான சகல ஜீவாத்துமகோடிகளையும் பிடித்தாட்டும்படிக்கு ஆதியில் தாங்களேதந்த வரப்பிரசாதந்தானே அதைத் தாங்களே இதுசமயம் மறந்துவிட்டீர்களே இது ஞாபகமில்லையா என்றான்.

அதற்கு பரமநாதன் அப்படியாவென சிரமசைத்து, புன்னகைபுரிந்து, ஓர்வித எண்ணங் குடிகொண்டு, யான் கொடுத்த வரத்தின்படியே நீயாரை இதுவரையில் பிடித்திட்டாய், மற்ற யாராரை என்னவிதமாக செய்தனை இவையாவத் விவரங்களையும் எனக்குத்தெரிவிக்கவேண்டுமென்று கேட்டார்.

அதுபற்றி சனியன் மனங்குழைந்து தேவதேவனே, மஹானுபாவனே, நிர்மலநித்யானந்த ஜோதிமயமே, சுயம்பிரகாச சைதன்யவடிவமே, அடியேன் தெரிவிப்பதற்கு தாங்கள் என்மீது சினங்கொள்ளாமலிருப்பீராகில் நான் கூறுவேனென, அதற்கு எம்பெருமானாகிய சர்வேஸ்வரன் நல்லது உன்னுள்ளத்திலிருப்பதைவெளியிடுவாயெனவும், சனியன் சொல்வானாயினான். சர்வேஸ்வரா ஒருவன் தான்செய்த உபகாரத்தையும், நன்றியையும், தான்செய்த தருமத்தையும், தானே சொல்லலாகாதென்றும், தன்னைத்தானே புகழலாகாதென்றும் தருமஸ்மிருதியில் சொல்லி இருக்கிறது, ஆனபடியால் நான் எப்படி எனது பெருமையை சொல்லமாட்டுவேன் யாவும் தங்கள் சித்தத்திற்கே தெரியவரும் என்றான்.

சிவபெருமான் சிந்தித்த மனத்தோடுங் கூடினவராய் அப்பா சனியனே! உன்னிட மாய்கையாகிய மாயா வல்லமை இவ்வகைத்தென்றும், அதற்கு இன்னின்னார் அத்தாக்ஷியென்றும், உன்னாலேயே தெரிந்துகொள்ளவேண்டியே நானுன்னை கேட்கலாயினேன் அதுவிஷயம் விபரமாயும், தெளிவாயும் நீ புகல்வாயென்றனர்.

அதைக்கேட்ட சனியன் ஒருவாறு சிந்தித்து தானே சொல்லுகிறான், என் ஆண்டவனே! ஜீவகோடி ஆத்மாக்களுக்கும் சிருஷ்டிகர்த்தாவாகிய பிரமதேவன் தன்னுடைய சிரம் ஒன்றை இழக்கவில்லையா, அநேக கோடானுகோடி ஜீவாத்மாக்களை தன்குக்ஷியில்வைத்து ஆதரிக்கும் பரமாத்மாவாகிய அந்த மஹாவிஷ்ணுவான ஸ்ரீமந்நாராயணன் கடலில்மறைந்தொளிக்கவில்லையா, அயோத்தியை யாளாநின்ற தசரதசக்கிரவர்த்திக்குத் திருமகனாக அவதரித்த ஸ்ரீராமபிரான் வனவாசம் செய்யவில்லையா, அங்ஙனமே ஸாக்ஷாத் லக்ஷ்மீதேவியாகிய சீதாபிராட்டியார் அசேதன அசுரனால் சிறையிலிருக்கவில்லையா, ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா கோபிகாஸ்திரீகளின் கரத்தினாற் கட்டுண்டு, மத்தினாலடிபடவில்லையா, உலகுக்காபரணமாகிய சாகரத்தையுண்ட அங்குஷ்டப்பிரமாணமுள்ள ஸ்ரீமத் அகஸ்தியமுனிவர்பிரான் குன்மநோய்ப்பட்டலையவில்லையா, இவையாவும் என்னிடமாய்கையினாலல்லவா இவ்வாறு நடைபெற்றது. இவையாவும் தங்கட்கு சரியான சாக்ஷியமல்லவோ, இன்னமநேகமிருக்கின்றது அதுவும்தாமறிந்ததே விவரிக்கின் பெருகுமாதலால் இவ்வளவோடு நிறுத்திவிட்டேன். தவிர பூலோகத்தின்கண் மஹா மஹா சக்கிரவர்த்திகளாகிய நளச்சக்கிரவர்த்தி, புரூரவச்சக்கிரவர்த்தி, சத்திய அரிச்சந்திரன் முதலான இன்னுமநேகமாகிய மஹா மகிமை

பொருந்திய ராஜாக்களையும் பிடித்து, படாதபாடுபடுத்தி வைத்து நாடு, நகரம், வீடு, பெண்டுபிள்ளைகளை விடுத்து, காட்டிலோட்டி, மிகவும் கஷ்டப்படச்செய்ய வில்லையா! மறுபடியும் அவர்கள்பட்ட கஷ்டங்களை யான்கண்டு பச்சாதபங்கொண்டு அவர்களை பழயபடிக்கு நல்லநிலைமைக்கு கொண்டுவந்து மிகவும் பரிசுத்தராக்கி மறுபடியும் அரசையாளச்செய்யவில்லையா, இவை யாவற்றும் புராணேதிகாசங்களே சாக்ஷியமாகும். இன்னும் இந்திராதி தேவர்களும் மஹாரிஷிகளும் பட்டபாடு அநேகமுண்டு தவிர பூலோகத்தின்கண் மனுக்களைப்பிடித்து, கிரகசாரங்களைக்காட்டி, வக்கிரகுரூரங்களைமாட்டி, சுத்தாசுத்தனாக செய்திருப்பதை அடியேன் கணக்கிட்டு சொல்லமுடியாதென்று சனியன் முடித்துவிட்டு, என்னபதில் சொல்கிறீரென்று விளம்பினான்.

இப்படி சொல்லக்கேட்ட பரமசிவன் சனியனை நோக்கி சொல்லுகிறார் அப்பா சனியனே! நீ இதுகாறும் தெரிவித்தவர்களெல்லாம் அவரவர்கள் பூர்வத்திற்செய்த அவரவர்கள் கன்மானுசாரத்தினாலும் அவரவர்கள்செய்த வினைகளாலும், அவரவர்கள் விதிப்பயனினாலும், அவரவர்கள் புத்தியீனத்துவ தன்மைகளாலும், பெரியோர் முனிவராதிகளிடம் சாபத்தினாலும், வந்ததேயல்லாமல் உன்னாலானவிதமெப்படியாகுமென, அதற்கு சனியன் ஐயனே நாங்கள் ஒன்பது கிரகங்களும், ஒன்பது துணைகளாகவும், ஒன்பது அதிகாரவர்க்கங்களும்பெற்று, சாரக்கிரகங்களாகவும் முன்னின்று விதியை மதியின்வழியாகவும், மதியை விதியின்வழியாகவும் செலுத்தி தக்கபடி பலாபலன்களையும்கொடுத்து துக்கசோக சுகங்களை விளைவிப்பது மன்றி கோரகோரங்களைச் செய்வதினாலேயே அவரவர்

கள் புத்தியீனராகி என்னுடைய மாய்கையினால் அப்படி வருவதேயன்றி வேறில்லையென்று விளம்பினான்.

இவையாவுங்கேட்ட பரமசிவனாகப்பட்டவர் சகல புவன அண்டசராசரங்களும் நமதுள்ளடங்கி அதற்கு நாமே விராட் என்னும்படியாகிய சொரூபமாய் விளங்குவது நீயறிந்ததேயாயினும் நமது திருவிழியினாலேயே நாமே யுன்னைப்படைத்துக் காத்துரக்ஷித்து நாமே பரிபூரண திருவுளமகிழ்ந்து அன்புசுரந்து உனக்குத்தக்கபடியாகிய அரிய பெரிய மஹாமஹாவரங்களை அபரிமிதமாகக் கொடுத்திருக்க, அதை நீ சற்றேனும் கவனியாமலும் யோசியாமலும் "வளர்த்தகிடா மார்பிற் பாய்ந்தவாறுபோல" நம்மையே சோதிக்கலாகினையே இது உனக்குத் தகுமா ஞாயமாகுமாவென்று கேட்டார்.

அதற்கு சனிபகவான் ஐயனே! தாங்களோ எல்லா உயிர்களையும் பிடித்து சோதிக்கும்படியாக எனக்கு வரம்கொடுத்தீரல்லவா, அவற்றுள் தாங்களும் ஒருருவமாகத்தானே யிருக்கின்றீர். நீரும் அதிலடங்கியவராதலினால், உம்மையும் பிடித்துதானே ஆட்டவேண்டும் அப்படி பிடித்தாட்டாவிட்டால் வரத்தின்பலன் எப்படி அறியக்கூடும் மேலும் வரத்தின்பலன் தப்பிதமாகுமல்லவா? இதை தாங்கள் தங்களுடைய திருவுள்ளத்தில் நன்குணர்ந்து ஆலோசித்துப் பார்த்தால் யாவும் தெற்றென விளங்கும் என்று சொல்ல; சிவபெருமான் அதைக்கேட்டு சற்று தீர்க்காலோசித்து, ஹே! சனியனே ஆஹாஹா! பேஷ்! பேஷ்! நன்குரைத்தனை! நன்குரைத்தனை! நீ எது? முன்னொருகால் அசுரர்களிற் சிறந்தோனாகிய பத்மாசுரனென்னப்பட்ட அவுணனாகப்பட்டவன் என்னிடம் அநேகவரங்களைப்பெற்று கடைசியாக யாரிடமும் சாகாவ

ரூமடைந்து, என்னையே கொல்லப்பார்த்தான். அதுசமயம் நான் திக்குமுக்காடி ஓடி ஒளித்தசமயம் ஸ்ரீமந்நாராயணன் தோன்றி அவனை ஹதமாக்கினார். நீ இப்போது என்னிடமேயே வருவதைப்பற்றி கவனிக்கில் அவன் ஞாபகம் இப்போதுவந்து அதைஉனக்கு தெரிவிக்கலாயினேன் என்று சொல்லவும், சனியன்கேட்டு ஐயையோ தெய்வமே இப்படியும் பழி என்மீது போட்டுவிடலாமா அவனைப்போலவா நான் அவனைப்போல் எண்ணிவிட்டீர்களே, நானப்படிக்குக் கொல்லும்படியாக வரவில்லையே, வேடிக்கையார்த்தமாக வசனித்தேனே ஒழிய இது நிபவசனம் என்று சொல்லுற்றான்.

இவையாவுங்கேட்ட சுயப்ரம்ம பொருளாகிய பரமசிவன் சற்றுயோசித்து ஹே! சனியே! எந்தனைப்பிடித்தாட்ட உனக்கு சற்றேனும் சாமர்த்தியம் உண்டோ! வீதிரமுண்டோவெனக் கேட்கலாயினார். அதற்கு சனியன் மிகவும் குதூஹலித்து, கைகொட்டி ஆர்ப்பரித்து சிரித்து சுவாமி!சிவசொரூபமாகிய ஜகதீசா! தன்விரல் "தன் கண்ணைக்குற்றினால்" என்னசெய்வீர் அதை உடனே வெட்டி எறிவீரா அதுபோல தாங்கள்தந்த மகிமைபொருந்திய வரத்தின்பலத்தினாலேயே அடியேனுக்கு சாமர்த்தியம் உண்டாகுமே இவையாவும் தாங்களறிந்ததேயாகும் நன்குயோசியும் அண்ணலே என்று கூறினார்.

இஃதறிந்த சிவபெருமான், ஹே! சனியனே! நான் தெரிவிப்பதை நன்கு யோசி, கவனி, நீ எந்தனைப்பிடித்தாட்டுவதற்கு எவ்விதமான இடர் செய்வாயோ அதனை எந்தனுக்கு முன்னதாக விபரமாய் தெரியச்சொல்பார்ப்போமென்றார்.

சனியன் அதைக்கேட்டு என்னையனே! சகலரும் கொண்டாடும் மெய்யனே! இன்னதுதான் செய்வேனென்று, முன்னதாக சொல்வதற்கு என்னால் முடியாததாகும். எந்தெந்த சமயத்தில் என்னென்னவிதம் செய்யவேணுமோ அந்தந்த சமயத்திற்கேற்றபடிதான் செய்யநேரிடும், இப்போது அந்தவிபரத்தை ஸ்பஷ்டமாய் நிரூபிக்க முடியாது பின்னால் தாங்களே அறிந்துகொள்வீரென்று கூறியதைக்கேட்டு சச்சிதானந்தன் ஹே! சனியே! நீ என்னைத் தொடரும்காலத்தை சரியாக குறிப்பிட்டு சொல்லமுடியுமோவென, அதற்கு சனியன், ஓ ஹோ! அப்படியே தெரிவிக்கிறேன் கவனித்துக் கேளும் ஐயனே என்று சொல்லலாயினன். ஜகதீசா! ஹே தயாநிதி! சம்போசங்கரா! நான் தங்களைத் தொடருங்காலம் எப்போதெனின்; உத்தராயண புண்ணியகாலத்தில் முன்பாகத்தில் வந்து தங்களைப் பிடிக்கிறேன் எனவும், சிவபெருமான் கேட்டு சற்றுயோசித்து, நீ எத்தனைநாள்வரையில் என்பேரில் சம்பவித்து, பிடித்தாட்டுவாயென்று கேட்கவும், பைரவிரமணாகிய பராபரனே! சர்வேசா! தாங்கள் அது சமயம் என்மாய்கையைச் சுமக்கமுடியுமோ ஒருக்காலு முடியாது அடியேன்தான் தேவரீரை அதிகமாக வருத்தமுறச்செய்ய மனமாகுமோ, எனக்கும் தர்மமாகுமோ ஆனதுபற்றி ஒருகால் இரவுங்கூடிய அறுபதுநாழிகைக்குள் பிடித்தாட்டி ஆதியந்தமாய்ப் படாதபாடுபடுத்தியே தீர்வேனென்று தெரிந்துகொள்ளும் ஐயனே, என்று உறுதியாகச்சொன்ன வசனத்தை பரமேஸ்வரன்கேட்டு இவ்வளவுதானா அறுபதுநாழிகைதானே யென்று எண்ணி தன்மனத்துள் கிஞ்சித் கோபம்பெருக, அதைத்தனக்குத் தானே சற்று தணித்துக்கொண்டு அந்தசனியனை தனது

இரண்டு விழிகளாலும் நோக்கித் தலையசைத்து குஞ்சிரிப்போடு ஹோ! சனியனே! நீ சொன்னதுபோலவே சரிவரமுடிப்பாயோ? நல்லது ஆகட்டும் பார்க்கிறேன் அப்படியே உன்னிஷ்டப்படி நடத்திக்கொள்வாய். அதனையும் நாம் பார்த்துத் தெரிந்துகொள்வோம் உன்விருப்பத்தின் படிசெய்துவிடு. அதற்குத் தடையாதொன்றுமில்லை இனி நீவிடைபெற்றுக்கொள்ளென்று விடைகொடுத்தருளினார். அப்போது சனியனும் நமஸ்காரஞ்செய்து சுவாமியிடம் விடைபெற்றுக்கொண்டு தானும் புன்சிரிப்புடனே தன்னிருப்பிடம்போய்ச் சேர்ந்தான்.

இப்பால் சனிபகவான் குறித்தநாளைக் கணக்கிட்டு பிடிக்கப்போகும்நாளை எதிர்பார்த்துக்கொண்டே யிருந்தான். அப்பொழுது உத்தராயணம் பிறந்து முதல்தேதியன்று சங்கராந்தி புண்ணியகாலம்வந்துற்றதும் சனிபகவான் அந்தர சூக்ஷமத்தினாலே அப்பேர்ப்பட்ட எல்லாம்வல்ல பரமசிவத்தையே முகந்து பிடித்துக்கொண்டார்,

## 5-வது சருக்கம்.

# ஸ்ரீ சிவபிரானுக்கும் பார்வதிக்கும் சம்வாதம்.

### விருத்தம்.

கண்ணுக்குக்கண்ணாய்த்தோன்றும் கௌரியேசொல்வேனென்று
பெண்மணிசனியனென்னைப் பிடித்துமேஆட்டிவைக்க
எண்ணியேசென்றான்வேறு யிடர்யாதுசெய்வானோதான்
விண்மண்ணோரெவருங்காணா வேறிடஞ்செல்வேன்தேவி.

ஹே! பார்வதாதேவி! எனது கண்ணுக்கு கண்ணாகிய கபாலிருத்ரி என்பிராணத்திற் கொப்பாகிய பிராணசகியே விண்ணோர்கள்துதிக்கும் விமலியே நானுனக்கு அந்தரங்க ரகஸ்யமான சிலமொழிகள் சொல்லவேண்டியிருக்கிறது அதனை நீ உன் செவியினிடமாய்க் கேழ்ப்பாயாக அஃதென்னவென்றால் என்னைப்பிடித்து ஆட்டுவதன்பொருட்டாக சனிவரும்காலம் நெருங்கினது ஆகையால் அவன் வராததற்கு முன்னதாகவே என்னைத் துடராதிருக்கவும், அவனுடைய கண்களுக்கு புலப்படாமல் இரண்டுபொழுது அதாவது ஒரு இரவு ஒருபகலாகிய அதாவது அறுபதுநாழிகைவரையிலும் நான் அந்தரங்கமாய் யாருங்காணாதயிடத்தில் நான் மறைந்திருக்கவேண்டும் ஆனதுபற்றி நான் போய்வருகிறேன் அதுவரையிலும் நீ கைலாசத்தின்கண்ணிருந்து வரும் அடியார்கட்கு தரிசனம் கொடுத்திருக்கவேண்டியது. ஆனாலொன்று இந்தவிஷயமாகிய சங்கதியை யாருடனேயும் வெளியிடாமல் உனது மனதிற்குள்ளாகவே வைத்துக்கொண்டு ஐக்கியம் செய்துகொள்ளவேண்டியதேதவிர யார்யார் வந்து என்னைத்தேடினாலும் கேட்டாலும் தரிசிக்கவந்தாலும் அன்னவர்களுக்கு சுவாமி இவ்விடத்திலில்லை வேறு எங்கனமோ சென்றிருக்கிறதாகவே கண்டிதமாகச் சொல்லவேண்டியதுன்கடமையாகுமென்று திருவாய்மலர்ந்தருளினார்.

அதை பரமேஸ்வரியாகிய மனோன்மணி தனது செவியினிடமாக மகிழ்வுடன் கேழ்வியுற்று தனது செவ்வாய் மலர்ந்து தெரிவிப்பதாவது,

விருத்தம்.

எனதுயிர்க்குயிராய்நின்ற இறைவனேகைலைமூர்த்தி
மனதுமேமெலியாவாறு மங்கையாணியம்புஞ்சேதி
தனதாகவெண்ணிக்கேளும் தயாபராமனங்குளிர்ந்து
உனதிடபாதம்போற்றி உலகரக்ஷகனேகாரும்.

மஹேஸ்வரா எனது உயிருக்குயிராகிய எனதன்பும் விசுவாசமுமுள்ள மனோகரமான சர்வேஸ்வரா அடியாள் தெரிவிக்கப்போகும் விஷயத்தை தாங்கள் அங்கீகரிக்க வேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேனென பிரார்த்தித்துநிற்க, அஃதியாதெனப் பரமன்கேட்க அதற்கு உமாதேவியார் அவையாதெனிலோ தாங்களிப்போது திருவாய் மலர்ந்தருளிய வார்த்தையேதான்; ஆ ஹாஹா! பேஷ்! மிகவும் நன்றாயிருக்கின்றது மிகவும் ஆச்சரியமும் அற்புதமாகவுமிருக்கின்றது தாங்களோ இந்த உலகமே இரண்டு ஒருருவாகி விராட்புருஷரென்றும் சகல ஜீவராசி யுயிர்களையும் தமது குட்சிக்குள்ளடக்கிய வல்லமையுள்ளவராயினவே? அவகேடான உயிர்களையும் சம்ஹாரம்செய்யும்படியான ருத்திரமூர்த்தியாகவும், மறுபடி பிரம விஷ்ணு ருத்திரன், மயேஸ்வரன், சதாசிவமென்னும் பஞ்சவடிவமாகிய ஸ்ருஷ்டி, திதிசம்ஹார அனுலோப அனுக்ரஹமென்னப்படாநின்ற பஞ்சமூர்த்தி சொரூப திவ்யவடிவாகி பஞ்சேந்திரியத்தொழில்களை தாங்களே நடத்தும் பராக்ரமமுள்ள தேவரீர் கேவலம் அபலையாகிய ஓர் நீச்சக்ரஹமாகிய மேற்கோளென்று சொல்லப்பட்ட அசேதமுடையோனை சனிபகவானுக்காகவா தாம் பயந்தொளித்துக்கொள்ளவேண்டியது இப்படி சொல்வது தங்களுக்கு மானபங்கம் அன்றோ! தவிர இது தேவாதி ரிஷிகள் முதல் யாவருக்கும் இது எளிதமன்றோ! கேட்பவர்தான்

என்னசொல்வார்கள்; அஹஹா! சிவசிவா! இதுவென்ன அற்புதம் வெற்றியுறாது தோற்று மெலிவுற்றவர்கள் சொல்லும் சொல்லை தாங்கள் சொல்லலாகுமோ! அது தகாததாயினவே தாமிருக்கும் நிலையைவிட்டு இப்பேர்ப்பட்ட சமயத்தில் அகன்று போகவேகூடாது. ஆகையால் தாங்கள் தெரிவித்தமொழியை, மறந்துவிடும் மறந்துவிடும் என் இறைவரான அருட்பெருஞ்சோதியாகிய வள்ளலேயென்று ஈஸ்வரி சொல்லவும் அதைக்கேட்ட ஈஸ்வரராகிய எம்பிரான் தெரிவிக்கலாயினர்; அடி கேதாரகௌரீ என் மாதர்க்கரசியாகிய பெண்கள் நாயகமே ஆஹாஹா சரி சரி பேஷ்! "பெண்புத்தி பின்புத்தி" யென்பது உன்னாலேயே தெரியவந்தது. இதுதானோ உன்னுடையயோசனை வெகு நேர்த்தியதாகவேயிருக்கின்றது. நான் உன் யோசனைப்படிக்கி நீ சொல்வதுபோல இவ்விடத்தில் உன்னிடத்திலேயே தங்கியிருப்பேனாகில் அந்த மஹாத்ரோகியும் சண்டாளனுமாகிய சனியன் என் நேரில்வந்து உந்தன் முன்பாகவே என்னைப்பிடித்தாட்டும்போது உனக்கெப்படியிருக்கும். அதுசமயம் எனக்குதான் எப்படியிருக்கும். நீதான் என்ன அவனைத்தடுக்கலாகுமோ? அப்படி மீறி நீ தடுத்தாலும் நிர்தாக்ஷண்யமுள்ளவனாயினவே உனது தடைக்குதான் அஞ்சுவானோ? "அரசமரத்தைப்பிடித்த பேயானது பிள்ளையாரையும் பிடித்தது" என்று சொல்வதுபோன்ற கதையைப்போலும் உன்னையும் அவன் பிடித்தாட்டுவானோவென என்மனம் ஐயமுறுகின்றது. நான்தான் சரி என்னைதான்பிடித்து இம்சிக்கப்போகிறான் அதற்காக நீயும் அகப்பட்டுவருந்த நேரிடுமே? என்னை பிடித்தாட்டும் சமயம் நீ கண்ணுறக்கண்டு மனம்சகியாமல் விசனப்படவும் நமதருகில் ஆனந்த சந்தோஷமுடனிருக்-

கும் நமது குமாரர்களாகிய விநாயகனும் பாலசுப்பிரம ணியனும், வீரபத்திரனும், கூடவே யிருக்கின்றார்களே அவர்களும் காண்பார்களே அப்போது அவர்கள்கூடவே விசனப்பட்டு ஒருவருக்கொருவர் கூக்குரலிட்டு கதறு வார்களே, இதைக்கேட்டு நமது அடியார்களான நந்தி, பிருங்கி, பைரவர், சண்டிகேஸ்வரர் முதலான சகலபேர் களும், அலங்கோலமாய் அல்லோலகல்லோலபட்டு சிந்தை கலங்குவார்களே இதுவுந்தவிர ஒருவன் அறிந்தால் இவ் வுலகமாத்யந்தமும் அறியுமே "உலைவாயை மூடினாலும் ஊர்வாயை மூடமுடியுமா" இதுவிஷயத்தை பிரமாதி தேவர்கள் அறிந்தனராயின் இதென்ன வெட்கக்கேடு யா வர்க்கும் பகவானாகயிருப்பவர்கூட ஈனத்துவமான சனி யன்வசம் சிக்கியகப்பட்டு திகைத்து அழுகிறாரே என்று ஏளனம்செய்குவார்களே, மேலும் எனது அன்புள்ள மை த்துனராகிய ஸ்ரீமத் மஹாவிஷ்ணு அறிந்தனராயின் ஹே ஹே யென்று கைகொட்டி சிரித்து சிரித்து பரிகாசம்செ ய்யவும் ஏற்பட்டுவிடுமே, இத்தியாதிபேர்களுக்கிரணீ நான் அவமானப்படநேரிடுமே? அதைவிட யாதொரு சங்கதி யும் எவர்களுக்கும் தெரியாவண்ணம் சின்மயானந்த வடி வமாய் மறைந்துகொண்டேனானால் அந்தமகாபாவியாகிய சனியன் என்னைக் கண்டுபிடிக்க முடியாமல் மிகவும் கஷ் டப்பட்டு நாம் தோல்வியடைந்தோமேயென்று தயங்கி தத்தளித்துக்கொண்டிருப்பான். ஆகையால் இந்த சங்கதி யை கிணற்றில் கல்லைப்போட்டதுபோல் உனது மன திற்குள்ளாகவே வைத்திருப்பாயென்று ஸ்ரீ சிவபிரான் சொல்லியருளினார்.

அதற்கு உமையபரமேஸ்வரி எனது பிராணேஸ்வர ராகிய என்பிரணவமே எனிப்படி திகிற்கொள்கிறீர் "வருவ

துவரும் வாராது வாரா பொருந்துவெனபோவெனினும் போகா" என்கிற வாக்கியப்படி, வாராது வந்தாலும் மனந்தளரலாகுமா! ஊனம்நேர்ந்தாலும் ஊக்கத்தைக்கை விடலாகுமா! வினைவந்தாலும் வீரியமானதைரியம்விடலாமா! மலைவிழுந்தாலும் வைராக்கியம்விடலாகுமா! போருக்குப்போனவர்கள் முன்வைத்தகாலை பின்வைத்து பின்னிடையலாகுமா? முரசு சப்தத்தைக்கேட்டு கோட்டையை விட்டு ஓடுவர்போல ஓட்டம்பிடிக்கலாகுமா! ஆணபேர்கள் அவதைரியப்படலாகுமா? யாருக்கும்தைரியம்தானே பிரதானமாகியதென்பார்கள் பலமே பிதாவென்பார் சகலமுமறிந்தவர் தாங்கள் பராபரமாகிய வஸ்துவாகயிருந்தும் தங்கள் பாததூளிக்கி ஒப்பாகாத கேவலன், பேதை, அபலைகட்கும் தாழ்வாகிய சனியனுக்காக இவ்விதம் திகிலடைந்து வீணில் பிதறலாகுமா? சுவாமி தங்களுடைய பெருமையை எடுத்துரைக்க யாரால்முடியும் இரண்டாயிரம் நாவைப்படைத்த அந்த ஆதிசேஷனாலும் சொல்ல முடியாதே தேவரீரை சற்றேனும் யோசிக்காமல் பாசத்தாற்கட்டின காலனை காலாலுதைத்து வீழ்த்தினீரே காதலுக்குகந்தவனான காமன்கணை தொடுத்தானே அப்பேர்ப்பட்டவனை திருக்கண்ணாலெரித்தீரே அழிக்கவந்த அந்த காசுரனை அதமாகச்செய்துவிட்டீரே திடீரென்று கொல்லவந்த யானையை அப்போதே அந்தக்ஷணமேகொன்று அதன்தோலை இடையில் தரித்துக்கொண்டீரே இன்னமிப்படி அநேகம்பேர்களை ஹதாஹதம்புரிந்த வீர, தீர, பராக்ரமம் பொருந்திய சத்ருசங்காரமூர்த்தியாகிய நீர் சனியென்னும் சண்டாளப்பேயை, தும்சப்படுத்துவது தங்கட்கு வெகுநேரமாகுமோ நினைத்தால் அடியோடு முடிந்துவிட்டு தொலைவானே? அவன்தானென்ன அனலாகிய

அக்கினிமயமாயுள்ள தங்களிடம்நெருங்குவானா? தாங்கள் மட்டும் இங்கனமேயிருப்பீரேயாயின் அவன் வந்து இங்கென்ன நடத்துவான்; ஒன்றேனும்முடியாது. அவன் இங்குற்று நடத்தும்விதம் இன்னதென்று நாமொன்றாகயிருந்து கண்டுகொள்ளலாமே? யாதாமொருவருக்கு சுகதுக்கம் வருங்காலத்தில் குடும்பத்தில் ஒருவருக்கொருவர் பிரியாமலும், கலையாமலுமிருக்கவேண்டியதே நன்மார்க்கம். பலவிதமாகப்பிரிந்துபோவது கிரமமல்லவே;இப்பேர்ப்பட்ட சமயத்தில் தங்களைத் தனித்துவிட என்மனம் பொருந்துமா, அல்லது தாங்கள் என்னை தனித்துவிட்டு போகலாகுமோ, நம்முடைய உடலும் உயிரும் ஒன்றாயிருக்க இடர்வந்தகாலையில் ஒருவருக்கொருவர் எப்படி பிரியலாகும்? ஆகவே தாங்கள் போகவேண்டாம் சுவாமி, அடியாளும் விடமாட்டேன் என்பதாகக்கூறி, தடுத்துவிடவே, சுவாமி அதற்கு ஹே பெண்கள் நாயகமே நீ என்ன தெரிவித்தபோதிலும் என்மனம் திரும்பாது. மேலும் "எண்ணறக்கற்று எழுத்தற வாசித்தாலும் பெண்புத்தி பின்புத்தி" என்பதைநான் அறியேனா? அறிகுவேன். பேதைமைக்குணம் ஸ்திரீகளிடத்திற்றான் பொருந்தியதென்று குறியேனா? "நரிவாலைக்கொண்டு கடலாழம்பார்ப்பது போல்" பெண்புத்தியான உன்புத்தியை கேழ்ப்பேனா? சிறிதும் கேட்கமாட்டேன். பெண்டுபிள்ளை என்னும் பாசத்தை இதுவேளை வைப்பேனா? "மானம்போனபின் வாழாமைமுன்னினதே" மானம்போய் அப்பால் யிருக்கலாகுமோ? யோசித்துப்பார், யாருக்கும் நான் அகப்படுவேனா? அந்த சனிவந்து என்னைத்தொடுவானா? அவன் வருமளவும் நானிங்கிருப்பேனா? தான்சாக மருந்துதின்பேனா? பெண்ணாற்கெட்டோரை அறியேனா. அறிவேன். ஆக

லின் இதுசமயம் உன்வார்த்தையைக் கிஞ்சித்தேனும் கேழ்க்கவேமாட்டேன். உன் அண்ணன்வந்து தடுத்தாலும் இங்கிருக்கமாட்டேனென்று நீனே என்று கர்னகடூரமாகக்கூறி, அந்தப்புரத்தைவிடுத்து திடீரென்று பயணசன்னுத்தராய் சபாமண்டபத்திலெழுந்தருள, அதைக் கண்ட பார்வதியம்மனும், பின்பற்றிவந்தனர்.

அதுசமயம் பரமசிவன் பார்வதாதேவியை திருக்கண்ணோக்கி கூறுகின்றனர். ஹே! மாதரசே! நான் சொல்வதைக்கேள் அதாவது உத்தராயணம்பிறந்து முதற்பாதத்தில் அந்தப்பாவியாகிய சனிவருவதாகத் தெரிவித்தது உனக்கு நேரில் தெரிந்தவிஷயந்தானே? நேற்றையதினம் அவன் வரயில்லை இரண்டாவது பகலான சூரிய உதயமான காலமானதால் இன்றையதினம் அகஸ்தியம் வருவான். ஆகையால் நான் மறைந்துகொள்கிறேனென்று பயணப்பட்டால் அது நீ தெரியாமற்படிக்கு கூடவே பயணப்படுவது உனக்குத்தகாது உனக்கென்ன கிரஹசாரம் என்றுகேட்க,

அதற்கு உமையவள் சுவாமி இதுவரையிலும் அடியாள் சொன்ன வசனங்களை "விழலுக்கிரைத்த நீர்போல வீணாக்கி" செவிடன்காதிற் சங்குவைத்தூதுவதுபோல் தாங்கள் செவிகொடுத்துகேளாமல் "விநாசகாலே விபரீத புத்தி" என்பதை முன்னிட்டு, "கெடுமதி கண்ணுக்குத் தோணுமல் "கேடுவரும்பின்னே மதிகெட்டுவரும்முன்னே" என்பதுபோலும் "அவசரக்காரருக்கு புத்திமட்டு என்பதுபோலும்" "ஆய்ந்தோய்ந்துபாராதான் செய்கைதான் சாகக்கேடுதரும்" என்பதையும்மறந்து எல்லோரையும்துறந்து, எந்தனைப்பிரிந்து, சித்தப்பிரமைகொண்டு, தன்னந்தனியாகப் பேய்பிடித்தவரைப்போலப் பயணம்

கொண்டாலெப்படி உம்மைவிட்டுநான் பிரிந்திருப்பேன், மனந்துணிந்திருப்பேனே? ஆகையால் அடியாளுங்கூடவே வருவேனென்று மறுத்துசொல்ல,

அதற்கு சிவபெருமான் ஆஹா! ஹா! இதுவோ பேதமைபுத்தி என்பது சரியாகத் தெரிந்தது சரி! சரி! வெகு நேர்த்தி! அறிவீனத்தனமென்பது உனக்கே தகும், தகும். உலகத்தார்கள் சில உவமைச்சொல் கூறுவார்கள் அஃதியாதெனில் "பெண்கோல்கட்டு பிள்ளைவாய்க்கட்டு" என்றும் புருடன்சொன்னசொல்லை வெளியிட்டவள் "தூற்றும்பெண்டீர் கூற்றெனத்தகும்" "இசைந்தகால்களுக்கு ஏருதபாடகம்போலும்" நீ எனக்குவந்து லபித்தாய் "சமசாரம் சாகரம்" அதனுற் சாலவுந் துக்கமென்பது நீதானுகும். "சமாதிக்குபோயும் கொசுக்கடி" யுற்றதுபோலும் "சொர்க்கம்போவோர்கக்கத்தில் ராட்டினத்தை சுமப்பது" போலும் "காசிக்குப்போயும் கர்மம் துலையாதது போலும்" உன்னை இதுவேளை கூட அழைத்துக்கொண்டு போவது யுக்தமல்ல; "கோட்டானை மடியிற்கட்டிக்கொண்டு சுபசகுனம் பார்க்கப்போன" கதையைப்போலொக்கும்படியாயிருக்கிறது. ஆகவே சற்றுநேரம் வரைக்குமிருக்கும்படியான என் கிரஹசாரம் துலைக்க நான்மாத்திரம் மறைந்திருந்து வருகிறேனென்றால் நானும்கூடவருகிறேனென்பதாகத் தடுக்கிறுயே இதுதகுமா இனிமீதுயாதொரு தகவலும் சொல்லாதே நீ இங்ஙனே நில் நில் கண்ணே யான்சென்றுவருகின்றேன் என்று இவ்விதமாகசுவாமியும் அம்மனும் ஒருவருக்கொருவர் தர்க்கமாடிக்கொண்டே கைலையங்கிரி கோபுரவாசல் சித்திரமணி மண்டபத்தில் தம்பதிசமேதராக வந்து நின்றார்கள்.

## 6-வது சருக்கம்.

# கோபுர தரிசன மகிமை.

இங்கனம் அத்தருணத்தில் பொன்னாலமைந்த ரதம் பிரகாசிக்கவும், ஏழுபச்சைப்புரவிகள் பறக்கும்படிக்குப் பூட்டி அருணனானவன் சாரத்யம்நடத்த, திருவாழி கட கட வென உருள, நவரத்தினகிரீடம்புனைந்து இரண்டு செவிகளிலும் மகரகுழைகள் பிரகாசிக்க, செந்தாமரைப்பூமாலை ரத்னாபரங்கள், முப்புரிநூலும்,மார்பிலிலங்க கந்தகளப கஸ்தூரிவாடைகள் கமகமவென வாசனை பரிமளிக்க, சிவந்த திருமேனியுடன் மூன்றுகண்களும், ஆயிரங்கிரணங்களும், தகதகவென்று ஜொலித்தாற்போற், சங்கராந்தி புண்ணியகாலத்தில் தனக்குசெய்யும் பூசை பொங்கல் நைவேத்தியத்தை சம்பிரமத்துடன்கொண்டு வெகு சந்தோஷமாக வேடிக்கையோடு சனிபகவான் பரமசிவத்தைப் -பிடிக்கும்வகையைக் கண்ணுறப் பார்ப்போமென்று, ஆவலோடு கிழக்குதிசையில் உதையகிரியில் சூரிய பகவான் உதையமாகினார்.

அதுகாலம் உஷாதகாலமான அர்த்தோதயகாலமானதால் சகலமான தேவராதி முனிவர் கெருடர் காந்தர்வர் திக்குப்பாலகர்,நாரதர், தும்புரு, மற்றுமுண்டான யாவர்களும், சிவபெருமானை தரிசனை செய்யும்பொருட்டாக கைலாசத்திற்கு வந்தார்கள். அந்தசமயம் சுயம்ஜோதி பரம்பொருளாகிய பரமசிவனும் லோகநாயகியாரான உமாதேவிசமேதராக திருக்கோபுரவாயலில் அடுத்தமஹா விநோதகரமாயுள்ள சித்ரமணிமண்டபத்திலிருக்கக்கண்டு அரஹரா சிவசிவாவென்று துதித்து "கும்பிடப்போன தெய்வம் குறுக்கேவந்ததுபோல்" ஆஹா! ஹா! இது நல்ல

வேளையென்று வெகு ஆனந்த பிரமானந்தங்கொண்டு யாவரும் வந்தனை வழிபாடுகள் புரிந்து, சிவபெருமானைப்பணிந்து, தீர்க்கதெண்டம்செய்து, பலவிதமாகதோத்திரங்களையும் செய்தார்கள். அப்போது ஆகாயத்திலிருந்து புஷ்பமாரிபொழிந்தன; தசவாய்வுக்களும் வாத்தியங்களாகச் சப்தித்தார்கள்; தும்புரு நாரதர் தம் தம் வீணைகளைமீட்டிப் பாடினார்கள்; தேவதாஸ்திரீகளும் பலவிதமான பரிவட்டங்களிசைத்தார்கள். நந்திகேஸ்வரர் மத்தளந்தொனித்தார்; பிருங்கிமுனிவர் தாளம்கொட்டி நடனமிட்டார்; ரிஷிகேஸ்வராதிகளெல்லாம் வேதகோஷ்டம் புரிந்தார்கள்; தேவேந்திரன் முதலான சமஸ்ததேவர்களும் சந்தன கந்த கதம்ப கஸ்தூரிகளை வாரி வாரி கைகொண்டமட்டுந் தெளித்தார்கள். பன்னீர் சொரிந்தார்கள். சிவகணங்கள் கற்பூரதீபம் சாம்பிராணிதூபங்கள் ஏந்தினார்கள். இவ்வித வைபோகத்துடன் எல்லாம் வல்ல பரமசிவனார் காக்ஷிபெற்று அவரர்கள் விடைபெற்றுக்கொண்டு அவாளவாள் எதாஸ்தானம்போய் சேர்ந்தார்கள்.

## 7-வது சருக்கம்.

# ஸ்ரீ சிவபிரான் திருவூடல்.

பரமேஸ்வரரும், பார்வதி அம்மனும், கோபுரவாசலைக்கடந்து தர்க்கமாடிக்கொண்டே கைலாச மாடவீதியின்கண் எழுந்தருளியபிறகு சுவாமி அம்மனைப்பார்த்து அடி என் மனோகரமானமயிலே, மானே, தேனே, உனக்கென்ன சிறிதும் புத்தியில்லையா? அச்சமில்லையா? கற்புள்ள ஸ்திரீஜாதிகள் அந்தப்புரத்தைவிட்டு இவ்வளவுதூரம்

வந்ததுமன்றி, தெருவில் பகிரங்கமாக வரலாகுமா? இது
சர்வத்திராளும் உலாவி நடமாடும்படியான பகிரங்கமா
கிய தெருவல்லவா? பார்த்தவர்கள் நகையார்களா? மெட்
டெனே அரண்மனைக்குள்ளே போய்சேரென்று புகன்று
தாம் சற்று விரைவாகவே முன் நடந்தார்.

அம்மனும் விடாமற் பின்னாகவே அடர்ந்து குறுக்
காகநின்று வழிமறித்து,தடுத்து,அவரது கரத்தைப்பற்றி
யிழுத்து, போகாதீர், போகாதீர் அரண்மனைக்கு தாங்
களும் வாரும் போகலாமென்றுரைத்து மன்றாடினார்.

அப்போது சுவாமி தன்தேவியாராகிய அம்மன் பிடி
த்திருந்த கரங்களைத் தான் திமிறிக்கொண்டு தன்னிடகர
த்தினால் உமையவளைப் பின்புறமாகவே தள்ளி அரண்
மனைக்கு போடிபோடி யென்று,அதட்டித்துரத்தினார்.இவ்
விதமாக அவர்களிருவரும் வாவென்றும் போவென்றும்
முன்னும்பின்னுமாக ஊடலிட்டார்கள். அப்போது சுவா
மியாகிய பரமேஸ்வரருக்கு கிஞ்சித்கோபமதிகமுண்டாகி
அடி நீலி கபாலி கங்காளி, சண்டி, சாமுண்டி, மாதங்கி,
வேதகாளி, சக்கிலிச்சி, வள்ளுவச்சி, பரத்தி, கொள்ளிக்
கண்ணி, முக்கண்ணி, வாணிச்சி, மாயாகாரி,விந்தைகாரி
நீ எனக்கு பெண்டல்ல, இப்போது என்னைவந்து பிடிக்க
ப்போகிறவன் சனியனல்ல, நீயே தானெனக்கு சனியாக
வும் ஏற்பட்டாய். நீயேகொல்லும் நமனாகவும் வந்தாற்
றாய். "உடுத்தபுடவையே உரகமென்று" சொல்லுகின்ற
பாம்பாய்க் கடிக்குமென்பதுபோ லாயிற்று குட்டோடே
நடுவீட்டி லிருவென்றால் திட்டுண்டு தெருவிலிருப்பதுபோ
லாயின. இனி நான் உன்முகத்தில் விழிக்கவேமாட்டேன்
போடி போடி யென்று தம் அஸ்தத்தினால் அம்மனிட
தாடையிற் குத்தினார்.

அப்போது அம்மன் சுவாமியின் திருமுகத்தை கிஞ்சித் கோபக்குறியுடன் பார்த்து, என்னை நீர் ஏன் கைதொடுகிறீர் உமது தலைமீது வீற்றிருக்கின்றாளே அவளை நீர் தீண்டினால் அவள் பொறுத்துக்கொள்ளுவாள், அவள் உமக்கு எப்போதும் குளிர்ந்தவளாகும் நான் கொள்ளிக் கண்ணிதானே, இப்பேர்ப்பட்ட அவசரத்திற்றான் முன் பின்வரும் காரியம் தெரியாதவரானதன்பொருட்டு நமக் கடுமைகளாகிய சிறுவர்களிடத்தில் பேயனென்றும், பித்தனென்றும், பிஞ்ஞகனென்றும், ஆண்டியென்றும், கூத்தாடியென்றும், இன்னம் பலவாறாகத் திட்டுண்டு கல்லாலும், கட்டியாலும், வில்லாலும், பிரம்பாலும், அடிபட்டவராயிற்றே? நீர் ஏன் என்கையைத் தீண்டுகிறீர் தீண்டின உம் கை எரியாதா? என்னைத்திட்டின உமதுவாய் பொறியாதா? கண்ணெரியாதா? என்றிப்படி பலவித நிந்தாஸ்துதிசெய்து செந்தாமரைப்பூவை நிகர்த்த தனது வலதுகைவிரல்களினால் சுவாமியின் தாடையில் பதினுக்கு குத்தினாள். பகவான் அதை யொன்றையும்பாராட்டாமல் ஐயையோ சனியன் வருங்காலமாயினவே என்று ஓட்டமாக ஓடத்தலைப்பட்டார்.

அப்போது உமையவள் இது ஏது மோசம்வந்ததெதென்று தானும்கூட ஓடுவதற்கு நாணத்தினால் பின்னால் நின்றுகொண்டு, என்னிட உத்திரவன்றி நீர் போவீராகில் மூக்காலும் தங்கள்பேரில் ஆணை, ஆணை, யென்று சொல்லித் தடுத்தாள்.

அதைக் காதிற்கேட்ட சிவபிரான், சத்தியத்திற்குள் தடைபட்டு, முகம் சுளித்து, பிணங்கிக்கொண்டு ஓர்புறமாகவே நின்றார். அப்போது ஈஸ்வரியும் அதேபிரகாரம் மற்றொருபுறம் நின்றனர். பிணக்கின்பேரில் ஒருவர்க்கொ

ருவர் பேசாமலிருந்தார்கள் அதுசமயம் சுவாமியானவர் மனம் நொந்து, மழையிலா பயிர்போல்வாடி இதற்கென் னசெய்யலாமென்று யோசித்துக்கொண்டிருந்தார்.

அப்படியாக சிந்தித்துக்கொண்டிருந்த பரமசிவனானவர் இனி இவளுடன் வலுவிற் பேசக்கூடாது லகுவிற்றானே அவள் வாய்மொழியைப்பெற்று, இட்ட ஆணையை விடுதலைசெய்து கொண்டாலல்லவோ போகலாம். இதற்குள் அந்தப்பாவியாகிய சனியன் வந்துவிடுவானே இதற்கென்ன செய்யலாமென்று தேனில்வீழ்ந்த ஈயைப்போலும் மதிமயங்கி, தயங்கி, தன்மனதிற்குள்தானே யொரு ஆலோசனைசெய்து தனதன்பனாகிய சுந்திரமூர்த்தி நாயனாரை நினைந்தருளினார்.

---

## 8-வது சருக்கம்.

# சுந்தரமூர்த்தி நாயனார் முதல் தூது.

சிவபிரான் நினைத்தமாத்திரத்தில், நான்கு சமயாசிரியர்களில் ஒருவராகிய சுந்தரமூர்த்தி நாயனார் சுவாமியின் முன்பாகவந்துநின்று திருவடி கமலங்களுக்கு தீர்க்க தண்டம்செய்து, தொழுது, பலவாறாகத்துதித்து, இரண்டு கரங்களையுந் தன்சிரமீது கூப்பிக்கொண்டு, அடியேனை நினைத்தருளின விஷயத்தை தெரிவிக்கவேண்டி நின்றேனெனக்கேட்கவும், அதற்கு சிவபிரான் சுந்தரமூர்த்தியைப்பார்த்து ஆசீர்வதித்து சொல்லலாயினர்.

கேளாய் சுந்தரமூர்த்தி நீமுன்பு பரவைநாச்சியென்னும் பெண்மீது மோகங்கொண்டு, அவளிணங்காதிரு

க்க அதுசமயம் அதைப்பற்றி யான் உங்களிருவருக்கும் தூதுவன்போலாகி சம்மதப்படுத்தி பாயும் தலையணையும் என் தலைமீது வைத்துக்கொண்டு சுமந்து படுக்கையமர்த்தி இருவரையும் ஒருங்குசேர்த்துவைத்தேனே; அது உனக்கு ஞாபகமிருக்கின்றதா? அதற்குபதிலாக நீ இப்போது எனக்கோர் உபகாரம்செய்யவேண்டும்; அஃதாவது என்னை சனியன் பிடிக்கிறதாக சபதம்செய்துக்கொண்டுபோயிருக்கிறான். அவன்வருங்காலமானதால், அவன் கண்களுக்கு யாம் சிறிதுநேரம் புலப்படாமற்போகவேணும் என்றால், உனது தாயாகிய உமையவள் தானுங்கூடவே வருகிறேனென்பதாகவும்,நான் தனித்துபோகக்கூடாதெனவும் ஊடற்செய்து, பிரமாணிக்கம்வைத்து தடைப்படுத்தியிருக்கின்றாள். நாம் எப்படியும் கட்டாயம் போய் தான் தீரவேண்டும்; அவன் என்னைக் காணுமுன் நான் மறைந்திருக்கவேண்டும். ஆகலின் நீபோய் உமையவளுக்கு சமாதானமொழிகூறி சம்மதிக்கச்செய்து ஆணையை விடுதலைசெய்துகொண்டு நான் போய்வரும்படிக்கு வாக்கு வாங்கிக்கொண்டுவருவது உனது கடமையாகும் என்று பரமசிவம் கூறியருளினார்.

அவ்வசனத்தை சிரமேற்கொண்டு சுந்தரமூர்த்தியானவர் சம்மதித்து, உமையவள்பாற் சென்று, தீர்க்கதண்டம்புரிந்து திருப்பணிதோத்திரம்புகன்று, எதிர்நின்று, இருகரங்களைக்கூப்பி வணக்கத்துடன் சொல்லலாயினர்.

எனதன்னையே இவ்வுலகத்தின் கண்ணிரானின்ற சகல உயிர்களையும் எந்தனையும் ஈன்றெடுத்த மாதாவே! அடியேன் தங்கள் சிறுவனாகிய என்மழலைச்சொல் விண்ணப்பத்தைத் தாங்கள் செவிகொடுத்துக் கேட்கவேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

என் அன்னையே! அதுவிஷயம் யாதெனில் உலகத்தினுள்ள எந்தஸ்திரீகளுக்கும் பதியே பரமேஸ்வரன்; பதியே ஜகதீஸ்வரன்; பதியே முத்தியளிக்கும்நாதன் பதியேவினோதன்; பதியேஞானம்; பதியேமோனம்; பதிக்குச்செய்யும் பணிவிடையே மேம்பாடுள்ளபூசை; பதிசொல் பிசகாததே பரமதியானம்; பதியே காப்பவர்; பதியின்திருநாமத்தைப் பஜிப்பதே பிரமத்யானம்; பதியுடலே மோக்ஷமென்றுசொல்லும், வேதஸ்ருதியை தாங்கள் முழுதிலும், கற்றறிந்தும் புருடர் சொல்லுக்கிரண்டாக பதில்கூறுதல் பிசகல்லவோ? திருவாக்குக்கெதிர்வாக்கு மொழியலாகுமோ; பராபரமாகிய தங்களிருவருக்குள்ளாக இப்பேர்ப்பட்ட சமயத்தில் விகாதம்வந்துற்றால் என்னம்மணி அதை யார்தீர்ப்பவர்? யார்வந்து ஞாயங்கூறுவர்? ஆகையால் தாங்களே தயவுகூர்ந்து தாம் என் பிதாவாகிய பராபரப்பொருளுக்கிட்ட ஆணையை விடுதலைசெய்து திருவாக்கருளி சுவாமியை அனுப்பிவையும் என்தாயே என்று பணிந்து கூறினார்.

இவையனைத்தும் கேட்ட ஈஸ்வரியானவள் சுந்தரமூர்த்தியைத் தமது திருக்கண்களைநோக்கி, ஆசீர்வதித்து சொல்லுகிறார். அப்பனே சுந்தரமூர்த்தி நீ கூறினவையாவும் சரியே? அது ஒருபாலிருக்கட்டும், நான் தெரிவிப்பதை நீ கவனமாய்க்கேள். பதியே தெய்வந்தான், பதியினுடைய சொல்லைமட்டும் ஸ்திரீகள் தள்ளக்கூடாது; அது சரிதானே? தனக்குப்பதியாகிய ஸ்திரீகளின் சொல்லைமாத்திரம் புருஷாள் தள்ளலாகுமா? எப்போது ஒருஸ்திரீயை விவாகம்செய்கிறகாலத்தில், நாகதேவர், அரசாணிக்கால், அக்கினிதேவன், வேதப்பிராமணாள், தாய்தந்தைகள், பந்துக்கள், அரிய சாட்சிவைத்து, தாரைவார்த்துக்

கொண்டபோதே, சதியும், பதியும், ஒருமைப்பட்டதல்லவா? அப்போதே தனம், ருணம், சுகம், துக்கம், நன்மை, துன்மை இருவருக்கும் சொந்தந்தானே அல்லது வேறுபட்டதாகுமா? ஒருவருக்கொருவர் உடல் உயிர்போல ஒருமித்து இருவரும் ஒருமனதாக, ஒருசொல்லாக இசைந்து, இல்லறம் நடத்தவேண்டிய கடமையேயல்லது வேறுண்டோ கவனித்தாயா? அப்படியிருக்க, இவர்மட்டும் என்சொல்லைமீறி நடக்கலாமா? அவர்போகுமிடத்தில் ஏதேனும்கெடுதி ஏற்படும்பக்ஷத்தில், அது எனக்கு பாத்தியமில்லையா? அதுசமயம் யார்பாத்தியப்படுவார்கள். நீ நன்கு ஆலோசித்துப்பார். இதுவுந்தவிர, நான் அகோரமாகத் தவம்செய்து, அவருடைய சரீரமும், என்னுடைய சரீரமும் அர்த்தபாகமாகக் கலந்திருக்க, என்னைமாத்திரம் பிரித்து போவதற்கு, எப்படி ஞாயம் அதற்கு நான் ஒப்புவேனோ? என்னைமட்டும் இந்தநடுத்தெருவில் நாராயணாவென்று விட்டுவிட்டு, தனது வைப்பாட்டியாகிய கங்கையைமாத்திரம், ஜடைமீதிற் சும்மாடுகோற் புஷ்பம்போல தன் தலைமேலே வைத்துக்கொண்டு போகலாகுமோ? இது மாத்திரம் ஞாயமாகுமோ? ஒருகண்ணில் வெண்ணையும் ஒருகண்ணில் சுண்ணாம்புவைப்பவர்போல் வைக்கலாகுமா? எப்போதும் அவருக்குகருத்தில் விஷந்தானே? இது யாருக்குதான் தெரியாது, எதற்கேன் வீண்வார்த்தைகள் என்னையும் தன்கூட அழைத்துக்கொண்டுபோனாலொழிய, அவரை நான் தனியேமட்டும் அனுப்பமாட்டேன் என்று ஒரே பிடிவாதமாகச் சொன்னேனென்று அவரிடம்போய்க் கண்டிதமாகச்சொல்லிவிடு என்று சொல்லவே, அந்தவார்த்தையைக்கேட்டுக்கொண்டு, சிவபிரானிடத்தில் ஆதியோடந்தமாக சுந்தரமூர்த்தியானவர் சொல்லிமுடித்தனர் அதற்கு பரமசிவம் பதில் கூறுகிறதாவது.

## 9-வது சருக்கம்.

# சுந்தரமூர்த்தி நாயனார் இரண்டாவது தூது.

அடாகுழந்தாய் சுந்தரா! உன்னிடதாயார் சொன்ன மாச்சரியத்தை நீகண்டறிந்ததில்லையா? ஆஹா என்ன இது ஐயையோ; நானப்படிக்கு கெட்ட எண்ணம் நாளதுவரையிலும் என்மனதினில் வைக்கவில்லையே; இருவரையும், இரண்டுவிழிகளாகத்தானே பாவித்துவருகிறேன். விரல் நீக்கி மோர்குடிப்பார் நானல்லவே; ஒருத்தியை இடையிலும், ஒருத்தியைத் தலையிலும்தானே வைத்துக் காத்துவருகிறேன். அந்தகங்கையை நான்தான் சுமக்கிறேன் உன்னிடதாயாராகிய உமையவள், எனது அர்த்தசரீர மானதால், அவளுமென்கூடதானே சுமந்துவருகிறாள். தவிர நானோ தேஜஸ்வரூபம்; நெருப்பிற்குஜலம் ஆதாரமல்லவா; நானோ ஜீவன், ஜீவத்திற்கு உடலாகிய சத்தி ஆதாரமல்லாமல் வேறென்ன! இருவர்களும் எனக்கு உயிர்துணை தானே; எனக்கு எவர்கள் பேதாபேதம்! இருவரும் சமம் தானே? அப்படியிருக்க, உன்னுடைய அன்னை சொன்னது எப்படியிருக்கிறதெனில் "ஆண்டிக்கு ஆண்டி ஓட்டுக்காய்ச்சலென்று" சொல்லுவார்கள். அதுபோலிது இருக்கின்றது. இதுவரையிலும் இவ்விருவர்களும் என்னைவிட்டுப் பிரியவில்லையா? அல்லது நான்தான் அவர்களைவிட்டுப்பிரியவில்லையா? பிரியவேண்டிய காலம்வந்தால் பிரியத்தானேவேண்டும். பிரியாதசமயத்தில், பிரியாமலிருக்கவில்லையா? காலத்திற்குத்தக்கபடி அல்லவோ கோலமெடுக்கவேண்டும். வேளைக்கிதக்கின வேஷமல்லவோ எடுக்கவேண்டும். பார்! உன்தாயான உமையவள்முன்னொருகால்

தன் தந்தையாகிய தக்ஷப்பிரமாவாகிய, தக்கன்செய்த யாகத்தைப்பார்க்க தனித்துப் போகவில்லையா? காசியில் அன்னதானம்செய்ய தனியாய்ப்போகவில்லையா? அருணை சலத்திற்றவஞ்செய்ய தனியாய்ப்போகவில்லையா? இது நிற்க, இந்த கங்கைதானாகட்டும், அந்த பாகீரதனுக்காக, தனித்து பூலோகத்திற்குப் போகவில்லையா? திரு ஆலவாயாகிய மதுராபுரியில் வைகைநதியாகச் செல்லவில்லையா? கம்பாநதியிற்போகவில்லையா? அப்படி சமயோஜிதமாக வன்றோ நடந்துகொள்ளவேண்டியது, அடியார்கள் கோறினபடிக்கல்லவோ நாம் நடந்துகொள்ளவேண்டியது கடமை. அப்படி சமயத்திற்குத்தக்கபடி நாம் நடந்துகொண்டால்தானே நமக்கு பக்தானுகூலனென்று பேர்சொல்லுவார்கள். நமக்கு எப்போதும் உண்டான தொழில் இதுதானே. அஃதப்படியிருக்க, தற்காலம் நாம் நடக்கவேண்டிய சூக்ஷ்மம் ஒன்றிருக்கின்றது; அதன் உண்மை வெளியிடுகின்றேன்; கவனிப்பாய் சுந்தராவென்று பின்னும் சொல்லலாயினர்.

அது என்னவென்றால், சனியனுக்காக நான் தனித்து, மறைந்துகொள்ளவேண்டிய காரியமொன்றிருக்கிறது அதுவும் தவிர, நெடுநாளாக மனது வைராக்கியங்கொண்டு, மானஸபக்தியால், சத்தியை நீக்கி, நாம் தனித்து, காட்சிதரவேணுமென்று, ஞானமூரட்டு வேடனென்பவன், தன்வாயினால் தனித்து எப்போது வருவானோ!என் மனத்தை எப்போது கவர்வானோ! ஒருவனாகவரமாட்டானோ? வரத்தைத்தந்துபோகானோ! ஒண்டியாக வருகானோ! கண்டுவிட்டு சாகேனோ! ஏகனாகவருகானோ! சாகவீடுதருகானோ! வென்றிப்படி பற்பலவிதமாக நித்தம் நித்தம் சத்தமிட்டுக்கூவிக்கூவி வாயினாற் பஜித்துக்கொண்டு வருகிறானே;

அவன்கருத்துபோல, ஒருவனாகவே அவனிடம் சென்று அவன்போவாவைத் தீர்க்கவேண்டியது நம்கடமையாகும். அதற்கிதுவே தருணமானதால் கங்கையைக்கூட, இதுவேளை விட்டுவிட்டு நான்மட்டும் தனித்துப்போய்வருகிறேன், தடைசொல்லாமல்,உன்தாயார் மனம்போல வாக்களிக்கும்படிக்கு நீ அவள் மனதாற நிரம்பவும்சொல்லி நல்லதொரு விடைபெற்றுக்கொண்டு வாவென்று கூறி மறுபடியுமனுப்பினார்.

அந்த வார்த்தைகளை யாவும் சிரமேற்கொண்டு சுந்தரமூர்த்திநாயனார், ஜகதீஸ்வரியிடம்வந்து பணிந்து சொல்லுகின்றார்; என் அம்மணி இது என்ன விபரீதம் தேடிக்கொண்டீர்களே?"ஏறச்சொன்னால் எருதுக்குக்கோபம் இறங்கச்சொன்னால் மூடவனுக்குக்கோபம்" என்பதுபோலும், சினங்கொண்ட எருதுமெருதும் மிக்கப்போராடி நடுவிலிருக்கும் புல்லைத்தேய்ப்பதுபோலும், அடியேன் தங்களிருவர்கள் மத்தியிலகப்பட்டு கசங்கி நசுங்கலாயினேன். "கூழுக்கு மாங்காய்தோற்குமா மாங்காயிக்குக் கூழ்தோற்குமா" என்பதுபோலும், அவரும் கொடாகண்டன் இவரும் விடாகண்டி என்பதுபோலும், நீங்களிருவரும் இப்படி ஒருவர்க்கொருவர் ஊடல்செய்தால் அந்த ஸாக்ஷாத் ஹரி அயனுங்கூட உங்கள் பிணக்கை தீர்ப்பதற்கு முடியவேமுடியாது. முன்னொருகாலத்தில் சிக்ஷிப்பு பெரிது ரக்ஷிப்பு பெரிது என்று, பிரமாதி விஷ்ணுக்கள் போரிட அதுசமயம் அதற்குத்தக்கதீர்ப்புசொல்ல எனையணுகிய அந்த சிவபிரானுக்கே முடியாமற்போய்,இவருக்குச்சொன்னா லவருக்குக் கோபம், அவருக்குச்சொன்னா லிவருக்குக்கோபமாகுமே என, அவ்விருவருக்கும் மத்தியில் அக்கினிஸ்தம்பமாகி விலக்கினாரேதவிர, ஞாயம்

சொல்ல அவராலேயும் முடியவில்லை. அடிமையாகிய தங்கள் சிறுவன் தங்கள் ஊடலைத்தீர்க்கவல்லவனோ! ஏழுசமுத்திரமும் வெங்நீராகக் கொதித்தால்; வேறே எந்த ஜலத்தைவிட்டு ஆற்றக்கூடும்; தான்தானாகதான் ஆறவேண்டுமேயல்லாது வேறில்லை? அதுபோலவே, நீங்களிருவருமே சாந்தப்படவேண்டியதேயன்றி, அடியேனால் யாதொன்றும் முடியப்போகிறதில்லை, என்தாயே மஹேஸ்வரி! பராபரி! போதும் எனக்கு உங்களிருவருக்கும் மத்தியில் சக்கிமுக்கிக்கல்லைபோல் அகப்பட்டு, தயங்குகிறேன் என்று மிகவும் மனஸ்தாபத்துடன்சொல்லி, சிவபெருமான் சொன்ன வார்த்தைகளனைத்தும் ஒன்றுகூட விடாமல், விபரமாக வேணி கௌரிதேவிக்கு விளம்பலானார்.

அஃதுணர்ந்த மஹேஸ்வரி சுந்தரமூர்த்தியைநோக்கி, அடா என்னருமைக்கண்மணியாகியசுந்தரமூர்த்தி, ஐயையோபாவம், நீயேன் இப்படிவந் தகப்பட்டுக்கொண்டனையோ இரண்டாட்டிஓட்டிய குட்டியைப்போல், எங்கட்கு மத்தியிலகப்பட்டுக்கொண்டு உனது சிறியபாதம்நோக, தூதுநடந்து இப்படிவருந்துகிறாய் என்கண்ணே? உன்னிடதந்தைவார்த்தையைசிலாக்கியமாய் அடிக்கடிக்குச்சொல்லுகிறாயே, அன்னவருடைய வார்த்தையை நம்பலாகுமா; அது எனெனில், ஆதியில் மார்க்கண்டேயனுக்கு பதினாறு வயதுகொடுத்து, மறுபடியும் அதைப்பிரட்டி, என்னும் பதினாறாகவும் இன்னும் பதினாறேயென்று பெரும்பொய்யைக் கூறினாரன்றோ! இன்னும்கேள் அவரது நடவடிக்கைகளைபற்றியும் நன்கு தெரிவிக்கிறேன் "எள்ளுக்காய் பிளவுபட்டதுபோல" கேளாய் என்று மொழியத்தொடங்கினார். முற்காலத்தில் பிருங்கிமுனி என்பவன் என்னை நீக்கி, அவரைமாத்திரம் பிரதக்ஷிண நமஸ்காரபூஜை புனை

ஸ்காரங்கள் நடத்திவந்தான். அதுகண்டு யான் சுவாமி
யைநோக்கி, அடியாளையும்சேர்த்து பிரதக்ஷணம்செய்யா
மல், தங்களைமாத்திரம் பிரதக்ஷணம் செய்துவருகிறானே,
அஃதென்னகாரணமென்று நான் கேட்கவும், அதற்
கவர் சத்தியும் சிவனும் ஒருருவந்தானே என்றும், வேற்
றுமை எண்ணாமல் நமஸ்கரித்து வருகிறானென்று பதிற்
றெரிவித்தார்; அந்த உண்மையை யான் பரீக்ஷிக்கவேண்
டி ஒருநாள் சுவாமியும், நானுமாக ஒரேசிம்மாதனத்தில்
வீற்றிருந்தோம், அப்போதுமவன் என்னைத் தள்ளிவிட்டு
இருவர் மத்தியில் நுழைந்து, சுவாமியைமாத்திரம் பிரத
க்ஷணம்செய்தான். அப்போது எனக்கெப்படியிருந்திருக்
குமென்று நீயே யோசித்துப்பார். நான் அதனையும பொ
றுத்து, மறுநாள் நானும் சுவாமியும், அர்த்தபாகமாகக்
கலந்திருந்தோம். அன்றையதினமும் அவன் நாங்கள்
ஒட்டிக்கொண்டிருப்பதைப்பார்த்து, ஒருவண்டாக ரூப
மெடுத்து, எங்களிருவர்க்கும் மத்தியில் துளைத்து, என்
னைநீக்கி, அவரைமட்டும் வலம்வந்தான். அப்போது என
க்கு அதிகக்கோபமுண்டாகி, சகலஸ்தானங்களிலும், நர
ம்பு, தோல், தசை, எலும்பு, உதிரம், சுக்கிலம் ஆக, ஆ
றாதாரத்தில் கண்டிருக்கிறபடி எனக்குரியபாகமான
தசை, மூளை, ரத்தமாங்கிஷம் இம்மூன்றையும்; எனக்குக்
கொடுத்துவிடென்று கேட்டேன் அப்போது அந்த பிரு
ங்கியானவன் தானென்கிற ஆங்காரத்தோடு, தன்திரே
கத்தை யுலிக்கினான். அப்படி யுலுக்கவே யவன் திரேகத்
தில், கலந்திருந்த ரத்தம், மாமிசம், சுக்கிலம், இம்
மூன்றும் பூமியில்விழுந்துவிட்டது. அப்பால் நரம்பு, தோல்
எலும்பு மாத்திரமிருக்க, திரேகம் சத்தியற்றவனாக நின்
றான். அதுவேளை அவனுக்கு, ஆதாரமாக ஒரு ஊன்று
கோல் கொடுத்து, ஊன்றச்சொல்லி, அதனையே ஒருகா

லாக சுவாமியானவர், அமர்த்திவைத்தார். அதுமுதல் அவனுக்கு மூன்றுகாலரச்சுது. அப்போதாவது; நாங்கள் ஒருவராகயிருக்க, நீ இப்படிக்கி செய்யலாகுமாவென்று அவனைக் கேட்டவருமல்லு! அப்படிசெய்யக்கூடாதென்று சொன்னவருமல்லு! எங்கேயப்பா எனக்கும் அவருக்கும் என்ன சம்பந்தா சம்பந்தமிருக்குதென்று நீயே யோசித்துப்பார்.

இதுவுந்தவிர, மற்றொருகாலத்தில், பத்மாசுரனுக்காக வரங்கொடுக்கத் தனியாகவேபோனார். அதுசமயம் அசுரனானவன் யார்தலைமேல் தன்கையைவைத்தாலும், அவர்கள் எரிந்துபோகவேண்டுமென்று, வரங்கேழ்க்க, முன்பின்யோசியாமல் அவனிஷ்டப்படியே வரங்கொடுத்தார். அத்தகைய துஷ்டனாகிய அசுரன்தானென்கிற இறுமாப்பு கொண்டு, மறுபடியும் "திட்டினமரத்திலேயே கூர்பாய்வதுபோல" இவர்கொடுத்தவரத்தை இவரையேசோதிக்க, அன்னவர் தலைமேலேயே கையைவைக்கவந்தான். என்ன தைரியம் அவனுக்கு பார்த்தையா. அவன் அப்படி இவர்சிரசின்மீது தன்கரத்தை வைப்பதற்காக சமீபத்தில் வந்தான். அப்போது அவர் சமீபமாக வந்துவிட்டானே என்று ஓட்டம்பிடித்தார். அப்போது அவன் துரத்த, இவர் ஓட, தன்பாதம் தன்னிடையிற் படும்படியாக ஓட்டம்பிடிக்க, அந்த மஹாபாதகனாகிய அசுரனும், இவரை விடாது, கூடவே துரத்திக்கொண்டேவந்தான். அப்படி வந்ததைக் கண்டதும், மிகவும், படபடவென்றும், கிடுகிடுவென்றும் மனங்கலங்கி நடுநடுங்கி, கிலியும் பயமுங்கொண்டு அநேகதூரமாக இரைக்கிரைக்க, ஓடோடியும்வந்து, சுற்றுமுற்றும்பார்த்து, மறைந்தொளிப்பதற்கு சரியான ஓரிடமுங்காணாமல், மனதிலொன்றும் தோண

மல், களைக்குமுதவாத சுத்த அசேதனமாகிய வேலியோ
ரமாகக்கிட்டி, அங்குவளர்ந்தோங்கியிருந்த ஐவேலங்காய்
என்று சொல்லப்பட்ட, யாதொருபயனுக்கும் பிரயோ
ஜனமில்லாத அந்த காயிற்குள் புகுந்து ஒளித்துக்கொண்
டார். அதுசமயத்தில் அந்த மஹாபாவியாகிய அசுரனான
வன் தேடித்தேடி, ஓய்ந்து, ஓரிடத்திலுட்கார்ந்து, ஆலோ
சித்துக்கொண்டிருந்தான். அவன் எங்கேபோகப்போகி
றான் அவனை இனி விட்டேனா பார் என்று, மிக்க வைரா
க்கியத்தோடே, கவனித்து சுற்றுமுற்றும் பார்த்துக்
கொண்டேயிருந்தான். அவர் அந்த ஐவேலங்காய்க்குள்
புகுந்துகொண்டதும், அந்த அசுரன், அந்த காய்க்குள்
யாமிருப்பதை எப்படியும் கண்டுபிடித்து விடுவானே,
அப்படி அவன் கண்டுபிடித்தானாபின் அதைக்கிள்ளி அல
க்ஷியமாகவும் சுலபமாகவும் நசுக்கிக் கசக்கி விடுவானே
இதற்கென்னசெய்வதென்று அதுசமயம் யோசித்து
யோசித்து, கடைசியாக, தனது மைத்துனரும் என்னிட
தமயனுமாகிய ஸ்ரீவைகுண்ட நிகேதனும், ஸ்ரீமகா
லக்ஷிமிரமணனுமாகிய ஸாக்ஷாத் மஹாவிஷ்ணு மூர்த்தி
யை நினைக்க, அந்த ஹரிநாராயணன் உடனே வைகுந்தத்
தைவிட்டு, நமது மைத்துனனுக்கு என்ன ஆபத்துநேர்ந்
ததோவென்று, ஞானதிருஷ்டியால் விஷயங்களை நினைந்து
அந்த அசுரனை ஹதம்செய்ய இதுதான் சமயமென்றும்,
அவனுக்குக் காலங்கிட்டியதால், இந்த மதியுண்டாயிற்றெ
ன்றும் ஆகையால்இதற்கு ஒருதந்திரம்செய்யவேண்டுமெ
றென்றும் ஆழ்ந்தசிந்தையுடன் யோசிக்கலாயினார். கடை
சியாக தன்மனதில் ஓர்எண்ணம் ஏற்பட்டது. அதாவது அ
ந்த அசுரன் எதற்குமஞ்சமாட்டான், எப்படி நாம்போனா
லும் வென்றுவிடுவான், விடவுமாட்டான் ஏனெனில் அவ

ன்பெற்ற வரச்செருக்கினாலேயே இவ்வளவுதூரம் வந்து விட்டான் நல்லதென்று, சிரமசைத்து, உடனே தன் சுயரூபத்தை மாற்றிக்கொண்டு, தேவர், மூவர்யாவரும் முனிவராதியோருங்கண்டு வியப்புறுமாறும் எவ்வுலகமும் மதிக்கத்தக்கதாயுமாகிய மோகினிரூபங்கொண்டு, அந்தமஹாபாவியாகிய அசுரனிருக்கும் காட்டைத்தேடிவந்து, நாற்புறமும் கவனிக்க அந்த அசுரன் ஏதோயோசித்துக்கொண்டிருப்பதைக் கண்ணால்கண்டு, இதுதான் சமயமென்று, அவனெதிரிற்போய் அவன் மயங்கத்தக்கதாக முன்னின்று நாட்டியமாட, அதைக்கண்டு அசுரன் மகிழ்வடைந்து இப்பேர்ப்பட்ட சமயத்தில் இந்த ரூபவதி வந்தது ஒருவிஷயத்திற்கு நலமாய்விட்டது. இனி இவளை விடக்கூடாது, இவளை நமக்கு தேவியாக்கிகொள்ளலாம் அதன்பிறகு அந்த சிவனைப்பார்த்துக்கொள்வோம் அந்த பித்தன் எங்கேபோகப்போகிறானென்று, நினைத்து, இந்த மோகினிரூபத்தைநோக்கி, ஹே பெண்மணி! நீயார் இப்பேர்ப்பட்ட அந்தகாரமாகிய காட்டினிடத்தே வந்தாயே யாதுகாரணம், சீக்கிரம் தெரிவியென்றுசொல்ல, அதற்குமோகினிரூபமாயிருக்கும் மகாவிஷ்ணு ஹே! அசுராதிபா! ஏதோ நான் திக்குதிசை தெரியாமல் திசைதப்பி வந்துவிட்டேன்; வந்தவிடத்தில் தங்களைக்கண்டேன் இவ்வளவுதான் என்றுசொல்ல, அதற்கவன், ஹே! பெண்ணே! நீயோ இவ்விடம்வந்துவிட்டதுமன்றி, என்கையிற் சிக்கியும்விட்டாய்; இனிமீது நீ என் எண்ணப்படி நடக்க வேண்டுமல்லவா? என்றுகூற, அதற்குமோகினி, இதுதான் நல்லவேளையென்று ஹே தயித்தியாதிபதி! உன்மனப்படியிருக்கத்தடையில்லை. ஆனால் ஒன்று, என்மனதிற்கிசைந்தபடி யிருப்பாயாகில் உனக்கு சம்மதப்படுவேன். அதற்

கென்ன தெரிவிக்கிறாயெனவும், அசுரன் மனமகிழ்ந்து,
தனக்கிசைவாளென்கிற எண்ணங்கொண்டு, எனக்கு நீ
மனைவியாயிருக்கக்கடவாயென்னவும்; அதற்கு மோகினி
உன்மனதின்படி இசைவதற்கு நீரொம்பவும் அசுசியாயி
ருப்பதால், எனக்கு மனம்சகியாது; ஆனதுபற்றி, நீ ஸ்நா
னஞ்செய்து சுத்தமாய் வருவாயாகில் உன்னிஷ்டப்படி
யாகும் என, அவனிசைந்து, ஜலமிருக்கிறவிடத்தைக்க
ண்டு தேடிச்செல்லவும்; இவர் எங்கும் ஜலமில்லாமற்செய்
ய, அவன் எங்குதேடியும் ஓடியும் ஜலம்கிடைக்காததால்
மிக்க அலுப்புற்று, வேர்த்து விடாய்த்து, ஹே பெண்கள்
நாயகமே! இந்தக்கானகத்தி லெங்கும் அலைந்து திரிந்தும்
ஜலங்கிடைக்கவில்லையே இதற்கெப்படியென, என்னுடன்
கூடவேவா பார்க்கலாமென்றழைத்துப்போய், அங்கோ
ரிடத்தில் சேருந்தண்ணீருங் கலந்து சதுப்பாயிருக்கும்
படி நியமிக்க, அதைக்கண்டதும் அசுரன் ஹே! பெண்
மணி! இதோ இங்கேதான் சதுப்புநிலமாகத் தண்ணீரும்
சேருமாய்க்கலந்திருக்கின்றது வேறெங்கேனும் ஜல மகப்
படவில்லையே இதற்கெப்படி என்றுகேட்க; சரி நீயோ
ரொம்பவும் கஷ்டப்படுகிறாய், இனிஉன்னால் தேடவும்
முடியாது, ஆகலின், அப்படி சேறுந்தண்ணீருமா யிருப்
பதையாவது எடுத்து உன் சிரத்தில் தேய்த்துக்கொண்
டாற்போதும், அதுவே சுத்தமாகிவிடும் என்றுசொல்ல,
அதற்கவன் சந்தோஷித்தனாகி ஓடோடியும் அங்குசெ
ன்று, நிரம்ப அவசரமாக, மிக்க ஆத்திரத்துடனே, அங்கு
சேறுந்தண்ணீருமாயிருந்த ஜலத்தை சற்றும்யோசியாது
தன்கையாலெடுத்துத் தன்தலையிற் றேய்க்கவும், அவன்
உடனே எரிந்து சாம்பராயினான். சிவபிரான் சாபங்கொ
டுத்தபடி, யானை தன்தலையிற்றானே மண்ணைப்போட்டுக்

கொண்டதுபோல் தானே மடிந்தான். உடனே மஹா விஷ்ணு மகிழ்ந்து மோகினிரூபத்தை நீக்கி, தன்சுயரூபத்துடனே சிவபிரானிருக்கும் ஐவேலங்காயுள்ள அந்த செடியிடமணுகி, சிவபிரானே வாரும், நான் மகாவிஷ்ணு வந்திருக்கிறேன் அந்தஅசுரனை எரிக்கச்செய்துவிட்டேன் எனவே! சிவபிரான் உடனே வெளியில்வந்து தழுவி, மைத்துநா! அந்த மஹாபாதகன் எப்படி எரிந்தானென, இவர் விஷயம் தெரிவிக்க, ஓஹோ அப்படியா! அந்தமோகினிரூபத்தை நான்பார்க்கவேண்டுமென மன்றாட, மகாவிஷ்ணு மறுபடியும் மோகினிரூபமெடுக்க, மஹேஸ்வரன் அதைக்கண்டு மோகிக்க, "ரிஷி இண்டம் ராத்தங்காது" என்பதுபோல, உடனே ஹரிஹரனென்று ஓர்புத்திரன்பிறக்க, அந்தசிசுவை அப்படியே நடுக்காட்டிலேயே போட்டுவந்துவிட்டார்கள். அந்தசிசு பெரிதாகிய ஐயனாரென்னும் பெயர்வகித்துக்கொண்டு தெய்வாதீனம் பெற்றிருக்கமையால்; யாவர்களும்தெய்வமாகப்பாவித்து, இப்போதும் இவ்வுலகமெங்கிலும் ஐயனாரென பூசித்துவருகின்றார்கள். அதுசமயமும் என்னைத் தனியாகவிட்டுப்போய் என்னசுகத்தை அடைந்தார்சுந்தரா!

இன்னுமொன்று தெரிவிக்கிறேன்கேள்! பின்னுமொருகால், மகாகடுமையாக தவம்செய்து, பற்பல வரங்கள் பெற்று, தங்களை வெல்பவர் யாரும் இலையாதென்று மனச்செருக்கடைந்த மகா தபசிகளாகிய, தாருகாவனத்தின்கண் வசியா நின்ற தாருகாவன ரிஷிகளுடைய மகா உத்தமி பத்தினிகளாகிய நாற்பத்தெண்ணாயிரம்பேரின் கற்பையழிக்கவேண்டியதின் நிமித்தியம் அந்தரிஷிகள் யாவரும் தவம்புரியப்போன சமயமறிந்து, சிவபிரான் பிக்ஷாண்டியாக கோவணாண்டி வேடதாரியாகி, ஆங்கேகி, பவதி பிக்ஷாந்தேஹியென்று பிச்சைகேட்க, அவர்

கள் பிக்ஷையிடவந்தபோது, இப்படிவந்து கொடுத்தால் நான்வாங்கமாட்டேன், என்போன்று நிர்வாணிகளாகவந்து ஐயமிட்டால்தான் அங்கீகரிப்பேனென! அதற்கந்த ஸ்திரீகள் யாவரும் ஒரேமனதுடனே, இன்னவன் வேண்டுமென்றே, நம்மைக்கெடுத்து கற்பழிக்கவந்தவனேதான், இவனுக்கு ஏதேனும் கெடுதிசெய்யவேணுமென்று நினைந்து, கோபம்பெருகி, ஹே பிக்ஷாண்டி! எங்களை ரிஷிபத்தினிகளாகிய கற்புள்ளஸ்திரீகளென்று சற்றேனும் எண்ணாமல் அவ்வாறு கேட்டபடியாலும், இப்படி எங்கள் எதிரில் சற்று மஞ்சாமல் நாணம்விடுத்து, வந்தபடியாலும்; உனது மாணியற்று பூமியில்விழக்கடவதெனச் சாபங்கொடுக்க, அவ்வாறேயானதால் அதையான்சென்று புவியில்விழாமற்படிக்கு அங்கீகரித்து, மன்னிக்கவேண்டுமென இரங்கிக்கேட்டவாறு, முன்போலவிருக்க மீளவுமடைந்து வந்தனர் "உள்ளதும்போச்சதடா நொள்ளைக்கண்ணா" என்பதுபோல் "அவனைத் தொடுவானேன் கவலைப்படுவானேன்" பார்த்தனையா சுந்தரா! இவரது மாண்மை, அதுசமயமும் என்னைவிட்டுப்போய் கேலிக்கிடந்தானே தேடிக்கொண்டார். அப்பா கண்மணி! இப்படிக்கெல்லாம் அடிக்கடி செய்துகொண்டு வருகின்றாரே! முன்பின்யோசியாமல் கண்டவாறு வார்த்தைக்கொடுத்துவிட்டு, கடைசியாக இன்னவரே அகப்பட்டு சிக்கிக்கொண்டு விழிக்கின்றார். பித்தனென்கிறபெயர் சரியாகவிருக்கிறதல்லவா! அதுபற்றியே, மறுபடியும் என்னைவிடுத்துப் போனால் ஏதேனும் கெடுதிவருமே என்றுதான் சிந்திக்கிறேன் வேறென்ன மைந்தா! நன்குயோசித்துப்பார்! அப்பாசுந்தரா! இன்னமுமிருக்கின்றது இவர் வண்டவாளத்தையெல்லாம் அப்படியப்படியே தெரிவிக்கிறேன் இன்னமுங்கேள் அதாவது;

முன்னமொருசமயம், தவத்தில்மிக்க வல்லவராகிய அத்திரிமஹாரிஷியின் பத்தினியாகிய அனுசூயாதேவியுடைய கற்பைச் சோதிக்கும்பொருட்டாக எண்ணங்கொண்டு, தான் கெட்டுப்போவதுமன்றி, தன்னைப்போல் எதிரியையுங் கெடுக்க தனக்குத்துணையாக எனது தமயனையும் அன்னவர் புத்திரனாகிய சதுர்முகப் பிரமாவையும் சேர்த்துக்கொண்டு, அந்த மஹா பதிவ்ரதையின் முன்பாக மகாரிஷிகள்போன்றுருக்கொண்டு, நேரிற்சென்று, கண்டு, இந்த ஆண்டிகளுக்கு நிர்வாணியாகவந்து பிச்சையிட்டால்தானேற்றுக்கொள்வோமெனச்சொல்ல, அப்போது அந்த மஹா பதிவ்ரதா கிஞ்சித் சந்தேகங்கொண்டு, இவர்கள்கொண்டிருக்கும்படியான கெட்ட எண்ணத்தையறிந்து, இவர்களை இன்னின்னாரென்றுதான்தெரிந்து, குஞ்சிரிப்புடன் வாருமக்களாவென்று தன்வாயினிடமாகக்கூறவே, அன்னவளுடையவாக்கு பழுதாகாவண்ணம், ஆண்டிகளாயிருந்த திருமூர்த்திகளும், மூன்று குழந்தைவடிவமாகி, கூவா கூவாவென்று அழவே! அன்னவள் அக்குழந்தைகளைத்தழுவி எடுத்து, மூன்றுதொட்டில்களிட்டு சீராட்டி, தாலாட்டி, அமுதூட்டியிருக்குஞ்சமயம் இதுவிஷயம்நாரதன்வந்து சகலமுந்தெரிவித்ததன்பேரில், மோசம்வந்திடுமேயென்று நினைத்து, நானும் லக்ஷ்மிதேவியும், சரஸ்வதியுமாக மூன்றுபேரும் அங்குசென்று, எங்களுடைய நாணம்விடுத்து, பதிபிக்ஷைகேட்கவும், அந்த மகாபதிவிரதை தன் கொழுனனாகிய அத்திரிமகரிஷியின் உத்திரவின்பேரில் அன்னவர்களைப் பழயபடியிருக்க, எழுப்பித்தரவே; என் தமயனாகிய மகாவிஷ்ணு, அந்த அம்மனுக்கு சமாதானமொழியாடி, மூவர்களும் ஏகசொரூபமாக அதாவது தாத்தாத்திரேயரென்றும் காக்ஷிகொடுத்

து பிரதிவருடமும் பிள்ளைகளாகயிருந்து மனதைத் திருப்திசெய்கிறோமென்று தெரிவித்தனர்கள். அந்தசமயம் பக்குவமாய் அழைத்துவந்ததினாலல்லவா இவ்விதந்தெரிவிக்கிறார் இதுவிஷயம் மூன்றுலோகங்களு மறிந்ததுதானே! பார்! என்னைவிட்டுப்பிரிந்தபோதெல்லாம் இவரடைந்த சுகமென்ன? ஒன்றுமேயில்லை. அப்பாசுந்தரா! இவர் இப்படிதான் எப்போதும் வருங்காரிய மறியாமலேயே நடந்துகொண்டு கடைசியாக கெடுதிநேரிடுந்தருவாயில் திருட்டுமுழி முழிக்கிறது இவருக்கு வழக்கந்தானே? இப்போதும் அப்படிக்குத்தான் ஏதோ அவமானமாகியகெடுதி வரத்தான்போகிறது. நான் முக்காலும் சொன்னதாக அவருக்குத்தெரிவிப்பாயென்று மறுபடியும் சொல்லியனுப்பினார். உடனே பார்வதாதேவி ஏதோமனதில் நினைத்து அப்பாசுந்தரா! நீ ஒன்றுகூட விடாமலிவையாவும் சொல்லிவிடு நீ இப்படி யாவும்தெரிவித்தாலும் அவர் ஏதேதோ சாக்குபோக்குகள் சொல்லி, "தான்பிடித்த முயலுக்கு மூன்றேகாலென்னும்" கதையைத்தான் படிப்பார் அப்படி "பிடிவாதம்செய்தால்குடிசேதமாகு"மல்லவா இஃதறிந்தும் ஒரேமூர்க்கமாயிருக்கின்றார் ஆகையால் நீ அவரிடம் சென்று கண்டிதமாகத்தெரிவித்துவிடு, போய்வா சுந்தரா தாமதியாதேயென்று சொல்லியனுப்பிவிட்டார்.

சுந்தரமூர்த்தியானவர் அவ்வார்த்தையைச் சிரமேற்கொண்டு பரமசிவனிடம் ஓடோடியும்வந்து பரமசிவனை வணங்கி சொல்கிறதாவது:—

சுவாமி இது என்ன மிக்க வெட்கக்கேடாயிருக்கின்றதே? "கோட்டைக்குள்ளே குத்துவெட்டு" என்பதுபோலும், "சிற்றூரில்பெருங்கூத்து" வைத்ததுபோலும்,

தெருசிரித்து உறவாடுவார்போலும், விளையாட்டுப்பூசல் விளைப்பூசலானதுபோலும், மானம்போய் குடித்தனம் பண்ணுவார்போலும், தன்மானம் பிறர்மானமென்று நினையாதார்போலும், சகலமும் தெரிந்த பராபரமான நீங்கள் இருவருமே விகாதப்பட்டால், யாவருக்கும் ஏளிதமல்லவா? நன்குயோசித்துப்பாரும், இனி தமக்கு இது நன்றல்ல ஜெகதீசா! சர்வேசா! பரஞ்சுடரே! பரப்பிரம்மமே! தேஜோன்மயசுகவாரியே! எவ்விதமாவது நீங்களிருவரும் ஒருவழியாக சமாதானமாகவேணுமென்று இவ்வளவுதூரம் மிகவும் வணக்கமாய் அம்மன்சொன்னவை யாவற்றும் ஒன்றுங்கூட விடாமலும், ஒளியாமலும், முற்றிலும் சொல்லிமுடித்தார்.

## 10-வது சருக்கம்.

## சுந்தரமூர்த்தி நாயனார்

## மூன்றாவது தூது.

சுந்தரமூர்த்திநாயனார் தெரிவித்ததை யாவும்கேட்டு பரமசிவன் குஞ்சிரிப்புகொண்டு, சொல்லுகிறார், அப்பா எனதன்பிற்கிசைந்த சுந்தரா! நீ தெரிவித்தமொழிகள்யாவும்சரிதான், உன்னிடதாயார் சொல்லியனுப்பிய விஷயங்கள்யாவும். சரியே! அவைநடந்தது உண்மைதான் அதையே தான்சொல்லியிருக்கிறாள் அதுமெய்தான். மெய்தான்! நான் அவ்வார்த்தைகளை ஒப்புக்கொண்டேன் நான்செய்தது எல்லாம் பிழைபிழைதான். உண்டானதை இல்லையென்று சொல்லத்தகுமா; அதைப்பற்றி எனக்கொருவித கோபமுமில்லை; ஆனால் இனியொருதரம், நீ என்

சொல்லைக்கடவாமல், உனது தாயினிடம்சென்று, முடிவா னசங்கதியொன்று சொல்லுகிறேனதைமட்டும் சொல்லி வரவேண்டும், அஃதியாதெனில், நான் இதுவரையில்செ ய்ததெல்லாம் போகட்டும், இந்தவேளைமாத்திரம் தனித் துத்தான் கட்டாயம்போகவேண்டும், இப்போது நான் யாதொருகுற்றங்குறையாவது, பங்கத்தனமாவது அடை யவேபோகிறதில்லை; அப்படி அடைந்து வந்தேனாயின் அவள் என்ன நிபந்தனை சொல்லுகிறாளோ அதற்குயான் உட்படுகிறேன் இது உண்மை! உண்மை! என்று மூக்கா லும்சொல்லி நீ எவ்விதமாவது உன் தாயார் பாதத்தில் விழுந்து, மனத்தைக்கரைத்து, சமாதானப்படுத்தி, நல்ல வாக்குவாங்கி வரவேண்டிய துனதுகடமையாகும், என்று கெஞ்சினவார்த்தையுடன் சுந்தரமூர்த்தியின் உச்சியைமூ கந்து, வாயால் முத்தமிட்டு, கரங்களினால் திரேகத்தைத் தடவிக்கொடுத்து, மார்புடனே தழுவி ஆசீர்வதித்து, போய்வாடா கண்மணியேயென்று சொல்லியனுப்பினார்.

---

## 11-வது சருக்கம்.

# அம்மன் பிணக்கம்.

சுந்தரமூர்த்தியானவர் சுவாமிதெரிவித்த வார்த்தை யை பயபக்தியோடு மனதுட்கொண்டு ஓடோடியும்வந் து, அம்மனைவணங்கி, சுந்தரமூர்த்திநாயனார் சொல்லுகின் றார். என்னையீன்றெடுத்த ஜகன்மாதாவே! ஜகதீஸ்வரி! பா ர்வதி! லோகநாயகி! சர்வசங்காரி! கௌரி! பர்வதராஜன் குமாரியாகிய எனதன்னையே! அடியேன் சொல்லும் சிறு மொழிகளைக்கேட்டருளல்வேண்டும், அடிக்கடிக்க பந்து விசைகொண் டெழும்புவதுபோல், கோபத்தை மீசுரப்

படுத்தலாகுமா? கோபமே பாவம் என்பதை அறியீரா? எவர்கட்கும் சாந்தமென்பது தர்மமல்லவா? பொறுமை கடலினும் பெரிதல்லவா? "ஆறுவதே சினமென்பது" அறியீரா? "நீரில் எய்தவடுபோலமாறுமே சீரொழுகு சான்றோர்சினம்" என்பதுபோல நீரில் எய்த அம்புபோல பெரியோர் கோபம்தணிந்து போகுமல்லவா? இவை யாவும்தெரிந்த பராபரிக்கு நாயேனுகிய அடிமைசொல்வதென்ன! எவ்விஷயமும் நன்மார்க்கமாகவே போகவேணுமல்லவா? ஒரேபிடிவாதமாக மூர்க்கங்கொள்ளலாகுமா? உங்களிருவர்மத்தியில் "அங்குந்தப்பி இங்குந்தப்பி அகப்பட்டுக்கொண்டேன்" என்பது போல உங்கட்கு நான் தூதுநடந்தது போதும் போதும், தாயே என்னிட கால்களும் வலிக்கின்றதே! திரேகத்தில் வேர்வையானது சிந்துகின்றதே! இந்தபிள்ளைபடும் வருத்தத்தை நீங்கள் பாராட்டாமல், உங்கள்கோபத்தையே பாராட்டுகிறீர்களே! இத்துடன் மூன்றுதரம் இங்குமங்குமாகத் தூதுநடந்தேன்; இனிமேல் என்னுல் முடியவே முடியாது! நீங்களெப்படியாவது போங்களென்று பூமியிற்றிடீரென்று வீழ்ந்து, அம்மனுடைய இருபாதங்களையும் தன்கண்களிலொற்றிக்கொண்டு, இருகண்களிலும் ஜலம்பெருகி வடிய பரமசிவன்சொல்லிய சத்தியவசனத்தை ஒன்றுகூடவிடாமல் யாவும் சொல்லிமுடித்தார்.

அதை உமையபார்வதிகண்டு, தன்னுடைய இருகண்களிலும் நீர்ததும்பிக்கலங்க மனம்கிஞ்சித்திரங்கி, சுந்தரமூர்த்தியை தனதுகரங்களாற்றழுவி அவரது தவடையில் முத்தமிட்டு, அப்பாகுமாரகா! இதுவரையிலும் போனதெல்லாம்போயொழியட்டும், முடிவானவார்த்தை என்னசொன்னுரோ அதைமட்டும் சொல்வாயப்பா என்று

வினவினுள்; அதற்கு சுந்தரர் என் அம்மணி! அவர் கடைசியாக தெரிவித்தவார்த்தையாவது, இந்தவேளைமட்டும் தங்களை விட்டுவிட்டு தான் தனியாகத்தான்போகவேணுமென்றும், அப்படி போகிறகாரியத்தில் தனக்கொரு அவபங்கம்வாராதென்றும், அப்படி ஏதேனும்பங்கம்வந்தால் தாங்களிடும் நிபந்தனைக்குக் கட்டுப்படுவதாகவும் ஆணையிட்டுத் தெரிவித்தாரம்மணி யென்றுசொன்னார்.

அந்த வார்த்தையை அம்மன்கேட்டு உடனே ஆஹா ஹா! அப்படியா சொன்னார், ஆனுலிருக்கட்டும், சரி! சரி! நல்லது நல்லது! எல்லாம்பின்னுற்பார்த்துக்கொள்ளுவோமென்று, திடுக்கென சுவாமியிருக்கும் முகமாக அம்மன் திரும்பி, கோபக்குறியுடன் சுந்தரமூர்த்தியுடனே சரசரவென்று நடந்து, சுவாமியிடம்போய் சுவாமியைப் பிரதக்ஷணை நமஸ்காரம்புரிந்து, அவருடன் தனது திருவாய் திறந்துபேசாமல் மௌனமாகவே, அவரைப்பார்த்தபடியே நான்தமக்குவைத்த ஆணையை விட்டேன்விட்டேனென்று தானேசொல்லிவிட்டு சுவாமியைப் பார்த்தபடியே, பின்னிடையாகவேவந்து, கைலாசவீதியைக்கடந்து, கோபுரவாசலின்வழியாய் போகும்போது மறுபடியும் திரும்பித்திரும்பிப்பார்த்து,சுவாமியைவிட்டுப்பிரியமனமில்லாதவராய் சகியாமல் போனுரோ,போகாமல் இன்னுமிருக்கின்றுரோ வென்று மூன்னுக்குவந்து,சுவாமியிருப்பதைக்கண்டு தெரிசித்து கோபுரவாயல்வழியாகவே தானும் சுந்தரமூர்த்திநாயனுருமாக திருவாலயத்திற்குள் எழுந்தருளினுர்கள்.

இப்பால் அன்றுமுழுதினும் அம்மன் பூசை நைவேத்தியமில்லாமலும், ஆடையாபரணங்கள்யாவும் களைந்துவி

ட்டு தூக்கமில்லாமலும், அந்தசிவபிரானையே மனதினி டம் சிந்தித்தவண்ணமாக பஜனைசெய்துக்கொண்டு மிக்க விசனமாகவே பள்ளியறையில் சயனித்திருந்தனர்.

## 12-வது சருக்கம்.

## ஸ்ரீ சிவபிரான் மறைதல்.

பரமசிவமேஸ்வரர் ஈஸ்வரியைப்பிரிந்து, கைலாசவீ தியில் நடுத்தெருவு நாராயணுவென்பவர்போல் தனித்து, திகம்பரதாரியாய் ஏகாந்தசித்தராய் மனதை யோர்வழி யில் நிறுத்தப்படாமல் நின்றுகொண்டு ஆகாயத்தைநோ க்கி யருளினர்.

அதுகாலம் சூரியன் தனக்கு நேராய் உச்சமாயிருக் கக்கண்டு தனக்குள் ஆழ்ந்தசிந்தையுடன் யோசிக்கலுற் றார். அது என்னவென்றால் உத்தராயணம்பிறந்து, முதற் பாகத்திலல்லவோ நம்மைசனியன்தொடர்வதாகசொல்லிப் போயினன்; அவன் இதுவரையிலும்வரவில்லையே! அப்படி வாராதிருப்பதற்குக்காரணம்யாதென்றால்; நாம் அன்னவ னுக்குக் கொடுத்திருக்கிறவரத்தின்செருக்கினலல்லவோ; அவனவ்வித அகம்பாவங்கொண்டு, நம்முடைய எதிரில் சரிசரியாகநின்று, அகடவிகடமாகப்பேசி வீணை வீரி யங்களைக்கூறி, டம்பாகாரமாகப்போயினன். அவ்விதமா ய்ப்போகப்பட்ட நாசகாலப்பேயானது பானையையுடை த்துக்கொண்டுபோனதுபோலப் போனவனேயன்றி வே றில்லை. இனிமீது அவன் வருவதாவது நம்மைப்பிடிப்ப தாவது அவன்கரத்தினிடமாக நாம் சிக்குவதாவது என் னமமதை! என்னகர்வம்! அது எங்கேயிருக்கின்றது

நெருப்பண்டையில் ஈயைப்போன்ற அந்தப்பேய்வந்து மொய்க்குமா? என்ன இது! அப்படி அவன்வந்தாலும் விளக்கில்வீழ்ந்து தத்தளிக்கும் விட்டிற்பூச்சியைப்போல் மசமசவென்று பொசுங்கிபோகோனா! இனியவன் வருவதாக ஏற்படவேயில்லை, ஆனாலும், எந்தபுற்றில் எந்தப்பாம்பிருக்குமோ! அதையாவர்தான் அறிவார்கள்;மேலும் "கூரம்பாயினும் வீரியம்பேசேல்" நாமவனை, வெற்றிகொண்டபிறகல்லவோ வீரியங்கள்பேசவேண்டும்; ஆகவே நாம் எதற்கும் முன்ஜாக்கிரதையாகவேயிருக்கவேண்டும், "வெள்ளம்வருமுன்னமே அணையும் போடவேண்டும்" "காணிச்சோம்பல் கோடிச்சேதம்" அற்பமாகியநெரிஞ்சில்முள் தைத்தாலும் குனிந்துதான் பிடுங்கவேண்டுமல்லவா;எப்போதும் அசட்டைத்தனமாகயிருக்கக்கூடாது, நாம் இனிமீது எவர்கள் கண்களிலும்தெரியாமல் ஒளித்துக்கொண்டிருப்பதுவேநலம் அதுவே முக்கியமான யோசனை என்றிவ்விதமாகப் பற்பல எண்ணத்தையிட்டுக்கொண்டு, தனக்குள்தானே தீர்மானித்து, அந்தர்த்யானமாக ஆகாயத்தினிடத்தே மறைந்தருளினார்.

அப்படிக்கு மறைந்து, சின்மயானந்த ஜோதிஸ்வரூபியாக மேகமண்டலம், வாய்வுமண்டலம், சூரியமண்டலம், சந்திரமண்டலம், நக்ஷத்திரமண்டலம், அக்கினிமண்டலம்கடந்து, அந்தகாரமாக இருக்கும் இருளிற்கலந்து, சற்றுநேரமிருந்தார். மறுபடியும் யோசிக்கலுற்றார். அதாவது, ஆஹஹா! என்னயிது! நாமென்னவகைகேடாக வந்தகப்பட்டுக்கொண்டோமே, ஆத்திரக்காரனாகிய "அவசரக்காரனுக்கு புத்திமட்டு" என்பதுபோலாச்சுதே! "கோறிப்போனவன் குறுக்கேவந்தது" போலும் நாமே இவ்விடத்தில்வந்து நம்மதிமயக்கத்தினாலகப்பட்டுக்கொண்

டோமே; ஓ ஹோஹோ! அந்தப்பாவியாகிய சனியன் இந்த நக்ஷத்திரமண்டலத்தில்தானே எப்போதும் குடிகொண்டிருக்கிறான். ஐயையோ இதென்ன! நாமே அவன் கிட்டவந்து சிக்கிவிட்டோமே! இனியவன் எட்டிப்பிடித்துக்கொள்வானே; நாமினிமீது இவ்விடத்தில் அரைக்ஷணமாகினும் இருக்கவேகூடாதென்று, கிலிபிடித்தவர்போல, திடீரென்று பூமியைநோக்கிக் கீழிறங்கினார்.

அப்படி சிவபெருமான் இறங்கியதும் ஓட்டமும்நடையுமாகக் காட்டில்வந்தகப்பட்டுக்கொண்டு, தேகம் வெளுத்து வியர்க்கவும், தாகமும், இளைப்பும், களைப்பும், உண்டாகி மிகுந்தகஸ்திகளடைந்து, மனம்போனவழியாக வருகையில், அவ்விடத்தில் பஞ்சகௌவியாதிகளைக் கண்ணிற்கண்டு, அதனருகில் வந்துசேர்ந்தார்.

## 13-வது சருக்கம்.

## ஸ்ரீசிவபிரான் பஞ்சதீர்த்தமடைதல்.

அந்த மஹாநதியின் மஹத்துவம் யாதெனில், ஆதியில் கௌதமரிஷியானவர் பிதுர்யாகம்செய்வதன்பொருட்டாக நியமித்து, பால், தயிர், நெய், கோமயம், சாணம் ஆகிய இவை ஐந்தும், ஐந்துநதிகளாக வுண்டாக்கி; கோதுமை, நெல், துவரை, பயறு, கடலை, மொச்சை, எள்ளு, கொள்ளு, உளுந்து முதலாகிய ஒன்பதுவித நவதானியவகைகளையும், அங்கு விளைவிக்கச்செய்து, செந்தாமரை, வெள்ளல்லி, சண்பகம், வெண்காந்தல், முல்லை, வெண்டாமரை, கருங்குவளை, மந்தாரை, செவ்வல்லி முதலாகிய ஒன்பதுவித புஷ்பவிருக்ஷங்களையும் ஆங்குவிளைவித்து

எருக்கு, முருக்கு, கருங்காலி, நாயுருவி, அரசு, அத்தி வன்னி, அருகு, தர்ப்பை என்னும் நவவிதமாகிய சமித்தைகளையும் அவ்விடத்தில் விளைவித்து, இன்னும் பலவிதமான சோலைகளும், அந்தயிடத்திலுற்பத்திசெய்து, இருகோணம், முக்கோணம், ஐங்கோணம், அறுகோணம், அஷ்டகோணம், பனிரண்டுகோணம், பதினாறுகோணம், வட்டம் சவுக்கமாகிய ஒன்பதுவித ஓமகுண்டங்களை ஆங்கமர்த்தி, வெகு பெருமையோடு,பிதுர்யாகம்செய்து, தன் பிதுர்தேவதைகளுக்கும், தேவர்களுக்கும், நவக்ரஹங்களுக்கும் அவிர்ப்பாகம்கொடுத்து, யாகபூர்த்திசெய்த முக்கியமான பஞ்சதீர்த்த க்ஷேத்திரத்தின்கண் பரமசிவன்வந்து அந்தநதியில் ஸ்நானம்செய்து, தாகமருந்தி, இளைப்பாறி, அங்கிருந்த ஓர் வன்னிமரத்தின் நிழலில் சற்றுநேரம் வீற்றிருந்து அவ்வன்னிமரத்தின் வளங்களைக் கண்களால் நோக்கி அப்போது தனக்குள்தானே யோசிக்கலாயினர்.

ஆஹா! ஹா! இதென்ன விச்தைபொருந்திய இவ்வனத்தின்கண், நவதானியங்கள் விளைவதும், நவவித புஷ்பத்தின் மரங்களும், செடிகளின் செழிப்பும், நவவித சமித்தைகளின்வளமும், நவ ஹோமகுண்டங்களும், பஞ்சகவ்யதீர்த்தங்களும், இவ்விடத்தின்கண்ணிருப்பதால், இது நவக்ரஹங்களின் ஸ்தானமாயிருக்கிறது. இதுவுந் தவிர நாம்வசித்திருக்கும் வன்னிமரமாகப்பட்டதோ சனியனுக்கு இருப்பிடமானதல்லவா! ஓஹோஹோ! இனிமீது சற்றேனும், இவ்விடத்தின்கண்ணிருக்கவும் தகாது! தகாது! நாம் எங்கேபோனாலும் அவன் இருக்குமிடத்திலேயே நாமேவலுவிற்போயகப்பட்டுக்கொள்ள வேண்டியதாகவே நேரிடுகின்றது, ஆஹாஹா! அவன் பொல்லாத மா

வக்காரனாகவே யிருக்கின்றான். இப்போது இவ்விடத்திலேயே நம்மைப் பிடித்துக்கொள்ளுவான்போலிருக்கின்றதே! ஆகையால் இனிவேறே அதற்குத்தக்கயோசனை செய்யவேண்டியதாக யிருக்கின்றது, அதாவது நம்முடைய சுயரூபத்தைமாற்றி, ஏதாவது வேறுவடிவங்கொண்டு, அவன் கண்களுக்கு நாமகப்படாமல் இந்தபொழுதுமுழுவதும் மறைந்துகொண்டு காலங்கழிப்பதே நலமானயுக்தியென்று எண்ணங்கொண்டிருக்கையில், ஒன்று யோசிக்கலாயினர்.

---

## 14-வது சருக்கம்.

## ஸ்ரீசிவபிரான் மகிடாரூபங்கொள்ளல்.

அந்தவேளை சூரியனானவன் இனி சிவபிரான் படும்படியான கஷ்டதுன்பங்களைத் தனது கண்ணுறப்பார்த்து சகிக்கக்கூடாதவராக மேற்றிசையில் அஸ்தகிரியிற்போய் மறைந்தார்.

அதுசமயம் மாட்டுப்பொங்கலிட்டுப் பூசைசெய்து, மாடுகளை வேடிக்கைகள்செய்கிற தருணமாதலால், பசு, எருது, எருமைகிடாக்க ளாதிதன் கன்றுகளையும் கும்பல் கும்பலாகக் கூட்டியோட்டிக்கொண்டு, சிறுவர்கள் வீட்டைநோக்கிவந்தார்கள். அதனைப் பரமசிவன் தன்கண்ணினாற்பார்த்து, இதுதான் நல்லசமயமென்று திடுக்கென்று தன்னுடைய சுயரூபத்தைமாற்றித்தானும் ஒரு எருமைகிடாவாக வடிவெடுத்து அந்த எருமைக்கூட்டத்துள் புகுந்துக்கொண்டார்.

அப்போது அந்த மாடுகளைமேய்க்கும் சிறுவர்கள், தங்கள் தங்கள் மாடுகளையோட்டிக்கொண்டு, அவரவர்கள் குடியிருக்கும் வேடச்சேரியில் வந்து சேர்ந்தார்கள்.

அப்படி சேர்ந்த மாடு கன்றுகளும் அவாளவாள் வீட்டின் கட்டுத்தறியிற்போய்ச்சேர்ந்து அவரவர் தம் பால் கட்டிவைத்து, தொட்டியில் ஜலமும், தவிடும், பில்லும், ஆகாரம்கொடுத்து பாலை செம்பிற்கரந்து, பொங்கற்சாதத்தில்விட்டு, நைவேத்தியம்செய்து, படைத்து, சந்தனம், குங்குமம், நெத்திகளில் அணிவித்து, பூமாலை, வடமாலை, தேங்காய்மாலை, அறுகுமாலை, கரும்புமாலைகள் முதலானதும் கழுத்திற்சாத்தி, தூபதீபம்கொடுத்து மாடுகளை ஆட்டங்காட்டி வேடிக்கையாக ஓட்டினார்கள். அப்போது, சிவனுருவாகயிருந்த கிடாவானது ஒருவர்வீட்டிற் சொந்தமாகப்போய் நுழைவதற்கு இடங்கிடையாமல் சேரியில் வெளிப்புறமாகநின்று, தலையை நீட்டிநீட்டி, முறைத்துக்கொண்டிருக்க, அதனை சிலவேடுவச் சிறுவர்கள்பார்த்து, இது ஏது ஒருதிருட்டுக்கிடாமாடு ஒண்டியாகவந்திருக்கின்றதே! இது வீடுகள்தோறும் நுழைந்து, நுழைந்து ஹதஞ்செய்துவிடுமே! அடித்துத்துரத்திவிடுவோமென்று, தடிகளும், தாம்புகளும், கல்லுகளும், கட்டிகளும், கையிலெடுத்துக்கொண்டு, அடியடி, பிடி பிடி, கட்டு கட்டு என்றுசொல்லி, நையப்புடைத்து துரத்தினார்கள். சிலர் இதைப்பிடியுங்கள் எருதாட்டமாடுவோமென்பார்கள். சிலர் இதைப்பிடித்து தாம்பினாற் கட்டிவைத்து, நாளையதினம் ஏர்கட்டி யடிக்கலாமென்பார்கள். இப்படிக்கு பற்பலவிதமாகச்சொல்லி அடித்துத் துன்பப்படுத்தினார்கள். அவர்கள்செய்யும் துன்பங்களை சகிக்க மாட்டாமற் அந்த எருமைக்கிடாவானது காட்டின் மார்

க்கமாக ஓடிப்போய்விட்டது; அப்படி ஓடியும் ஓரிடத்தில் நிற்காமல் காடெல்லாந் திரிந்து, திரிந்து, அலைந்து வேர்த்து விடாய்த்து இரவு பதினைந்துநாழிகைவரையில் மிகுந்த கஸ்தியடைந்து, கடைசியாக ஒரு சிறிய குட்டையைக்கண்டு அதில் சேறும் நீரும் கோரையுமாக நிறைந்திருக்க, அதனைத் தனது கண்ணினாற்பார்த்து, பொழுது விடியுமளவில் அதிற்படுத்துக்கொண்டு மறைவாகக் காலங்கழித்துக்கொள்ளுவோமென யோசனைசெய்து, சேறுந்தண்ணீரும், கிடாவுக்கு சிநேகிதமாதலால், அந்தக்குட்டையிலிறங்கி, தனது திரேகமுழுவதும் நீரில் மூழ்கி இருக்கும்படி படுத்துக்கொண்டும், சிரசைமட்டும் மேலேதூக்கிக்கொண்டும், காதுகளை நிமிர்த்திக்கொண்டும், கண்களை முழிமுழித்துக்கொண்டும், பெருமூச்சு அடிக்கடிவிட்டுக்கொண்டும், சனிபகவான் பயம் மனதிலுறுத்த, எப்போது பொழுதுவிடியுமோ அந்தசனிசொன்ன கெடுவு எப்போது தலையுமோவென்ற எண்ணத்தோடு அந்த குட்டையிலேயே படுத்துக்கொண்டிருந்தார்.

## 15-வது சருக்கம்.

## ஸ்ரீ சிவபிரான்

## வேடுவரால் துன்புறல்.

அப்போது பொழுதுவிடிய ஒருமுகூர்த்தநாழிகையிருக்கையில், அந்தவேடச் சேரியிலுள்ள வேடுவஸ்திரீகள் தம்தம் மட்பாண்டங்களை, இடையிலும், தலையிலும்வைத்துக்கொண்டு, ஜலம்எடுப்பதற்காக, வழக்கப்படி அந்த கோரையடர்ந்த குட்டைக்குவந்தார்கள், வந்ததும் குட்

டையிலிரங்கி நீர்மூகப்பார்க்கும்போது, அதில் எருமைக்கிடாவானது படுத்துக்கொண்டும், சேறும்தண்ணீருமொன்றாகக்கலங்கியிருப்பதாலும், குளிக்கவும், குடிக்கவும், ஜலம் உபயோகப்படாமலிருப்பதால், அந்த எருமைக்கிடாவைநோக்கி, தங்கள்வாயில்வந்தபடிக்கெல்லாம் துர்பாஷையாக பற்பலவாறுதிட்டியும், அதட்டியும், ஓட்டியும், கற்களைஎடுத்து அடித்தும், மண்ணைவாரி எறிந்தும், அந்தக்கிடா எழாமலிருப்பதைக்கண்டு, அவரவர்கள் வெறும்பாண்டங்களுடன் கூகாவென்று இரைச்சலிட்டுக்கொண்டு, சேரியில்வந்து, தங்கள் தங்கள் கணவரிடம் அங்குள்ள விஷயங்களைத் தெரிவித்தார்கள்.

அவர்களதனைக்கேட்டு, அதிககோபத்தோடு, சரேலென்று எழுந்துபோய், தங்களுக்கு எஜமானாகிய ஞானமூரடவேடனோடு முறையமிட்டார்கள். அவன் அந்தவசனங்களைக் காதிற்கேட்டவுடனே ஐயையோ இது என்ன அனியாயம், இப்போது அருநீரானகாலமாயினவே, அதைவிட் இந்தவேறே ஜலம்கிடையாதே, இத்தனைபேர்களுமெத்தனையோ ஜீவன்களும் ஜீவிக்கவேண்டுமே? இதற்கெப்படி! மெத்தவும் கஷ்டமாய்விட்டதேயென்று, மனவருத்தத்துடன் வேடுவர் கூட்டங்களோடு, தானுங்கூடகூடி ஓடிவந்து, குட்டையைப்பார்க்கையில், ஜலம் மெத்தவும் ஆபாசமாயிருப்பதால் ஜலம்தெளிந்தால்தான் உபயோகப்படுமென்று யோசித்து, ஞானமூரட வேடனானவன், மற்ற வேடுவக்கூட்டங்களைப்பார்த்து, அந்த எருமைக்கிடாவைக் குட்டையைவிட்டு வெளிப்படுத்துங்களென்று உத்திரவுசெய்தான்.

அதைக்கேட்டவுடனே வேடுவர்கள் கோபத்துடனே கண்களைநெறித்து, பற்களைக்கடித்து, பதபதப்புடன்

தடியும்தாம்பும் எடுத்துக்கொண்டு,குட்டைக்குள்ளிறங்கி, அதட்டியோட்டினார்கள். அப்பவும் கிடா எழாமலிருக்க, மறுபடியும் கைகளாலும், கற்களாலும், தடிகளாலும்,தாம்பாலும், அடியடியென்று, இடுப்புடைய நையப்புடைத்தார்கள். அப்போதும் கிடாவானது கொஞ்சமாகிலும் நகராதிருக்க பின்னும் சிலர் அதன் இரண்டுகொம்புகளையும், காதுகளையும், பிடித்து முன்னுக்கு இழுத்தார்கள். சிலர் வாலைப்பிடித்திழுத்து முறுக்கினார்கள். அப்போதும் அந்தக்கிடாவானது ஒன்றும் சட்டைபண்ணாமலும், சளைக்காமலும், அடித்த அடிகளும், அதன்வலிகளும், தனக்கு சுமாராகாமல் மலையைப்போல அப்படி இப்படி அசையாமல், தலையை நீட்டி நீட்டி, ஆட்டி ஆட்டி, பெருமூச்சுவிட்டுக்கொண்டு, கண்களை மிரள மிரள விழித்து, முறைத்துக்கொண்டிருக்கக்கண்டு வேடுவர்கள் உற்றுப்பார்த்து அப்பப்பா இதுவென்ன எமனேறும் கிடாவோ! திருட்டுக்கிடாவோ! சண்டிக்கிடாவோ! இதையினி வெட்டுங்கள், குத்துங்கள், கொல்லுங்களென்று பற்பல விதமாகப்பேசிக்கொண்டார்கள். அப்போது திருநேத்ரதாரியாகிய பரமசிவன் தன்னை இப்சிக்கும் இம்சைகளெல்லா மந்த ஞானமுரடன் மேல்படவேண்டுமென்று நினைக்கவும் அச்சமயம் அந்த வேடுவர்கள் எருமைக்கிடாரூபமாயுள்ள அந்த பகவானைசெய்த இம்சைகளெல்லாம், தன்மேற்படாமல் ஞானமுரடவேடுவன்மீதில்பட, அப்போது ஞானமுரடவேடனானவன் வேடர்களைநோக்கி இனியதை யாதொன்றும் அலட்டவேண்டாம்; யாதொருதீங்கும் செய்யாதீர்கள். நீங்களந்த எருமைக்கிடாவை அடிப்பதெல்லாம் என்பேரிற்படுகின்றது; அதனாலென்திரேகமெல்லாம் வலிக்கின்றது; என்னகாரணமோதெரியவில்லை. அதை

யோசிக்குமளவில் இது இவ்வுலகிலுள்ள கிடாவாகக் காணப்படவில்லை. இதனிடத்திலேதோ ஒருமகிமை இருப்பதாக தெரியவருகின்றது. சற்று நீங்கள் நிதானியுங்கள், நிதானியுங்கள் என்றுகூறி, தானந்தகிடாவின் முன்னிலையிற்போய் நின்றுகொண்டு தன்னிரண்டுகைகளையும் ஏந்தி நீயாரோ! நீ ஏகமூர்த்தியானவனோ! என் சோகம்தீர்க்க வந்தவனோ! நீ ஒண்டியாக தனித்துநின்றவனோ! நான் கண்டுபணிந்துகொள்பவனோ! நீ தன்னந்தனியான ஏகவஸ்துவாய்நின்றவனோ! நீஎனக்கு வரத்தைத்தருபவனோ! நீதனித்தொருவனானவனோ! நீஎன்மனத்தழுக்கையறுப்பவனோ! நீஒருருவமானவனோ! நீஎன்கர்மவினை தீர்ப்பவனோ! என்றிப்படிமூரட்டுத்தனமாக ஸ்தௌத்தியம்செய்துகொண்டிருக்கையில் ஆயிரம்கிரஹணங்களும் பிரகாசிக்க, சிவந்தநிறத்தோடுங்கூடி சூரியபகவானானவன் சாக்ஷாத் பரமசிவனுடைய காட்சியையும், தன குமாரன் சனிபகவானுடைய காட்சியையும் இன்றையதினம் நாம் பார்க்கப்போகிறோமென்பதாக ஆவலுடனே கிழக்குதிக்கில் உதையமாகினார்.

---

## 16-வது சருக்கம்.

# ஞானமூட வேடுவன் மோக்ஷம்.

உதையமாகினதும் சனிசொன்னகெடுவு ஒழிந்துவிட்டதென்று எருமைக்கிடாவாகயிருந்த பகவான் மிக்க குதூஹல சந்தோஷமடைந்து, குட்டையைவிட்டுத் தானாகவே எழுந்திருந்து, மெல்லென நடையுடன் நடந்து குட்டையின்கரையில் வந்துநின்று, தன் தேகத்திலிருக்கும் சேற்றையும் தண்ணீரையும் உதறிக்கொண்டு நின்றார். அத்

தருணத்தில் ஸ்வர்ணரத்தினகிரீடமும், இருசெவிகளிலும் மகரக்குழைகள் பிரகாசிக்கவும் சகல ஆடையாபர்ணலங்கிருதாக தனுர்சூலம் கரத்திலிலங்க, கறுத்ததிருமேனியோடு, காகவாகனத்துடன் சனிபகவான் அவ்விடத்தில் தோன்றினார்.

அப்படி பிரசன்னமான சனிபகவானைக்கண்டதும், உடனே சாக்ஷாத் பரமசிவனானவர், கிடாரூபத்தையொழித்து, சடாமகுடம், மகரபூஷணம், ஆரகேயூரம், அக்குமணிகள், முப்புரிநூலும், நாகாபரணமும், புலித்தோலுடையும், சதுர்புஜங்களும், மான், மழு, திரிசூல, கபாலகரமும், தூளிதமான திருமேனியுடன் சுயரூபமாக பரமேஸ்வரரும் பிரசன்னமாகினார்.

இவ்வாறு தோன்றியதும் ஞானமூடவேடனானவன் அத்தரிசனங்கண்டமாத்திரத்தில், தனது கண்களினின்றும் ஆனந்தபாஷ்பம்பெருகிச் சிதற, தேகமகத்யந்தமும் புளகாங்கிதங்கொண்டு, அடிக்கடி தீர்க்கதண்டம்செய்து, தன் இருகரங்களினாலும் கொண்டானடித்து, ஆனந்தம் பிரமானந்தமென்று கூத்தாடிக்கொண்டு, சுவாமியைப் பார்த்துப் பார்த்து, சிரசை யாட்டி யாட்டி, நீதானா! நான் வெகுநாளாகக்கோறி கூவிக் கூவிக்கொண்டிருந்த தனியானவன் நீதானா! ஒருவனானவன் நீதானா! ஏகரூபனானவன் நீதானா! ஒண்டியானவன் நீதானா! நீதானாவென்று வெறிகொண்டவன் ஆடுவதைப்போற் கூத்தாடிக் கூத்தாடிக் கதறினான்.

அன்னவனைப் பரமசிவன் தன் கிருபாவிழிகளால் நோக்கி, தனதருகிலழைத்து, அடா எனதன்பனே! நீ முரட்டுத்தனமுள்ள வேடுவஜாதியிற்பிறந்து, சகல வேத புராண சாஸ்திரங்களை யறியாதவனாயிருந்தும், நம்மை

சதாகாலமும் நிர்மனதாய் வெகு பயபக்தியோடு எகனென்றும், ஒண்டியென்றும், தனியனென்றும் பாராட்டி வரும்வாரும் வரந்தாரும் தாரும் என்று பஜித்துக்கொண்டிருந்த கியானப்படிக்கே, நாம் தனியாகவே வந்தோம். நம்மை நீகண்டுதரிசித்தபடியால் சகலபாப சாபகர்மானுசாரங்கள்நீங்கி நீபரிசுத்தனுகினை; ஆகையாலுனக்கிப்போது மேலாகியபதவி அளித்தோம். மற்ற வேடுவர்களும் "பூவோடுகூடியநாரும் மணம்பெற்றதுபோல" உன்னுடன் கூடி நம்மைதரிசித்தபடியால், அன்னவர்கள்யாவருமிந்தக் கைலாயமலையின்கண் எப்போதும் தவச்சித்தர்களாகவும் பக்தர்களாகவு மிருக்கக்கடவதென்று, வரத்தைத் தந்தோமென்றருளினர்.

அந்தப்படியே அங்கிருந்த வேடுவர்களியாவரும் சித்தர்களாகினதுமன்றி, ஞானமூடவேடனும் சொர்க்கவாசியாகப் போய்ச்சேர்ந்தான்.

ஆதன்பின்பு சிவபெருமானுகிய எம்பெருமான் தமதருகில் எழுந்தருளியிருக்கும் சனிபகவானைத் திரும்பி நோக்கிச்சொல்லலுற்றார். ஹோ!சனியனே!இப்போது வந்தாயே நீ மஹா சாமார்த்தியவான்தான் உன்னைப்போல சொன்னசொற்படிக்குமுடிக்கிறவன் வேறொருவருமில்லை; ஆஹாஹா நீவெகுதீரன், மிக்க சூராதிசூரன், நம்மை என்னமோ கிள்ளுகீரையாகநினைத்து, மிக அலக்ஷியமாக என்னைபிடிக்கிறேன் பாரென்று அன்று வல்லமையோடு சபதம்கூறினையே! அந்தசபதம் இப்போது எங்கே? இவ்வளவுதானே நீ! என்றூர்.

அதற்குச் சனிபகவான் மான்மழுவேந்திய சிவபிரானை கண்ணாரக்கண்டு சுவாமிநான் எவ்வாறு தெரிவித்தேனே அவ்வாறேதான் தங்களைப் பிடித்துக்கொண்டேன்

அப்படி நான்சொல்லியபடி தங்களைபிடியாமல்விடுவேனோ என்றார்.

அதற்கு சிவபெருமான் இனிமேல் என்னைப்பிடிக்கக் கெடுவேது, துடர்பேது, தவறினவன் தவறினவன்தானே யென்றுசொல்ல; சனிபகவான் என்னையனே! நான்சொன்னபடிக்கே உம்மைப்பிடித்து விட்டுவிட்டேனே! அப்படி பிடிக்காவிட்டால், தங்கள் முன்னிலையில் இவ்வளவு இறுமாப்புடனும், தைரியத்துடனும் வருவேனோயென்று சொல்லவே? அதற்கு சிவபிரான், இதென்ன ஆச்சரியமாயிருக்கின்றதே! எப்போது என்னைப்பிடித்தாய், எப்போது என்னைவிடுத்தாய்! பொய்சொல்லாமல் மெய்மொழியாகக் கூறுவாயெனவும், அதற்கு சனிபகவான்,

தேவதேவனே! மூவர்முதல்வனே! சங்கராந்திதினம் உதயகாலத்தில் நான் தங்களிடம் தெரிவித்தகாலத்திலேயே தங்களைப்பிடித்தேன், இப்போதுதான் விடுத்தேனென்று தெரிவித்தார்.

இதென்ன அற்புதம்! சரி, நீ எந்தரூபமாகவந்து என்னைப்பிடித்துக்கொண்டாய் தெரிவியென்றார். அதற்கு சனிபகவான் சொல்கிறார். எனதையனே, என்னிட திசாபுத்தி அந்தர சூக்ஷ்மத்தின் வழியாகவே தங்களைப் பிடித்துக்கொண்டேன் என்றுகூற; சிவபிரான்யோசித்து, இதென்னடா நீ அகட விகடமாகப் பேசுகின்றனையே? நான்தான் எவர்கண்களுக்கும் சிக்காமல், மாயாரூபமாக மறைந்திருந்தேனே? நம்மையாவது நீகண்டுபிடிப்பதாவது, என்னடா இது "கற்றவித்தையை பெற்றதகப்பனோடு காட்டுவதுபோல" புரட்டாகப்பேசுகின்றனையே! நல்லதிருக்கட்டும், அப்படி நம்மை நீ கண்டுபிடித்தது எப்படி! அப்படிபிடித்து, என்னை நீ என்னென்னசெய்தாய், நான்

எங்கெங்கு எப்படி எப்படியிருந்தேன் இவைகளை விபரமாகச்சொல் பார்க்கலாமென்னவும், சனிபகவான், எனையனே! நான் உம்மைப்பிடித்து, ஆட்டிவைத்த விபரம் சொல்லுகிறேன்; அதை நன்று கவனித்து கேளும் என்று கூறத்தொடங்கினர்.

முதல்முதல் தாங்கள் கைலையங்கிரியில் தங்கள்தேவியாராகிய எனதன்னைக்கும், தங்களுக்கும் மனவிருத்தத்தையுண்டாக்கினதும், ஆலயத்தைவிட்டு வெளிப்படுத்தி கோபுரவாயலைக்கடந்துவந்ததும், நீங்களிருவரும் ஒருவர்க்கொருவர் மானபங்கம்விட்டு, நடுத்தெருவில் ஊடலாடினதும், சிறுவனாகிய சுந்தரமூர்த்தியின் சொல்லைக் கேழ்க்கும்படிசெய்ததும், இருவரையும் வெவ்வேறாகப் பிரித்ததும், அதிக பயமனதோடு ஆகாயத்திலனாவி ஒளியச்செய்ததும், மறுபடியும் பூமியிலிரங்கி காடுமேடு செடிகளோடு அலைந்து பற்பலவாறாய்த் திரியும்படிச்செய்ததும், கௌதமவனத்தில் வன்னிமரத்தின்கீழ் உட்கார்ந்துகொண்டு ஆலோசித்ததும், பயந்து உடனே எருமைக்கிடாவடிவாகி வேடர்சேரியில் பங்கப்பட்டதும், சேருந்தண்ணீருமுள்ள கோரைப்படர்ந்து நிறைந்துள்ள குட்டையிற் புகச்செய்ததும், இழிதலத்தோராகிய வேடராலும், வேடுவஸ்திரீகளாலும் திட்டவும் அடிக்கச்செய்ததும், இவைகளெல்லாம் என்மாய்கையேயென்று அறிந்துகொள்ளுங்கள் சுவாமி, என்கெடுவு தீர்ந்தபடியால் தங்கள் தரிசனங்காணவந்தேன் அடியேனும்மைப்பிடிக்காவிட்டால் இப்பேர்ப்பட்ட கஷ்டங்களும் இம்சைகளும், தமக்கு நேர்ந்திராது என்றுசொன்னர் சனிபகவான்! இவைகள் யாவையும் சிவபிரான்கேட்டு, ஆஹா! அப்படியாவென்று தன் கைவிரலை தன்மூக்கின்மீதுவைத்து, சிரமசைத்து புன்சிரி

ப்புடன் சந்தோஷித்து, சனியனை தன் கிருபாவிழிகளால் நோக்கி, ஹே! சனியனே! உன்னுடையவல்லபமும் சாமார்த்தியமும், மகாமாய்கையும் நான்மெச்சினேன்! மெச்சினேன்! சர்வவீரபரமனாகிய நம்மையே யாமறியாது சோதித்தவனாகையால் உனக்கின்றுமுதல், சனீஸ்வரனென்றும், சனிபகவானென்றும், கலிபுருஷனென்றும் நாமதேயங் கொடுத்திருக்கிறோம் தவிற நமது ருத்ராம்சமும் கிஞ்சித் கொடுத்திருக்கிறோம். இதுகளை நீ கைக்கொண்டு, இனிமேல் பிரமாதிதேவர்கள் முனிவர்கள்சிவனடியார், விஷ்ணு அடியார்களையும், கற்புள்ளஸ்திரீகளையும், உன்னையும், உன்னைச்சேர்ந்த நவக்ரஹங்களையும் பூசித்து வருகிறவர்கள்பேரில் நீ அதிகமாக உன் குரூரங்களை விஸ்தரிக்காமலும், தக்கபடி அதிகாரம் நடத்திவருவாயென்று திருவாய்மலர்ந்தருளினார். அப்போது சனீஸ்வர பகவானானவர் பரமசிவத்தின் திருவருளை மேற்கொண்டு, சிவபெருமானைவணங்கி, அவர் விடைபெற்று, தனது இருப்பிடம் போய்ச்சேர்ந்தார். அப்பால் பரமசிவனானவர் அவ்விடத்தைவிட்டு அந்தரமார்க்கமாக கைலாயத்திற்கு எழுந்தருளினார்.

## 17-வது சருக்கம்.

## நாரதர் ஆகூஷி.

கலகத்தையே சதாவிளைவிக்கக்கூடிய நாரதபிரம்மம் இவைகள்யாவையும், அந்தரமார்க்கமாகவேயிருந்து, கவனமாய்ப்பார்த்துக்கொண்டிருந்து வருங்காலம், நிகழ்காலம், செல்லுங்காலமாகிய திரிகாலவர்த்தனியும், சொர்க்க மத்திய பாதாளமென்று சொல்லப்பட்ட திரிலோகங்களை

யும் தினந்தினம் சஞ்சரித்து, ஆங்காங்கு நடக்கும் விஷயங்களையும், அதிசய வைபவங்களையும், கண்ணிறுற்கண்டு, யாதும் ஒளிக்காமல் அப்போதைக்கப்போது, அவரவர்களுக்கு சொல்லத்தக்க களங்கம்யாதுமில்லாத மனத்தினையுடையவராகியும், சகல புவனங்களையும் படைத்தருளிய பிரமதேவனுடைய நாவிற்பிறந்தவராகிய வேதபிராட்டியுமான ஸ்ரீசரஸ்வதாதேவின் புத்திரனுமாகியும், முப்பத்திரண்டு தந்திகள்பூட்டி பொன்மயமான மகரவீணையை மீட்டி, சப்த ஸ்வரங்களும், நவவித தாளங்களும், முப்பத்திரண்டு ராகங்களும், ஸ்ருதி, லயை பிசகாமலும், எழுத்து, சொல், யாப்பு, அணிஅலங்காரங்களோடும், பண்களையும் யாவர் மனமுங்களிக்குமாறு, ஹரிபஜனை, சிவபஜனை, சர்வ நாமசங்கீர்த்தனைகளையும் பாடி, பிரகாசிக்குந் தன்மை வாய்ந்தவராயும், சோடசநாம விநாயகருக்கு ரதசாரத்தியம்செய்யும் திறமையுள்ளவராயும், வேதசாஸ்திரபுராண தத்துவ, இதிகாச கலைக்கியானங்களை முற்றும் கற்றுணர்ந்து, தேர்ச்சியுற்றவராயும், சகலமான முனிவர் குழாம்களுட்சிறந்தவராகிய நாரதபிரமம் என்னும் மஹாமுனிவரானவர், தமதுசடைமுடிகள் குலுங்க, குண்டலங்கள் காதிற்றுலங்க, மார்பில் முப்புரிநூலிலங்க, வயிரானது குலுங்க, அக்குமணிகளசைந்தாட, இடையில்தரித்தபீதாம்பரம் நழுக, அதை அடிக்கடி எடுத்து சொருகிக்கொண்டாடும் திருமேனியிலணிந்த சந்தனமாகப்பட்டது வியர்வையினால் கலைந்து சிந்தவும், ஓட்டமும்நடையுமாக வாயு வேகம்போல் விரம்பவும் அவசர முள்ளவர்போல், கைலாயத்திற்கு வந்தருளினார்.

அதுவேளை ஜகதீஸ்வரியாகிய உமையபார்வதாதேவி தான் தனியாகவே பள்ளியறை மண்டபத்தின்கண் அமர்

ந்திருக்கக்கண்ட நாரதபிரமம் மகா பயபக்தி விஸ்வாசத்தோடு நமஸ்காரஞ்செய்து, அஞ்சலிபஸ்தனாய் தனதுவாயினிடமாக அநேக தோத்திரங்கள்புரிந்து ஸ்தௌத்தியம் செய்து நின்றனர்.

அதிசமயம் வந்த நாரதமுனிவரை அம்மன் கண்ணோட்டமிட்டு, ஆசிர்வதித்து, அப்பா நாரதமுனியே! வருக, வருக, மங்களமுண்டாகுக ஆசிர்வாதம் இந்த அதிகாலைவேளையில் வந்தகாரணமெதுவோ! என்ன அதிசயப்பொருட்டாகவந்தாயோ வந்தவிபத்தை சற்றும் ஒளியாமல் தெரிவிப்பாயெனவும், அதற்கு நாரதமஹாமுனிவர் தெரிவிக்கலாயினார்.

என்தாயே! மஹேஸ்வரி! பராபரி! மனோஹரி! தயாபரி! காலம் சந்தியாகாலமானதால் சிவதரிசனஞ்செய்து கொண்டுபோகலாமென்று வந்தேன்; அம்மணி! சுவாமி எங்கே! அவரைக்காணோமே சூரியனில்லாப் பகலைப்போலல்லவோயிருக்கிறது, சுவாமி எங்குபோயிருக்கின்றாரோ அடியேனுக்கு தாங்கள் தயவுசெய்து கூறவேண்டுமென்று கேட்கலாயினர். அதற்கு மஹேஸ்வரியாகிய மனோன்மணி! அப்பா! நாரதா! சுவாமியானவர் இந்தவிடத்தை விட்டுப்போய் ஒருபகலும் ஓரிரவுமாயிற்று; எங்கன்ம்போரோனு தெரியவில்லை; எங்குதான்போனாரென்கிற விஷயமும் தெரியவராது அவரும் யாதும் தெரிவிக்கவுமில்லையென்று சொல்ல;

அதற்கு நாரதமுனிவர், அம்மணி இப்பொழுது சுவாமியும்வருகிறதருணமாயிருக்கிறதேயென்று கூறவும்; அம்மன் நாரதரை நோக்கி வெகு ஆக்கிரமாகவும், மிக்க பரபரப்பாகவும், சுவாமி எதோ எதோ வருகின்றார் காணோமே; என்ன நாரதா பரிகாசமாக வார்த்தையாடுகிறாயாயென்

று சிறிதுகோபமாககேட்க, அதற்கு நாரதர் புன்னகை புரிந்து, அவர் விஷயம்தான் எனக்குத்தெரியுமே, என் இன்னும் வரக்காணோம் என்னவிசேஷம், நீ அதேகாரியத்திலிருப்பவனாயினவே; சகலமும் நீ அறிந்திருக்கவேணுமே; அப்படி நீதெரிந்துகொண்டு, நடந்தவைகளை ஆதியோடந்தமாகத் தெரிவிக்காவிடில் உன் வயிறுவெடித்து சிரமாகப்பட்டது பிளவுபட்டுப்போய்விடுமே! சுவாமி எங்கேபோயிருந்தார், போனதோரிடத்தில் என்னவிசேஷம் நடந்ததோ அவைகளை ஒளியாமலெனக்கு விபரமாகச் சொல்வா யப்பாவெனக் கேட்கவும்,

நாரதமஹாமுனிவர்பணிந்து சற்று புன்சிரிப்போடு, ஆதியோடந்தமாகச் சொல்லத்தொடங்கினார். கேளும் என து மாதாவே! ஞானமுரடனென்னும் வேடுவனொருவனுக்கு தாங்களில்லாமலேயேதானே அவனுக்கு மோக்ஷந் தரும்பொருட்டும், சனியன் கண்களுக்கு புலப்படாதிருப்பதற்கு ஏண்ணமிட்டு சாக்குபோக்குகள் சொல்லியும், தங்களுக்கு ஊடல் எற்படுத்தியும்,சுவாமியானவர் தங்களை விட்டுத்தனித்து, ஆகாயவெளியில் மறைந்து, அங்கும்வசியாமல் பூமியிலிறங்கி, காடு, மேடு, வனம், வனாந்திரங்களைக்கடந்து, மிருக்க கஸ்தியடைந்து, கௌதமராலேற்பட்ட பஞ்சகௌவ்யநதியில் சஞ்சரித்து,அங்கும்நிலைக்காமல் தன்னுடைய சுயரூபத்தைமாற்றி, ஒரு எருமைக்கிடாவாக வடிவெடுத்து, வேடுவச்சேரியிற் பிரவேசித்து, அங்கிருக்கும் அசுசியானவேடர் வேடுவச்சிகளாற் கண்டவாறு திட்டுண்டு,மொத்துண்டு,இடிப்பொடிய புடைக்கப்பட்டு, துரத்தப்பட்டு, அங்கேயும் நிலைக்காமல் இரவுமுழுதும் சேரும் தண்ணீரும் கோரைகளும்படர்ந்த ஓர்சிறிய குட்டையில் பதுங்கி படுத்திருந்து, அதில் ஜலமெடுக்க

வந்த ஈனத்துவபெண்களால், கல்லாலும் கட்டிகளாலும் மண்ணாலும் மட்டைகளாலும், அடிக்கப்பட்டும், மற்ற வேடுவர்களால் தங்கள் கரங்களினாலே கொண்டமட்டும் தடியாலும், தாம்பாலும், கையாலும்,காலாலும், அடிக்க அந்தத் துன்பங்களையெல்லாமடைந்தும், தானணிந்திருந்த திவ்யாபரணங்களெல்லாம் பலவாறாகச் சிதறப்பட்டும் போக்கடித்தும், இன்று பொழுதுவிடிந்து உதயகாலையிற் சூரியன் உதயமானதும் அந்த வேடுவச்சேரியிலிருந்த வேடுவர்களுக்குத் தலைவனாகிய ஞானமுரடவேடுவனுக்கு மோட்சங்கொடுத்து தீர்ந்தபிறகு சனியனைக் கண்ணுற்று அவனது மாயாமாய்கையைத்துலைத்து அவனுக்கு வேண்டிய வரங்களையுங்கொடுத்து கடைசியாக அதோ சுவாமி வருகிறாரம்மா இனிதாங்களிருக்கும்படியான ஜாக்கிரதையிலிருந்துகொண்டிரும்; என்தாயே மஹேஸ்வரி! தயாபரி! அடியேனாற்சொல்லப்பட்ட மேற்படி விஷயங்களை நான் தெரிவித்ததாக தாங்களேசொல்லவேண்டாம். மேலும் சனிக்கும் சுவாமிக்கும் நடந்த சம்பாஷணைகளான வர்த்தமானங்களை, அந்தரத்திலிருந்து அடியேன் அறிந்தவிஷயங்களை ஆதியோடந்தமாகத் தெரிவித்துவிட்டேன்; அதன்பொருட்டே தங்களைநாடி ஓடோடியும்வந்தேன். இனிமீது நான் இன்றையபொழுதிற்குள் உலகமெங்கினும்சஞ்சரித்துவரவேண்டியகாரியமிருக்கின்றது.ஆனபடியால், கால தாமதமாகின்றது யான்போய்வருகிறேன் என்தாயே யென்று கூறிவிட்டு நாரதமஹாரிஷியானவர் போய்விட்டார்.

அதன்பிறகு மஹேஸ்வரி நாரதரிஷி தெரிவித்தவிஷயங்கள்யாவும்கேட்டு, சுவாமியின்பேரில் மிகவும்வெறுப்புற்று மனஸ்தாபத்தோடு பள்ளியறைக்குட்சென்று, உள்

தாழ்ப்பாளை நன்றாயிறுக்கி மூடிவிட்டு, கதவைசாற்றிக் கொண்டு மிக்ககோபத்துடனிருந்தனர்.

---

## 18-வது சருக்கம்.

# அம்மன் திருக்காப்பு.

அகண்ட பரிபூரண சச்சிதானந்த சொரூபராகிய பரமசிவம் இப்பால் கைலாசத்தில்வந்து கோபுரவாசலைக்கடந்து, திருவாலயத்துட் பிரவேசித்து, பள்ளியறையின் வாசற்படியருகில்வந்துநின்று,சுற்றுமுற்றும்பார்க்கலாயினர். அந்தவேளையில் பள்ளியறையின் கதவுகள் மூடப்பட்டிருந்தது. அதை சுவாமியானவர்கண்டு, தமது கரத்தினால் கபாடத்தைத்தட்டினார். அது உள்புறமாகத் திருக்காப்பிட்டிருந்தது. உள்தாழ்ப்பாள் போடப்பட்டிருப்பதால், கௌரி பள்ளியறைக்குள்தானிருக்கிறாளென்றும், அன்னவளாலேயே மூடப்பட்டதென்றும் தெரிந்துகொண்டவராய் சொல்வதாவது,

அடிபெண்ணே பார்வதி! கௌரி! உமையவளே!என்று திருவாய்மலர்ந்தழைத்தனர். அதற்கு அம்மன் மறுமொழி தெரிவிக்காமலேயே மௌனமாயிருந்தனர். அப்படி தான் அழைத்தும் ஏன் பேசாதிருக்கின்றாயெனக்கேட்டும் பயனில்லாமற்போயிற்று. ஏன் இப்படி மௌனஞ்சாதிக்கிறாய் விஷயந்தானென்ன தெரிவி! என்றும் மறுபடி கேட்டதற்கு, அம்மன் அதற்கும் யாதொருவிடையும் பகர்ந்திடாதிருந்ததைப்பற்றி, மறுபடியுங்கதவைத்தட்டி உரத்தசப்தமாய் கதவு பிளவுபடும்படித்தட்டி, என்பெண்ணே இன்றையதினம் உனக்கதிக நித்திரையோ! ஏன் இப்படியான தூக்கம் ஏற்பட்டது, ஏதோ என்கண்ணே, கத

வைத்திறந்து நன்றாக உற்றுப்பார் நான்தான்வந்தேன் இதோ நீபார்!இதென்ன பொழுதுவிடிந்து என்னேரமாய் விட்டது பார்! கண்ணே பார்வதி! சீக்கிரமாக எழுந்திருந்துவந்து கதவைத்திற, என்று உரக்கக் கூச்சலிட்டார்.

அதைக்கேட்டிருந்த அம்மன்; ஏனிப்படி தட்டவேண்டுமோ ஆஹாஹா!போதும் போதும்!மெய்தான் மெய்தான்! தெரியும் தெரியும்! தங்களைப்போன்று பெண்டுபிள்ளைகளை யாவற்றும் அடியோடேவெறுத்து, ஒண்டியாகி, பேய்பிடித்து, ஆகாயம்,பூமி, அதலசுதலபாதாளம், காடு, செடி, மலைமேடுகளெல்லாம் கெட்டலைந்து,மிகவும் பங்கப்பட்டு, நாணமில்லாதவறாகயிருந்தால் தூக்கம்வராது,!எனக்கென்ன!யாதொருகுறையுமில்லாமல் சுகமாக வீட்டிலிருந்தவளுக்கு, தூக்கம் அதிகமாகத்தானேயிருக்குமென்று அம்மன் சொன்னாள்.

அதனைக்கேட்டு சுவாமி சிறுநகைபுரிந்து, அடி என் அன்பிற்கன்பான பெண்கள் நாயகமே! உன்னுடைதமையனாகிய மகாவிஷ்ணு என்னேரம்பார்த்தாலும் நடுக்கடலிலேயே தூங்கிக்கொண்டிருக்கிறானல்லவா? அப்படி தூங்கியிருக்கப்பட்டவனுக்கு நீ உடன்பிறந்தவ ளாகையினால், உனக்குமப்படியே தூக்கம்வருகின்றதோ; ஆம் அதற்கு மேலாகத்தானேயிருக்கும் என்றார் சிவபிரான். அதற்கு அம்மன் மிகவும் வெகுண்டு, போதும் போதும் சுவாமிகளே! நான் அதிகவும் தூக்கம்பிடித்தவள் தானென்று வைத்துக்கொள்ளுமே, அப்பேர்ப்பட்ட தூங்குமூஞ்சியாகிய என்முகத்தில் நீர்விழித்தாலுமக்கும் க்ஷாமதேவதை பிடிக்குமாகையால், எப்போதும் ஓயாசப்தத்தோடிருக்கும் கங்கையிடம்போனால் குளிர்ந்து முழுகி, சுகித்திருக்கலாமென்று பதில்விடை பகர்ந்தனள்.

சுவாமி:—ஹே கௌரிதேவி! என் பிராணநாயகி! ஏன் வீணில் இப்படி என்மீது சற்றேனு மிரக்கமின்றி ஏதோகண்டபடி பேசுகின்றாயே இதுநலமா! அவளையும் தானே இங்குவிடுத்துப்போனேன். அது யேறிந்திருந்தும் இவ்விதமாய் அநாவசியமாகிய மொழிகளை இயம்பலாகுமா? என்கண்ணே!

அம்மன்:—சுவாமி! போதும்போதும்! உமது வித்தையை யானறியமாட்டேனா! நன்கு தெரியும் தெரியும்! அந்த வைப்பாட்டியின்பேச்சியென்றால் கீழ்விழாமற்படி, தலைமீதிலேயே எடுத்துவைத்துக்கொள்வது யாருக்கும் தெரியாதோ! சரிதான்! என

சுவாமி:—இதென்னடி கண்ணே! இதென்ன! வேடிக்கையான சரஸவார்த்தைகளாடுவது ஒருபாலிருக்கட்டும், யாவத்சங்கதிகளும், பின்னாலே பேசிக்கொள்வோம். தற்காலத்தியகடன் தவறலாகாது, ஆகலின் சீக்கிரத்தில் கபாடத்தைத் திறப்பாயடி என் காதற்கிளியே என்னா!

அம்மன்:—சுவாமிகளே! எல்லாமறிவேன் இதுசமயம் நான்மட்டும் கதவைத்திறக்கவேமாட்டேன். வந்தவழியே போய்விடும் இங்கு நிற்கவேண்டாம்.

சுவாமி:—பெண்மணி! ஏன்! யாதுகாரணார்த்தமாக நீ திறக்கமாட்டாயென்று சொல்லி வாதுவழக்காடுகின்றனையே! நீதயைசெய்து ஏதோ தாளைத்திறப்பாயாக.

அம்மன்:—எது ரொம்ப அவசரம்போலும் அதிருக்கட்டும், சுவாமிகளே இன்னொருவிஷயமல்லவோ! அதாவது, தாங்கள் முன்னொருகாலத்தில், தின்னனென்னும் வேடச்சிறுவனை தமதன்பனுக்கவேண்டி என்னைவிட்டு நீர் தனியாகவேசென்று, அநாதையாக ஓர்மரத்தின் நிழலில்,

சிவலிங்கமாயிருந்தீரே? அதுசமயம் அந்த வேடனாகிய திண்ணனும்மைக்கண்டு, தான்தின்னும்படியான எச்சிற் கனிகளை தங்களுக்கு ஊட்டியும், அவன்வாயின் உமிழ்நீரை தினம் தினம் புரோக்ஷித்தும் வருகையில் ஓர்தினம் தங்களுடையகண்ணை ஊனமாகக்காட்ட அன்னவன்பார்த்து இதென்ன இப்படி திருக்கண்களிலொன்று வூனமாய்விட்டதே என்று, மிகவும் மனதிரங்கி அதற்கு பதில் தனது கண்ணை யளிக்கும் நிமித்யார்த்தமாய் அவனது காலால் மிதியுண்டும், அப்படிகாலால் மிதித்ததற்கு நீர் மனமகிழ்ந்து, உமக்கு பதில் கண்கொடுத்தபடியால், அத்திண்ணனென்பவனுக்கு, கண்ணப்பனென்றும் வேறுபெயரளித்து, அடிமையாக்கிக்கொண்டீரே ஐயையோ அந்த அவமானவார்த்தை எங்கும் பிரசித்தவண்ணமாகயிருக்கிறதே! அதுபோதாக்குறைக்கு இப்போது, கேவலம் அற்பனும், நீச்சஜாதியான சனியன் கைக்குள்ளகப்பட்டு, அன்னவனுக்கு பயந்து, அந்தரத்திலொளித்து, காடுகளிலலைந்து, கண்டவாறுமெலிந்து, மதிகுலைந்து, பஞ்சகோமயத்தையுண்டு, தங்கள் இடதுகாலாலுதைப்பட்ட எமனோ கொடுமையானவன்! சற்றேனும் அஞ்சிக்கையில்லாதவன்; அவன் ஆரோகணிக்கப்பட்டவாகனமாகிய எருமைக்கிடாவாக தாம்வடிவெடுத்து, இழிவான மூடர்குலமான, வேடர்சேரியில் நுழைந்து, அநுசிதமும் அருசையுமாயிருந்த சேருந்தண்ணீரும்,கோரையும் நிறைந்த நாறுங்குட்டையில் இரவுமுழுதிலும் படுத்திருந்து, சுத்தக்கேவலமான ஒழுங்கீனமற்ற மிலேச்சர்களாகிய வேடுவஸ்திரீகளால் வாய்க்குவந்தபடி வையவும், அடிக்கவும், அதன்பிறகு ஞானமூட வேடனாலும் அவனைச்சேர்ந்த அநேகவேடர்களாலும், கல்லாலும், கட்

டியாலும், மண்ணாலும் மட்டையாலும், தடியாலும், தாம்பாலும், அடிக்கவும், கண்டவாறு உதைக்கவும், அந்த அடிகளையெல்லாம் ஒன்றுகூடவிடாமல் தாங்களேற்றுக்கொண்டும், ரோஷம், மானம், ஈனம், திரேகத்தில் சீழும், சொரணையுமில்லாமலும் அவனுக்கு நற்பதவிகொடுத்தும், தங்களுக்கு சத்துருவாயேற்பட்ட சனியன்செய்த தொந்திரவுகளையெல்லாம் சகித்து, அந்த சனியனை தம் நட்புகொண்டும், உறவாக்கிக்கொண்டும், வெகு பரமயோக்கியரைப்போல் அருசையாகிய திரேகத்தோடு, “நானொரு வெள்ளாழன் எனக்கொருதலைவாழை” யென்று சொல்வதுபோல, விரம்ப அவசரமாக முகம்வைத்துக்கொண்டு என்னெதிரில்வந்தீரே! இதுகளெல்லாம் எனக்கு தெரிந்திருக்காதென்று நினைத்தீரோ? எந்தனுக்கா தெரியவராது யாவும் எளிதிலறிந்தேன். ஆகவே நான் மானபங்கமற்ற தங்கள் முகத்தில் இனிமீது, விழிக்கமாட்டேன். மானபங்கம் சற்றேனுமில்லாதார் குடிவாழ்க்கை என்னத்திற்கு! இந்த அபகீர்த்தி எந்தகாலத்திற்குள் மறையப்போகிறது, யாரைக்கொண்டு உமக்கு பிராயச்சித்தம்செய்யப்படுவது இது எப்போதும் எவர்களுக்கும் எளிதமாச்சுது. பள்ளியறைக்குள் வரக்கூடாதென்று கட்டாயமாகச் சொல்லுவேன், நான் இப்போது எப்படியேனும் கதவைமட்டும் கண்டிதமாகத் திறக்கவேமாட்டேன் என்று மிக்க மனஸ்தாபத்தோடு, அம்மன் திருவாய்மலர்ந்தருளினார்.

அந்த வார்த்தைகளையெல்லாம் திருநேத்ரதாரியாகிய சிவபெருமான் பொறுமையுடனே தன் செவிகளில் வாங்கிக்கொண்டு, புன்சிரிப்புடன் வெளியில் நின்றபடியே, மறுமுறையும் அந்தக்கதவைப் பிடித்தவாறே, உமாமஹேஸ்வரியைநோக்கி ஹே! பார்வதாதேவி! நான்மறை

ந்துபோய், பட்டகஷ்டங்களை நீ எந்தவிதமாய்க் கண்டறி ந்தனையோ அதை எனக்கு விபரமாகத்தெரிவி பார்க்க லாமென்று கேட்கவே! அதற்கு,

அம்மன்:—சுவாமி! இன்றுதையகாலத்தில் நான்மிக வும் சஞ்சலப்பட்டு ஒரே ஏக்கமாயிருந்தசமயம், திரிலோ கசஞ்சாரியாகிய, நாரதமுனி இவ்விடம்வரவே,யான்கண் டு, ஹே! நாரதா! நீ எங்கெங்கு சென்றாய் என்னென்ன அதிசயமான விஷயங்களை யறிந்தாய் அவைகளை எனக்கு ஆதியோடந்தமாய் ஒளியாமற்படிக்கு தெரிவிக்கவேண்டு மென்று கேட்கவும், அதற்கு நாரதன், முக்கியவிஷயமொ ன்றுண்டு அதைத் தங்களிடம் தெரிவித்தால், தங்களுக்கு மிக்கக்கவலைகளேற்பட்டு, பிறகு சுவாமிக்கும் தங்களுக்கு மனஸ்தாபம்நேர்ந்துவிடும்,ஆகையாலதைத்தெரிவியே னென்று கூறினபடியால்; நான்விடாது சொல்லித்தான் தீரவேணுமென வற்புறுத்த; அதற்கு நாரதன் மிகவும் பயந்து மேற்கண்டயாவையும் எனக்கு மொழியலானான். அஃதறிந்தே யான்தங்களுக்குவெளியிடலானேனெனவும்;

சுவாமி:—ஓ ஹோ! அப்படியா! நாரதன் வந்தானா? அவன்தான் இப்படியாக சகலமும் தெரிவித்தானா? நல்ல து எனக்குத்தெரியவருமே? அவனோ மிக்கக் கலகக்கா ரன்தான், அவன் தெரிவிக்காவிட்டால் நீ இப்படி என் மீது குறைசொல்லமாட்டாயே. நல்லது, அது ஒருபுற மிருக்கட்டும், நான் இனிமீது உனக்கு சொல்வதை நன்றா கக் கவனித்துக் கேட்பாயாக, அதாவது,

கௌரியாகிய பார்வதி! உனது தமயனாகியும், எனக் கு மாதுலனாகியும், சகலமானதேவர்களுக்கும் ஆதிமூலப் பொருளுமான ஸ்ரீமஹாவிஷ்ணுவானவர் முதல் முதல் பிரமதேவனிடமிருந்த சதுர்மறைகளையுங் களவாடிப்போ

ன சோமுகாசுரனை வதைக்க, மச்சாவதாரமெடுக்கவில்லையா? 2-வது திருப்பாற்கடலில் மந்தரகிரியைவைத்துக் கடையும்போது, அது ஓர்புறமாக சாயவே, உடனே கூர்மாவதாரமெடுத்து அம்மலையைத் தாங்கவில்லையா? 3-வது தன்பேரனுக்கும் பேரப்பிள்ளையாகிய ஓர் அசுர வேந்தர்களிலொருவனாகிய இரணியாக்ஷதன் பூமியைக் கொண்டுபோய் கடலில் ஒளித்துவைத்ததின் பொருட்டு, பன்றியாகிய வராகவதாரமெடுத்து அன்னவனைக்கொன்று பூமியைத்தரவில்லையா? பின்னுமவன் சோதரனாகிய இரணியன் தானேதெய்வமென்றும் தன்பெயரைச்சொல்லி துதிக்காதவர்களை சகலவித இம்சை செய்திருந்தான்; பிரஹலாதனென்னும் அவன் பாலகன் தன்னை தெய்வமென்றுசொல்லாததால், பலவிதத்திலும் இம்சைபுரிந்தும் மடியாதிருக்க கடைசியாக அவனைக் கொல்லும்பொருட்டே தன்மனைவியின் கரத்தால் விஷத்தை கொடுக்கச்சொல்ல, அதை பாலகன் தானேயருந்தி,சுகமாயிருப்பதைக்கண்ட இரிணியன் எங்கே அந்தத்திருடன் என, அவரெங்குமிருப்பாரென பக்தன்சொல்ல, இந்தத்தூணிலிருப்பானாவென்றுகேட்க பாலகன் இந்தத்தூணிலும், இந்தத்துரும்பிலும் இருப்பாரென்றுசொல்ல, அவன் தூணைத்தட்டினவுடனே அந்தத்தூண் இருபிளவாகி,அதினின்றும் நரசிம்மாவதாரமாகத்தோன்றி, அவனைக்கொன்று உதிரத்தை குடிக்கவில்லையா?பிறகு தானென்னுமகம்பாவங்கொண்ட மாபலிக்கு முன் பிராப்தமாகி,மூவடிமண் தானங்கேட்க, அவன் வாக்குத்தர, மண்ணையும், விண்ணையும் இரண்டடியாக அளந்து, மூன்றாவதடிக்கு இடமெங்கே எனவும் தன் சிரத்தைக்காட்ட, அவன் தலையில் மற்றோரடிவைத்து, அவனை பாதாளத்தில் அமிழ்த்தவில்லையா? 6-வது பரசுரா

மராகி, ஜமதக்னிரிஷிக்கு மைந்தனாகி அவர்சொல்லைத் தட்டாது ரேணுகையையும், கார்த்தவீரியார்ஜுனனையும் கொன்றுவிடவில்லையா 7-வது ஸ்ரீராமராகப்பிறந்து, தனது மனைவியாகிய சீதையைச் சிறையெடுத்த தசமுகராவணனை சம்ஹாரித்து,* சிறைமீட்குங்காலத்தில், காடு மலை, வனம் வனாந்தரங்களைக்கடந்து சஞ்சாரம்செய்து அலைந்து அலைந்து திரியவில்லையா? 8-வது பலராமராகப்பிறந்து பிரஹஸ்தன் முதலானோரைக்கொன்று கஸ்திப்படவில்லையா? 9-வது இழிவாகிய இடையர்குலத்திற்பிறந்து, ஆடு மாடுகளையும் கன்றுகளையும் கடும்வெய்யலிலும், மழையிலுந்திரிந்து மேய்க்கவில்லையா? பால், தயிர், வெண்ணையைத் திருடின, கள்ளனென்று மாவுரலில் மொப்படிக்கும் இடைச்சியர்கையினால் தாம்பால்கட்டுண்டு மத்தாலடிப்படவில்லையா? கோபிகாஸ்திரீகளுடைய எச்சிலுண்ணவில்லையா? நிற்க, ஹேபார்வதியே! நான் தான் என்று சொல்லும் நீதானாகட்டும், பேய், பிசாசுகள் பூதங்களின் கூட்டங்களைக்கொண்ட கங்காளியாகி, மயானத்தில், பிணங்களின் மாமிஸங்களையும், எலும்புகளையும் தின்னதுமன்றி மதுபானமும் செய்யவில்லையா? அடி போடி பைத்தியக்காரி; தனக்குண்டு எதிரிக்கில்லையென்று சொல்லலாகுமா? தன்தலைமேல் குற்றம்வைத்துக்கொண்டு, மற்றவரை குற்றம்சொல்லலாகுமா? "மாமியுடைத்தால் மண்கலம் மருமகளுடைத்தால் வெண்கலமா" "அத்திப்பழத்தைப் பிட்டுப்பார்த்தாலத்தனையும்சொத்தை" என்பதறியாயா? பராபரமானது சிவனடியார்களுடைய உள்ளத்தில் குடிகொண்டிருப்பதால், அவர்கள்போசிப்பது பரமனுக்கு அற்புதமல்லவா? வாயிற்கும் வயிற்றிற்கும் எச்சலுண்டா? எவ்வுயிராக நிறைந்திருப்பவர்களுக்கு எச்ச

லேதா, மிச்சலேதா, புகழேதா, இகழேதா, ஜாதியேதா, பேதமேதா, பிராயச்சித்தமேதா, அன்பர்கள்கோரும்படிக்கு, நாம் நடந்துகொள்ளவேண்டிய கடமையாச்சுதே? அவர்களால் வரும் துன்பங்களை நாமடைவதே கடமை. நமக்குத்தொழிலதுதானே? அப்படியிருக்க நீசகலமுந்தெரிந்தவள்ளுவச்சியாகயிருந்தும், கற்றறிமேழையாகப் பேசுகிறாயே? போதும் போதும்! வார்த்தையாடினது! காலைபூஜாநுஷ்டானவேளையாகிறது இனி தவறலாகாது, சீக்கிரத்தில் கதவைத்திறப்பாய் என் அயிர்தருண கௌரியே! என்றார்.

இவை சகலமுங்கேட்டு, உமையவள் சுவாமி! தாங்கள் சமயத்துக்கேற்ற தருவெடுப்பீர்களென்றும், வேளைக்குத் தக்கபடி வேஷமெடுப்பீர்களென்றும், ஆளுக்கு ஏற்ற அச்சாரம் கொடுப்பீர்களென்றும், அடியாள் அறியேனா! சரிசரி! போனதெல்லாம்போகட்டும், என் தாயார்வீட்டில் எனக்கு ஸ்தனமாககொடுத்த முத்துமாலை, இரத்தினமாலை, பவளமாலை, இதுகளைத் தாங்கள் போகும்போது அணிந்துகொண்டு போனீரே? இப்போது கண்ணிற்காணேமே? அவைகள் எங்கே? வெறும் மார்பாகவுமிருக்கிறதே? காரணமென்னவென்று பரமேஸ்வரி கேட்டனர்.

சிவபெருமான் அதற்கு, அடி என்பெண்மணி! எனதாருயிர்க்குகந்த கண்மணி! கேள்! என்மனதறிய பிறருக்கு யான்கொடுக்கவில்லை, அவைகளை இந்தயிடத்திற்றான் வைத்தேன், இந்தவிதமாகத்தான் போய்விட்டதென்றும் சொல்வதற்கு சற்றேனும் கவனமில்லை. அதையோசிக்குமிடத்து, சனியனுடைய மாயமகத்துவம்போலுந் தெரிகிறது, தற்சமயம் அதன் உண்மையைத்தெரிவிக்க என்னால் முடியவில்லை என்றார்.

அவ்வசனத்தை உமையவள் தன் காதிற்கேட்டவுடன் மிக்க மனஸ்தாபத்தோடு இதென்ன அற்புதமு மாச்சரியமு மாக இருக்கிறதே! "பிள்ளைவரத்திற்குப்போய் புருஷனை இழந்தவர்கள்போல்" ஆச்சுது. பேஷ்! நன்று நன்று! தேவர்களும் காணுதற்கரிய பூஷணாதிநகைகளை தாம் வீணில் போக்கடித்துவிட்டு வந்ததுமன்றி, ஏதோ சாக்குபோக்குகள் சொல்லுகின்றீர்களே, ஐயையோ என்னைப்பெற்று வளர்த்தவர்களைப்போலவே, பிரதிதினமும் என் கண்களாலே பார்த்து மகிழ்வுகொண்டிருந்தேனே? அப்படியிருந்த என் மனமாகப்பட்டது, அந்த நகைகளைக்கண்டாலொழிய இனி பொருந்தாது, அதற்கு மருந்தேது, இல்லையே! வேறொன்றும் மாற்றுதற்கு மில்லையே! ஆனபடியால் அந்த ஆபரணாதிகளைத் தேடிக் கண்டுபிடித்து வந்தால்தான் கதவைத்திறப்பேனென்று உறுதியாகச் சொல்லிமுடித்தனர்.

சிவபெருமான் மனம் மெலிந்தவராய், திடீரென்று காணாமலும், என்னை நானறியாமலும் போக்கடித்த உன்னுடைய பணிபூஷணாதிகளை எங்கிருந்து தேடப்போகிறேன் ஐயோ என்னசெய்வேனென்று யோசித்து ஹே! பெண்ணே!கலங்காதே! மெலியாதே! நான்மறுபடியும் சென்று, தேடிக்கண்டுபிடித்துக்கொண்டு வரும்படியானமார்க்கத்தைத் தேடிக்கொள்ளுகிறேன் ஆகையால் போய்வருவதற்கு விடைகொடுக்கிறாயா? என்னவென்றுகேட்க,

சிவசங்கரியாகிய அம்மன் சற்று ஆலோசனைசெய்து இப்போது தாங்கள் போகிறேனென்பதாகத் தெரிவிக்கின்றீர்களே! அப்படி மீறிப்போயும் தாங்கள் செல்லும்படியான இடங்களில் ஒருக்கால் யாதேனும் பங்கப்பட்டு

வந்தீராயின் என்னசெய்வது ஆனால் ஒன்று, நான் தெரிவிக்கும்படியான கட்டளைக்கு தாங்கள் உடன்படுவதாகச் சொன்ன சத்தியவார்த்தைக்கு, இப்போது என்னசொல்லுகிறீர்களென்று தேவியார் கேட்கவும்,

கிருபாநிதியாகிய சிவபிரான் தெரிவிப்பதாவது ஹே பெண்ணே! உமாதேவி! நீசொல்லும் விதத்தின்படி நானடந்துகொள்ளச் சித்தமாயிருக்கிறேனென்று ஒப்புக்கொண்டார். அதற்கு அம்மன் ஒருவாறு மனந்தேறி, சுவாமி தாங்களாதிகாலத்தில் தாருகாவனரிஷிகளின் பத்தினிமார்களுக்காக எடுத்த பிச்சாண்டிவேடமாகிய பிக்ஷாடன சேர்வையை யான் அப்போதுகாணவில்லையாயினும் அந்த வேடத்தை, இப்போது,இதேசமயம் நான் பார்க்கும்படிக்கு எடுத்துக்காட்டி, அந்த வேடத்தோடு என்னுடைய தந்தையிடம்சென்று, தங்கள்கரத்தில் கபாலக்கிண்ணியாகிய பாத்திரத்தை ஏந்தி பிச்சைகொடுங்களென்று தங்கள் வாயினாற்கேட்டு, என்நகைகளை மறுபடியும் வாங்கிக்கொண்டுவந்தாலன்றி நான் எவ்விதத்திலும் சம்மதிக்கமாட்டேனென்றுசொல்ல, சிவபிரான் சற்றுயோசனைசெய்து ஆனாலப்படியேயாகுகவென்றுசொல்லி ஹே பெண்ணே! பர்வதராஜபுத்ரி! பரமராஜமித்ரி! ஒருவிஷயமல்லவோ! அதாவது, அந்த பிக்ஷாடனவடிவம் பகற்காலத்தில் எடுக்கத்தகுந்தரூபமல்லவே; இன்றிரவு நீகேட்டவாறே உன் மனம்போலவே நடந்துகொள்ளுகிறேனென்று சம்மதம் பட்டார். அதன்பிறகு பார்வதா தேவியார் சந்தோஷமடைந்து கதவைமூடித் தாள்போட்டிருந்ததை தன் இரு கரங்களினாலும் வெடுக்கென்று தாழ்ப்பாளைத்திறந்தனர்.

## 19-வது சருக்கம்.

# சிவபிரான் பிக்ஷாடனசேர்வை.

உமாமகேஸ்வரி பொற்கதவை திறந்தவுடனே, அம்மன் சுவாமியின் எதிர்சென்று, தீர்க்கதண்டமிட்டு, சுவாமியின் கைகளைத் தனது கரத்தினாற் பிடித்து அழைத்துக்கொண்டுபோய், அபிஷேகமண்டபத்தின் பொற்பீடத்தினுட்காரவைத்து, எண்ணெய் நலங்கிட்டு, அபிஷேகதிரவியத்துடன் பஞ்சகௌய திருமஞ்சனமாட்டிவைத்து, தனது பட்டுமுந்தானையால் நீரைத்துவட்டி, அகிற்புகையைக் காட்டி அலங்காரமண்டபத்தி லெழுந்தருளச்செய்து, சகலவித ஆடையாபரணங்களைத்தரித்து, விபூதி,கந்த,களப, கஸ்தூரி, சந்தன பரிமளங்களை அணிந்து,நானாவித புஷ்பமாலைகளைத்தரித்து, போஜனசாலையிலழைத்துக்கொண்டுபோய் ஆசனமமர்த்தி, அறுசுவை பதார்த்தங்களுடன், அன்னம் நைவேத்தியம்படைத்து; அதன்பிறகு கொலுமணிமண்டபத்தில் இரத்தினவிமானத்தி லெழுந்தருளிவித்து, சோடசோபசாரங்களுடன் சகலமும்புரிந்து, இளைப்பையாற்றி, தாம்பூலதிரவியத்துடன் தமது கைகளினாலே சுவாமிக்கு ஊட்டிவைத்து, வேடிக்கையுடன் தம்பதிசமேதராக வீற்றிருந்தார்கள். அதுவேளையில், மேற்றிசையில் சூரியன் அஸ்தமித்து, அந்திவேளை காலமானதால், சிவகணங்கள், ஆயிரப்சோதி திருவிளக்குகள் எங்கும் பொன்மயமாய் பிரகாசிக்கும்படி வைத்தார்கள், சந்தனமீந்தார்கள், பனிநீர்தெளித்தார்கள், புஷ்பதோரணங்கள் தொங்கவிட்டார்கள். முப்பத்திரெண்டு வாத்தியங்களும் முழங்கியது,முப்பத்துமுக்கோடி தேவர்கள்சூழ நாற்பத்தெண்ணாயிரம்ரிஷிகள் சகலரும் வேதபாராயணப்செய்தார்கள்.

அடியார்களால் தூபதீப, கும்பகலசம், சகலவிதமான ஆ
லாத்தியுஞ்சுற்றினார்கள். சோடசோபசாரங்களும் புரிந்
தார்கள். பலவகையான சித்திரான்னம், பரமான்னம் நி
வேதனஞ்செய்தார்கள். அதுவேளையில், பிரமாதி முனி
வர்களும், தேவர்களும் முதலான யாவத்ராளும் சிவபெ
ருமான் சேவை வைபவத்தைக்கண்டு, ஆனந்த பரவசங்
கொண்டு வணங்கி தோத்திரஞ்செய்து அவரவர்கள் ஏதா
ஸ்தானம் சென்றார்கள். பின்பு அர்த்தசாமவேளையாகி,
அதற்குண்டாகிய பூஜாவிதிகளும், வைரவர்பூஜைகளும்,
செய்தானபிறகு, திருவாலயத்தின் வாயல்களைத் திருக்காப்
பிட்டார்கள்.

அப்பொழுது சுவாமியும் அம்மனும், ஏகாந்தமாக
யிருக்கின்றவேளையில் நடந்தது யாதெனில்; சிவபெருமா
ன் திடுக்கென்றெழுந்து, தனது சுயரூபத்தைநீக்கி நிர்வா
ணமாக, ஜடாமகுடமும், விபூதிபண்டேரத்துடன், உருத்தி
ராக்ஷமாலைகளுடன் சூல கபாலம், டமரக கரத்துடனும்,
பிக்ஷாண்டிவேடத்தை எடுத்து, உமாமகேஸ்வரிக்குமுன்
தரிசனக்காக்ஷிதந்து, அடி பெண்கள்நாயகமே, நீ என்னு
டன் தொடர்ந்துவா, உன்னுடைய நகைகளைத் தருகிறே
னென்று சொல்லவும், அம்மன் மகிழ்வடைந்து, ஸ்ரீ ராஜ
மண்டபத்தில் இருவருமாகவந்து அந்தமண்டபத்தில் சித்
திரரூபங்களாலும், தங்கபிம்பங்களாலும் அமைக்கப்பட்
டிருக்கும் பர்வதமஹாராஜனுடைய பிம்பத்தின்முன்பு
வந்தெதிர்நின்று, பவதி பிக்ஷாந்தேஹி! பவதி பிக்ஷாந்
தேஹி! பவதி பிக்ஷாந்தேஹி! என்று மும்முறைசொல்லி
கையிலிருக்கும் பிரமகபாலகிண்ணத்தை ஏந்தி நின்றார்.

அப்போது சனிபகவானுடைய மாய்க்கையால் மறை
க்கப்பட்டிருந்த அம்மனுடைய கரத்திலணியப்பட்ட

சகல ஆபரங்களும் கபாலகிண்ணத்திலிருக்க,சுவாமியாகிய பரமசிவனார்கண்டு, ஹே! பெண்ணே உமாதேவி! இந்தா உன்நகைகள் யாவுமிருக்கின்றதா பார்த்துக்கொள் என்று அம்மனிடம் தந்தருளினார். அம்மன் கண்டு மிகவும் களிப் படைந்து தனது இருகரங்களினாலும் பெற்று தன்னு டைய இரண்டு நேத்திரங்களிலும் ஒற்றிக்கொண்டனர். அதன்பிறகு சுவாமியும் அம்மனுமாக பள்ளியறைக்கு மஹா சந்தோஷமுடன் எழுந்தருளினார்கள்.

## 20-வது சருக்கம்.

# ஸ்ரீ சிவபிரான் திருக்கோலம்.

பரமசிவம் தானெடுத்திருந்த பிக்ஷாடனவேடத்தை நீக்கி, ஸ்ரீமன்நாயகராக திருக்கோலங்கொண்டு ஈஸ்வரி யை தன்னிரண்டுகரங்களினாலும் தழுவி, தனது மார்போ டணைத்து, தமது இடது தொடையின்மீது உட்காரவைத்து க்கொண்டு,தன்னுடைய இடதுகையை அம்மனுடையஇரு தோள்களின்மேல்நீட்டி, பக்கத்திலணைத்து கைகளினாற் கூந்தலைசீவி, இரண்டு தாடையையும் தடவிக்கொடுத்து, முகவாய்க்கட்டையில் தனது அஸ்தம்வைத்து, கன்னத் தில் முத்தமிட்டு, மிகுந்தசந்தோஷ குதூஹலத்துடன், சிறுநகைபுரிந்து சூரியனைக்கண்ட செந்தாமரைமலரைப் போல் முகமலர்ச்சிகொண்டு தமது திருவாயினாற் புகன் றதாவதெனில்,

ஹே மரகதாங்கி! ஜீவரத்தினமாகிய ஜீவாக்ஷரி! இன்னுமொருவிஷயம் அதை நன்குகவனி ஆதிகாலத்தில் தேவர்களால் நிர்வகிக்கக்கூடாமல் தோன்றிய ஆலகால விஷத்தை யான் திடீரென்று உண்டேனல்லவா? அப் போது நீ அதைக்கண்டவுடனே அந்த விஷம் என்தலை க்கேறிவிட்டால் உடனே மரணம்சம்பவித்துவிடுமேயென்

று எண்ணங்கொண்டு என்னைக் காப்பாற்ற நினைத்து உடனே உன்னிடகரத்தினால் என் கண்டத்தை நீ பிடித்து அக்கொடிய ஆலகாலவிஷத்தை உள்ளுக்குப்போகாமற் கண்டத்திலேயே நிறுத்திவைத்து, அன்றிரவுமுழுதிலும் கண்விழிக்கும்படிசெய்து, நான்குஜாமமும் நான்கு பூஜைகள்செய்வித்து எனக்கு உயிர்பிச்சைதந்தவள் நீயல்லவா! அதினாற்றானே நாளதுவரையிலும் சிவன்ராத்திரி என்று உலகத்திலுள்ளோர்யாவரும் பஜித்துவருகிறார்கள். இவை யாவும் உன்னால் விளைந்ததல்லவா என்று பற்பலவாறு அம்மனைப்புகழ்ந்து கொண்டாடினர்.

அவ்விதம் கொண்டாடினதை உமாமஹேஸ்வரி என் மனோஹரமான மஹேஸ்வரா! சம்போ சங்கரா சச்சிதானந்தா! சர்வஜீவதயாபரமூர்த்தி! சகலவைபவமும் சிவன் செயலல்லாமல் மற்றவை வேறுளதோவென்று சுவாமியைத்தழுவி, முத்தமிட்டுக்கொண்டு சந்தோஷசாகரத்திலழுந்தியபின் கங்காதேவியை வரவழைத்து சிவபிரானுடைய ஜடாபாரத்திலிருக்கச்செய்து ஒருவருக்கொருவர் சல்லாப சுகானந்தக் கேளிக்கையோடு சுபமங்களகரமாக ஆனந்தத்துடன் வாழ்ந்திருந்தார்கள். மங்களம்.

வாழி விருத்தம்.

மூவர்கள் வாழி வாழி
முனிவர்கள் அமரர் வாழி
பாவலர் மறையோர் வாழி
பரமனார் அடியார் வாழி
பூவுலகத்தோர் வாழி
புண்ய யிக்கதையும் வாழி
ஆவலாய்ப் படித்தோர் கேட்டோர்
அனைவரும் வாழி வாழி

திருவூடல் வைபவ சரித்திரம்.

சம்பூரணம்.

உ

சிவமயம்.

# அலங்காரக் கும்மிப்பாடல்.

கும்மியடிப்பெண்கள் கும்மியடி சிவ
குருபரனைநாடி, கும்மியடி
செம்மையுடனே திருவூடலுற்சவ
சிறப்பைச்சொல்லியே கும்மியடி. 1

அண்ணாமலையாரும் உண்ணாமுலை அன்னை
ஆடும்திருவூடல் வேடிக்கைதன்னை
பண்ணாகவேகும்மி பாடுதற்கு சிவ
பாலகணபதி காப்பாமே. 2

தைதிங்கள்முதலில் சார்ந்தஉத்ராயண
சங்கராந்திபுண்ய பண்டிகைதினஞ்
செய்துவருகின்ற திருவூடலுற்சவ
வைபோகஞ்சொல்கிறேன் கேளுங்கடி. 3

பொங்கலிடும்நாளில் சங்கரன்சங்கரி
மங்களமா யிருக்காமற்பரி
சங்கைகளைவிட்டு சச்சரவுபட்டு
சந்நிதிவிட்டு எழுந்தாரடி. 4

மாடுடனேபல வாகனமேறாமல்
மன்னும் விமானங்கட் கேறாமல்
கேடயத்துடனே கௌரியும்பரமனும்
வேடிக்கையாயதோ வாராரடி. 5

கோடானகோடிவிலை கொண்டரத்தின
ஆடைகளாபர ணங்களென
தோடுதோடாகவே ஜோடித்திருக்கின்ற
தொந்தமாய்கண்ணிறைற் பாருங்கடி. 6

இடிகளொலிபோல கடியவெடிகளும்
திடுதிடென்றதிர்த்திட வாணங்களும்
படர்படரென வெடிகளினிசையால்
பண்பாகசப்தங்கள் முழங்குதடி. 7

மத்தளதாளங்கள் துத்திகள்சங்குகள்
தத்திமிதித்திமித் தோமெனத்தான்
வித்தகரமார்கள் வீணைபூரிககார்
வீறிடும்ஓசையைக் கேளுங்கடி. 8

இப்படியாய்வெகு அற்புதத்தைக்கண்டு
கற்பக்ரஹத்தையே சுற்றிக்கொண்டு
தற்பனுருக்குக் கொடியேறும்துவஜஸ்
தம்பத்தருகினில் வந்தாரடி. 9

அத்திமுகன்முன்பு யாதின்றியேபற்றி
இந்திரமண்டபந் தன்னைச்சுற்றி
அத்தனும்சோடஸ மண்டபத்தருகிலே
ஆனந்தமாகவந் தமர்ந்தாரடி. 10

பூமலர்தன்னாற் பிரபையலங்கரித்து
புதியவிமானம்போற் சிங்காரித்து
மாமணம்விதம்வித மாலைகளைச்சாற்றி
நேமகமாகவே தரித்தாரடி. 11

சிறியகுடையை விரித்தார்கள்நிழல்
தருகும்படிக்கே யமைத்தார்கள்அழல்
இருபுரம்தன்னிலே குருக்களும்ஸ்தானிகர்
அருகினில்கேடயத் தமர்ந்தாரடி. 12

சுவாமிக்குவலபுறம் சுற்றும்குருக்களும்
சுகமாய்ஸ்தானிக னம்மன்பக்கமும்
நேமகமாகவிளங்கா நின்றஅன்று
சாமியைப்போலவே காணுதடி. 13

தும்புருநாரதர் துலங்ககந்திருவர்
பிம்பங்கள்ஜோடித்து உம்பர்கருடர்
சம்பிரமகேடயத்திற் றுன்வீற்றிருந்து
சாமிஎழுந்தரு ளானாரடி. 14

எங்குமொளிதரும் தங்கவிமானத்தில்
சங்கரியாளுட னித்தினத்தில்

தங்களன்பனை சுந்தரமூர்த்தியும்
துங்கசப்ரந்தன்னில் வாராரடி. 15

அளவிற்குமீறுமல் அருணகிரிநாதர்
விளம்பும்திருப்புகழ் பாடிவேதர்
கிளிவடிவாகியே கோபுரவாயலிற்
கிளம்பிவரும்சேர்வை காணுங்கடி. 16

புரவிமண்டபத்தை புரந்தரன்விடுத்து
அரசுவல்லாளன் கோபுரமடுத்து
தரிசனங்கள்தந்து சகலவைபோகமாய்
பெரியநந்திமுன்பு வந்தாரடி. 17

ஆயிரங்கால்நிறைந்த மண்டபத்தின்முன்
ஆலயபெரிய கோபுரம்பின்
சேயனாலயஞ் சேர்ந்தகம்பந்தன்னிற்
சிறுவர்க்குதரிசனம் தந்தாரடி. 18

தட்டிதட்டிதோள்கள் சாமினெப்போர்தண்டு
விட்டிடாமல்மாற்றி மாற்றிக்கொண்டு
ஒட்டியேஓடிடும் ஓசைகளொலிக்க
திட்டிவாயலெதிர் வந்தாரடி. 19

அருணோதயவேளை யாகிடவேகோடி
கிரணஒளியோடு பரமக்ரீடி
கருணையுடன்மணி சித்ரமண்டபத்தில்
தரிசனக்காக்ஷியைக் காணுங்கடி. 20

முப்பத்திரண்டு வெடிமுன்னதிர்ந்திட
மேளவொலியண்டகோள மூட்டிட
கற்பூறதீபதூபங்களும் செய்திடும்
அற்புதத்தைக் கண்ணுற் பாருங்கடி. 21.

தாசிசிறுபெண்கள் வீசவிசிறிகள்
சந்தனம்பந்நீர் தெளிக்கவுங்கொள்
ஓசையுடன்வேதம் பூசுரரோதிடும்
ஈசன்விலாசத்தை காணுங்கடி. 22

திருக்கூட்டத்தார்களும் சிவபஜனைசெய்ய
அரகராசிவசிவா வென்றுமுய்ய
குரவர்கூத்தாடியே கொண்டானடித்துமே
இருபுறம்சாமரை வீசாரடி. 23

எங்குங்கரைகாணு வங்குலகூட்டம்போல்
தங்கிஜனங்கள் நெருங்கமென்மேல்
மங்களமாய்சித்ர மணிமண்டபம்விட்டு
சங்கரர்கோலமாய் வாராரடி. 24

பதினாறுகால்மண்ட பந்தன்னிலேவர
சதிருடன்சுவாமியும் வந்தமர
புதுபெரும்குடையை புஷ்பத்தோடுமாலை
விதம்விதமாகவே தரித்தாரடி. 25

ஆடைகள்பூமாலை அணியணிசாற்றவும்
அர்ச்சகர்கற்பூரந் தானேற்றவும்
ஓடும்நடையுடன் சுவாமியுமம்மனும்
மாடவீதிதன்னில் வந்தாரடி. 26

வாடைகள்தோறும் மகரதோரணங்கட்டி
வலைவகையாய்ப் பந்தலிட்டுக்கட்டி
ஆடும்கொடிகளும் வாழைக்கமுகுகள்
ஜோடித்தவேடிக்கை நாடுங்கடி. 27

வீதிகள்தோறும் குளிரதண்ணீர்விட்டு
வெகுவிதகோலங்கள் தானுமிட்டு
பாதம்குளிர்ந்திட நாரதர்க்குபசாரம்
பக்திபுரிவதைப் பாருங்கடி. 28

சுத்தப்பவுத்திர சுகஞானதளத்தில்
ஜோடித்திடும்மேடை வானதனில்
கர்த்தனுமையவள் சுத்திவருவது
கைலாசம்போலவே காணுதடி. 29

வீடுகள்தோறும் தீபாராதனைசெய்தும்
ஓடுள்ளதேங்கா யுடைப்பதும்

நாடிக்கணக்கிட்டு சொல்வதற்குநம்மால்
கூடுமோகூடாதோ கூறுங்கடி. 30

அங்கங்கேவீதியிற் றெங்கவிட்டிருக்கும்
அஸ்தமனகிரியி லாண்டவர்க்கும்
தங்கப்பட்டாடைகள் சாத்துகிறார்ந்த
தர்மபிரபுக்களைப் பாருங்கடி. 31

ஓட்டம்நடையுமா யோடுவதுங்கின்று
ஒயிலாய்சுற்றே யாடுவதும்இன்று
வாட்டமாகக் குடைகளசைந்திடவும்
மதில்களைச்சுற்றியே வாராரடி. 32

பத்தர்களுத்தமர் சித்தர்மகிழ்ந்திட
கொத்தளத்துப்பிள்ளை யத்திமுன்பட
சித்தங்களித்திட சீக்ரமாகயோடி
திருப்பசாத்தாரார் சேவியுங்கடி 33

வேதியர்வாழ்வட வீதியிலர்ச்சகரின்
வீடுகள்தோறுந் திருச்சேவைத்தரமுன்
சாதுக்கள்சூழ்ந்திட சோதியண்ணாமலை
சந்நிதிமுன்னேக்கி நின்றாரடி. 34

தன்னைத்தானேபிர தக்ஷிணம்புரிந்திட்டு
உன்னதமான நடையுமிட்டு
இன்னவிதமாக மூன்மூன்றுதரமந்த
சந்நிதியைசுற்றி வந்தாரடி. 35

சாற்றும்பூவாடைகள் சாலமேவும்லிங்க
சாமியும்அம்மனும் உள்ளடங்க
வேத்துருவாக தோன்றிடசிவனை
பார்த்துமகிழ்கின்றார் பாருங்கடி. 36.

தென்னண்டைமாட வீதியிற்கடையதும்
தெருவிற்குநேராய் அமைத்திருக்கும்
உன்னதபந்தலில் சுவாமியும்அம்மனும்
உல்லாசமாக வசித்தாரடி.

வெய்யவனுச்சியின் வேளைக்குட்படவே
ஐயனுக்குநிழல் தந்திடவே
தையலிணைத்தபுது சகலாத்துகள்
சாத்தினார் அன்பர்கள்பாருங்கடி. 38

சாத்தினபிறகு ஆத்திரமாகப்போய்
சரசவென்றோடியே மேற்றிசையாய்
பார்த்துபரமனை கிழக்குமுகமாக
பந்தலிற்பார்வதி நின்றாரடி. 39

நேருக்குநேராக நிற்கபார்வதிமேல்
போருக்கள்வந்த புதுமையைப்போல்
தேருக்குள் அன்பரை சாக்ஷம்மிமித்யமாய்
தெருவில்வைடனும் செய்கிறாரடி. 40

மத்தளதாளங்கள் மகிழ்கீழ்தெருதாசி
சத்தியின்பக்கத்தி லூற்றவீசி
சத்தவுடல்பூரி மேலைத்தெருவேசி
அத்தனின்பக்கத்தி லூற்றாரடி. 41

ஆடும்சாமரைகள் தாசிகளும்வீச
கீடன்டும்கதம்பம் அர்ச்சகர்வீச
ஓடிஓடிநின்று நாடிநாடிக்கொண்டு
ஆடிடும்வடலைப் பாருங்கடி. 42

முன்னும்பின்னுமாக முன்மாறிசென்றுமேல்
பின்னற்கோல்களை போடுவார்போல்
கன்னியுமன்னனும் வண்ணமதாயாடும்
உன்னதவூடலை நண்ணுங்கடி. 43

ஆயிரம்சோதிப் ப்ரகாசஒளிதரவும்
நாயகரும்அவர் நாயகியும்
சாயல்நடையுடன் பார்த்துபார்த்துக்கொண்டு
தர்க்கவூடல்தன்னைப் பாருங்கடி. 44

ஒற்றைவெடியொடு சுற்றிலுமானபின்
பற்றும்வெய்யலில் கஸ்தியுடன்

சத்தியும்சிவனும் மெத்தஇளைப்போடு
ஒத்தினதிரெதிர் நின்றாரடி. 45

என்றேப்போடயிட மில்லாமலெங்குமேல்
வெள்ளைக்காளானது பூத்ததுபோல்
வள்ளல்வேடிக்கையைப் பார்க்கவந்தஜனம்
விள்ளமுடியாது போற்றுங்கடி. 46

ஆயிரங்கண்ணுள்ள அமரர்கோனுமிரண்
டாயிரம்நாவுள்ள வாசுகிதன்
வாயினாற்சொல்லவும் கண்களாற்பார்க்கவும்
நேயமானசேர்வை யாகுமடி. 47

அண்டத்தில்வானவர் கண்டுமகிழவும்
ஆனந்தமானந்த மென்றுமிகவும்
தொண்டர்புகழ்ந்துமே கொண்டாடுகின்ற
கண்கொண்டகாக்ஷி யீதாகுமடி. 48

ஆதிகளாரூரர் சுந்தரமூர்த்தியும்
நாதனுமையவள் நடுவினிலும்
ஓதுவாரும்கூடி புஸ்தகம்கையேந்தி
வேதம்படிப்பதைக் கேளுங்கடி. 49

இந்தவிதமூன்று மிசையஆதானதும்
ஈஸ்வரியாள்திடுக் கென்றெழுந்தும்
வந்துபரமனை வலம்புரிந்தேமனச்
சிந்தனையுடனே போனாரடி. 50

பின்னிடையாகவே தன்பதியைப்பார்த்து
பிருவுடன்மேற்றிசை யாகவேர்த்து
தென்னண்டைகோபுர திருமஞ்சனத்தெரு
திரும்பியேநோக்கியே சென்றாரடி. 51

விட்டுப்பிரிந்திட கட்டழகிமனதில்
தட்டாமல்யானை கட்டும்தெருவில்
திட்டெனத்திரும்பி கொட்டுகளில்லாமல்
பொட்டெனவேஅம்மன் போறாரடி. 52

வரும்வழிதன்னை அரனுணர்ந்துமிக்க
வடமுகமாய்த் திரும்பியிருக்க
கருணையுமையாளும் விரைவில்வந்தெதிர்நிற்க
இருவர்தரிசன மாகுதடி. 53

கோபக்குறிமனஸ் தாபத்துடன்கண்டு
கொற்றவனை வலம் சுற்றிக்கொண்டு
ஸ்தாபரமாகிய ஆலயத்தைநோக்கி
தானும்சுந்தரனும் போனாரடி. 54

ஆலயத்துட்சென்று அந்தப்புரத்தினில்
வேலைவிழியாள் வீற்றிருந்தனள்
பாலச்சந்திரனில்லா வானம்போலேகோயில்
கோலமில்லாம லிருந்ததடி. 55

எம்பெருமானாரும் தம்பதியைவிட்டு
ஏகாந்தனாகி வைபோகம்கெட்டு
அன்பர்கள் துதிக்கும் அண்ணாமலையைநோக்கி
ஆண்டவர்போகிறார் வேண்டுங்கடி. 56

திருமஞ்சனம்வரும் தெருதனிலேசென்று
கிரிவலம்வந்திடும் வழியேகின்று
மறையவராகிய பார்ப்பார்மண்டபத்தில்
இறைவனிறங்கினார் பாருங்கடி. 57

பெரியகேடயத்திற்குப் பின்குடைவிட்டார்கள்
இருபுறம்மறையோர் இறங்கினார்கள்
சிறியகேடயக் குடையுடனேசிவன்
கிரிதன்னிற்போகிறார் பாருங்கடி. 58

பாண்டவதீர்த்தமாம் பாக்யமண்டபத்தில்
தாண்டவமூர்த்திவந் திறங்கவதில்
வேண்டியஅன்னமும் நைவேத்யங்களிட்டு
வேதியர்போஜனம் செய்தாரடி. 59

ஜாட்டிமேளக்க ளீட்டங்களுஞ்ஜனக்
கூட்டமும்ஓட்டமும் மட்டாச்சினம்

மாட்டுப்பொங்கலிட தாஷ்டீகமாகவே
வீட்டிலவரவர் சேர்ந்தாரடி. 60

காராளனானோர்க ளபிஷேகசாமானும்
தாராளமாகவும் தந்திடவும்
பூராயபிஷேகம் செய்வித்துசுவாமிக்கு
புஷ்பஅலங்காரம் புரிந்தாரடி. 61

அர்ச்சனைதூபதீ பார்த்தனைசெய்யத்தான்
ஆதித்தன்மேற்கினி லஸ்தமித்தான்
விச்சித்ரமான கிரிவலம்வருக
வித்தகன்விஜய மானாரடி. 62

கிரியைவிட்டிரங்கி எரியவன்தீர்த்தமுன்
பெரியவிமானத்துள் ளெழுந்தருளிப்பின்
வருகிறவழிதன்னில் மண்டகபடிகளும்
பெருமைகளாக நடக்குதடி. 63

சட்டயகுருக்களும் பல்லக்கின்மேல்வர
கொட்டுமேளதாளம் மெட்டதிர
பட்டம்பகல்போல மத்தாப்புபந்தந்தீ
வட்டியுடன்மேற்றிசை வாராரடி. 64

வேடர்பரியென்னும் வேதமண்டபத்தும்
ஆடுளையாதவ ராலேசெய்யும்
வேடிக்கைசதுர் நடந்திடும்போதங்கோர்
விந்தைநடக்குது பாருங்கடி. 65

திருடர்கள்போலவே வேடரூபங்கொண்டு
சிவன்படையார்களும் விருதுங்கொண்டு
பரமன்நகைகளைப் பறித்ததுபோலவும்
பாவனைகாட்டுரார் பாருங்கடி. 66

அந்தத்தலம்விட்டு கௌதமாசிர்மம்
வந்துதிபார்த்தனை தந்தனர்தம்
சந்தோஷமாகவே பாரதிஅண்ணாமலை
சந்நிசேவைக ளாகுதடி. 67

அன்னநைவேத்தியம் பானகம்சுண்டலும்
அற்புதமாகவினோதம் செய்தும்
உன்னதமாகவே சன்னஉடனுடன்
ஊரில்உல்லாசமாய் வாராரடி. 6

பண்டாரத்தாரிட மண்டகபடியையும்
தண்டியதாகவே கொண்டெவரும்
விண்டலம்புகழ் ஈசான்யபூசைகொண்டு
நன்றருணைவீதியிற் சென்றாரடி. 6

திருவாலயத்தினில் கிரிராஜமருகனும்
மருவும்பள்ளியறை யருகில்வரவும்
கருணைபுரிகின்ற திரிபுரசுந்தரி
கதவைத்திருக்காப்பு மிட்டாளடி. 7

மைவிருபுமையாள் உள்ளறையில்நிற்க
தெய்வசகாயமும் வெளியில்சொக்க
சைவஒதுவாரும் சாஸ்திரபுஸ்தகம்
சாற்றும்கதைதனைக் கேளுங்கடி. 7

திருடர்களாலே பரியீர்ந்தகையின்றி
மறுபடிக்கேயதைத் தக்தாலன்றி
ஒருதிருடில்லாமல் கதவைத்திறப்பேனென்
றுமையவன்சொன்னதாய்ப் படித்தாரடி. 7

கிண்ணிபிலக்ஷஎடுத் தன்பாகநாகின்று
வண்ணநகைகளைத் தாரேனென்று
அண்ணலொப்பிக்கொண்ட தாகவேசாஸ்திர
வண்ணம்படிப்பதைக் கேளுங்கடி.

இவ்விதமாகவே ஆகமமானபின்
செவ்வைக்கதவைத் திறந்திடமுன்
ஒவ்வியசுவாமிக்கும் அம்மனுக்குமிக
திவ்வியபூஜை நடந்ததடி. 7

மறுதினமிரவினில் மாசந்திரசேகரர்
வருகிறார்பண்டாரி மண்டபத்திலவர்

கிரமமதாகவே கின்னரிபிகைக்ஷயென்று
திருவிழாவாகுது பாருங்கடி. 75

கின்னமேர்கிபிகைக்ஷ கேட்கவுமச்சனி
எண்ணிகைகைகளைத் தரவுமினி
கண்ணேஉன்கைகைகளைக் கடுகிற்றந்தேன்பாரென்
றுண்ணுமுலைக்குமே தந்தாரடி. 76

சனியன்மாய்கையிது தாறுகும்அறி
இனிவானனஎன்கண்ணே நீயுந்தெரி
தனிகநாராயண சாமிபார்த்ததாலே
மனக்கிலேசமின்றி மகிழ்ந்தாரடி. 77

கண்டுமேஅம்மனும் களித்துதீர்க்கமாய்
தெண்டனிட்டேவாங்கிக் கொண்டவளாய்
அண்டையில்வந்துமே ஆதியைத்தொழுது
கொண்டேஉட்சென்றனள் பாருங்கடி. 78

இப்படியாகவே எந்தஆண்டுதோறும்
ஒப்பிலாத்திரு வண்ணாமலையாரும்
அப்பன்திருஊட லாடியஉற்சவம்
செப்புமபுகழ்தனைப் பாருங்கடி. 79

இந்தசரித்திரம் படிப்பவர்கேட்பவர்
சந்தோஷங்களுற்று தான்வாழி
சுந்தரமாகக்கோ விந்தக்கவிராயன்
மைந்தன்வெங்கடேசன் வாழிவாழி. 80

அலங்காரக் கும்மிப்பாடல்.

முற்றிற்று.

உ

சிவமயம்.

# அட்டவணை.


| சருக்கம். | | பக்கம். |
|---|---|---|
| 1-வது | கதையின்வரலாறு | 14 |
| 2-வது | தருமன் பிரதாபம் | 15 |
| 3-வது | சனிபகவான் பிரதாபம் | 20 |
| 4-வது | ஸ்ரீ சிவபிரானுக்கும் சனிபக வானுக்கும் சம்பாஷணை | 23 |
| 5-வது | ஷை பார்வதி சம்வாதம் | 31 |
| 6-வது | கோபுரதரிசன மகிமை | 40 |
| 7-வது | ஸ்ரீசிவபிரான் திருவூடல் | 41 |
| 8-வது | சுந்தரமூர்த்திநாயனார் 1-வது தூது | 44 |
| 9-வது | ஷை 2-வது தூது | 48 |
| 10-வது | ஷை 3-வது தூது | 61 |
| 11-வது | அம்மன் பிணக்கம் | 62 |
| 12-வது | ஸ்ரீ சிவபிரான் மறைதல் | 65 |
| 13-வது | ஷை பஞ்சதீர்த்த மடைதல் | 67 |
| 14-வது | ஷை மகிடாரூபங் கொள்ளல் | 69 |
| 15-வது | ஷை வேடுவரால் அன்புறல் | 71 |
| 16-வது | ஞானமூடன் மோக்ஷம் | 74 |
| 17-வது | நாரதர் ஆக்ஷி | 79 |
| 18-வது | அம்மன்பள்ளியறை திருக்காப்பு | 84 |
| 19-வது | ஸ்ரீசிவபிரான் பிக்ஷாடனசேர்வை | 95 |
| 20-வது | ஷை திருக்கோலம் | 97 |
| | திருவூடல் அலங்காரக் கும்மி | 99 |